Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 23 புதன்கிழமை (05.02.2014) பக்கங்கள் 20 ஓசை - 127

## இந்திய -இலங்கை மீனவர்களின் இரண்டாம் கட்ட பேச்சு கொழும்பில்

(கொழும்பு)

இலங்கை-இந்திய மீனவர்களுக்கு இடையிலான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் நடைபெறவுள்ளதாக தமிழக முதல்வர் கூறியுள்ளார்.

தமிழக சட்டசபையில் வைத்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தமிழகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது இரண்டு தரப்பினருக்கும் இடையில் இணக்கங்கள் ஏற்பட்டுள்ளன

தமிழக மீனவர்கள், தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தாமல் இருத்தல் மற்றும் இழுவைப்படகுகளை பயன்படுத்தாமல் இருத்தல் போன்ற கட்டுப்பாடுகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 30 நாட்களுக்கு நடைமுறைக்குள் வரவுள்ளன.

இந்த நிபந்தனைகளை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# அமைதியை விரும்பாதவர்களே போர்க்குற்றம் சுமத்துகின்றனர்

## சுதந்திரதின உரையில் ஜனாதிபதி



(கொழும்பு)

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன. சமாதானத்தை தெற்கு மக்கள் மட்டுமல்ல வடக்கு மக்களும் அனுபவித்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுகளை முன்வைக்க முயற்சிக்கின்றனர். அவ்வாறு முயற்சிப் போர் சமாதானத்தை விரும்பாதவர்கள் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

66ஆவது சுதந்திரதினத்தின் பிரதான வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்ட

19 ஆம் பக்கம் பார்க்க

10



நாடகங்கள்

18



டாக்டர் பட்டம்

# தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை

## உண்மையை ஏற்றுக்கொள்கிறார் முதலமைச்சர்



(வவுனியா)

கடந்த தேர்தல்களில் மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி அதனூடாக மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் எம்மில் பலர் வழங்கிய வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றுக்கும் மாகாணசபைக்கும் தெரிவாகிய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீதே முதலமைச்சர் விக்னேஸ்வரன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த தேர்தலுக்காக எம்மில் பலர் வேலை செய்கின்றனரே தவிர, கடந்த தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றனரா என்பது சந்தேகமாக உள்ளதென வடமாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா நகரசபையில் அமைய அடிப்படையில் பணியாற்றிய அட்டவணைப்படுத்தப்படாத பதவி அணியினருக்கு நிரந்தர நியமனங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் 10 சாரதிகள், 5 வேலைப்பகுதி தொழிலாளர்கள், 28 சுகாதாரத் தொழிலாளர்கள்,

19 ஆம் பக்கம் பார்க்க

## பொருளாதாரத்தடை போடும் நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லை



(கொழும்பு)

இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுப்பதோ அல்லது அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிப்பதோ அமெரிக்காவின் நோக்கம் அல்ல என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிஇராஜாங்க செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு பிரித்தானியாவுக்குச் சென்ற பிஸ்வால் அங்கு பிரித்தானியாவின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய விடயங்களுக்கான இராஜாங்க அமைசசருடன் இலங்கை விவகாரம் குறித்து மிக விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டிக்கிறார்.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## பன்னாட்டு கடற்படையினருக்கு திருமலையில் கடற்படைப் பயிற்சி

வெளிநாடுகளைச் சேர்ந்த கடற்படையினருக்கு இலங்கை கடற்படையினர் திருகோணமலையில் பயிற்சி வழங்கி வருகின்றனர். ஐந்து நாடுகளைச் சேர்ந்த 16 வெளிநாட்டு படைவீரர்கள் இவ்வாறு பயிற்சி பெற்றுக்கொள்கின்றனர். இந்த விசேட பயிற்சி மூன்று மாதங்களுக்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான், சீனா, மாலைதீவு, பங்களாதேஷ் மற்றும் சூடான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைவீரர்கள் இவ்வாறு பயிற்சி பெற்றுக்கொண்டு வருகின்றனர். இந்த விசேட பயிற்சியில் எட்டு இலங்கைக் கடற்படை உத்தியோகத்தர்களும் பங்கேற்றுள்ளனர்.

## இந்திய வீடமைப்புத்திட்டம் நிர்மாணப் பணிகளில் திருப்தி

### இந்திய அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

வடக்கு,கிழக்கில் வீடற்றவர்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் வீடுகளை, திருத்திக்கொடுத்தல் ஆகிய பணிகள் தொடர்பில் திருப்திகொள்வதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை இலங்கையில் 10ஆயிரத்து 250 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்று இந்திய நிதியமைச்சர், பா.சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.

27 ஆயிரத்து 750 வீடுகளை இந்த வருடத்தில் அமைப்பதற்காக நிதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே ஐயாயிரம் வீடுகள் திருத்தப்பட்டுள்ளன. 6 ஆயிரம் வீடுகள் முகவர்களின் ஊடாக அமைக்கப்படவுள்ளன.

இதில் 4 ஆயிரம் வீடுகள் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இந்திய வம்சாவழியினருக்காக அமைக்கப்படவுள்ளன என்றும் சிதம்பரம் கூறியுள்ளார்.

## ஒட்டுசுட்டானில் தனிப்பிரதேசசபை

### உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் உப சபையாக இயங்குகின்ற ஒட்டுசுட்டான் பிரதேசத்தை தனிப் பிரதேச சபையாக மாற்றுவதற்காக உள்ளூராட்சி அமைச்சிற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் பிரேரணை நிறைவேற்றிய கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும தெரிவித்துள்ளதாவது,

19 ஆம் பக்கம் பார்க்க

## தீவக அபிவிருத்தி தொடர்பாக பொதுமக்களுடன் சந்திப்பு



ஊர்காவற்துறை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்களுடனான கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி. குகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊர்காவற்துறை அலுவலகத்தில் நேற்று மேற்படி சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது தீவகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றியும், தீவகமக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதுடன் தீவகத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

# கண்ணிவெடிகளின் சவால்களைத் தாண்டியே இத்தாவில் மீள்குடியேற்றம் இடம்பெற்றது

## - நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு -



(பளை)

இத்தாவில் மீள்குடியேற்றம் என்பது மிகவும் சவால்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து நாம் இந்தப் பிரதேசங்களின் உட்கட்டுமானங்களையும் படிப்படியாக மேற்கொண்டோம். இங்கு கண்ணிவெடி அகற்றியவர்கள் இந்தப் பிரதேசத்தின் மீள்குடியேற்றத்திற்காக தங்களை தியாகம் செய்து அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளனர் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி பளை இத்தாவில் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

முகமாலை பிரதேசங்களில் தற்போது இடம்பெற்று வருகின்ற கண்ணிவெடி அகற்றும் பணி நிறைவு பெற்று அங்கு மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்படும் போது முழுமையான மீள்குடியேற்றம் இடம்பெற்ற மாவட்டமாக கிளிநொச்சி காணப்படும்.

இந்த மாவட்டத்தில் தொடர்ந்தும் நாம் பிரதேசங்களின் உட்கட்டுமானங்களிலும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் உழைத்து வருகின்றோம்.

சதாபுரம் விளையாட்டுக்கழகத்திற்கு சீருடை மற்றும் உபகரணங்களுக்காக 75 ஆயிரம் ரூபாவினை தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கித் தரப்படும் எனவும் தெரிவித்தார்.

வேம்பொடுகேணி பாடசாலை அதிபர் சண்முகதாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பளை பிரதேச செயலர் திருமதி ஜெயராணி, பிரதேச சபை உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், இராசதுரை, பளை பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் தியாகராசா, கிராம அலுவலர் வள்ளிபுரம், சமூக சேவையாளர் தர்மலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் [illegible]க்கண்டு, மாதர் சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. பின்வருவோர் 2014 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத்தினர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் மு.வேலாயுதபிள்ளை, உப தலைவர்கள் கே.ஞானகாந்தன், அபா.சந்திரநாதன், திருமதி ச.செல்வராணி, என்.சசிகுமார், ஆ.சத்தியமூர்த்தி, அ.பஞ்சலிங்கம், சி.ஜெயக்குமார், செயலாளர் எஸ்.ராஜ், உப செயலாளர் எஸ்.செந்தில்குமரன், பொருளாளர் வி.தயாபரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக 15 பேர் தெரிவுசெய்யப்பட்டதுடன் கணக்காய்வாளர்களாக நா.நவரத்தினராசா, செ.செல்வரஞ்சன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டார்கள். (63)

# பறிபோனது பணப்பை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மதவடி ஒழுங்கையில் சைக்கிளில் வந்த பெண்ணிடம் இருந்த பணப்பை மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களினால் பறித்து செல்லப்பட்ட சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் குறிப்பிட்ட இளம் பெண் தனது பணப்பையை சைக்கிளின் முன் கூடையில் வைத்துக்கொண்டு வந்துள்ளார். பின்தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிள் இளைஞர்கள் சைக்கிள் கூடையில் இருந்த பணப்பையை எடுத்துக்கொண்டு தப்பி ஓடியுள்ளார்கள்.

பணப்பையில் ஒரு தொகை பணம் மற்றும் தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை சாரதி அனுமதிப் பத்திரம் என்பன இருந்ததாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பிரஸ்தாப பெண்ணால் முறையிடப்பட்டுள்ளது. (63)


# நிர்வாகசபைக் கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

புதிய அங்கத்தவர்களை அங்கீகரித்தல், வருடாந்தப் பொதுக் கூட்டம் நடத்துவது தொடர்பாக ஆராய்தல், காந்திய சிந்தனை கற்கைநெறி பற்றிய கலந்தாய்வு மற்றும் ஏனைய விடயங்கள் இதில் ஆராயப்படவுள்ளன.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து காந்திய நிலையக் குழுவின் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.





ஆனைக்கோட்டையில் இயங்கும் மயிலிட்டி றோ.க.த.க பாடசலையில் இளைஞர் கழகத்தினரால் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியினை முன்னிட்டு நேற்று சிரமதானம் நடைபெற்றது. பாடசாலையின் சுற்றுப்புறம் முழுவதும் சிரமதானப் பணி மூலம் அழகுபடுத்தப்பட்டது. இளைஞர் கழக உறுப்பினர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இதில் கலந்துகொண்டனர். (114)

# சங்கானை வர்த்தகர்கள் 25 பேர் மீது சட்ட நடவடிக்கை

காலாவதியான பொருட்கள், சுட்டுத் துண்டு (லேபள்) இல்லாத பொருட்கள், நிறுவனத்தின் பெயர் இல்லாத பொருட்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சங்கானையிலுள்ள 25 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என சங்கானை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ரி.மோகனகுமார் நேற்று தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் உணவு மருந்து கட்டுப்பாட்டு திணைக்களத்தின் பணிப்புரைக்கு அமைவாக சங்கானை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுகள் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வியாபார நிலையங்களில் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

சங்கானைப் பிரதேசத்திலிருந்த 60 வியாபார நிலையங்களில் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் திங்கட்கிழமை வரை சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் மேற்குறித்த குற்றச்சாட்டில் 25 வர்த்தகர்கள் பிடிக்கப்பட்டு, அவர்களிடமிருந்து பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இந்த வர்த்தகர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. பொதுமக்கள் தமக்கு வேண்டிய பொருட்களை கடைகளில் கொள்வனவு செய்யும்போது உற்பத்தி திகதி, முடிவடையும் திகதி, உற்பத்தி செய்த நிறுவனத்தின் பெயர், சுட்டுத்துண்டு (லேபள்) ஆகியன உரியமுறையில் உள்ளனவா என்பதை அவதானித்து வாங்க வேண்டும்.

யாழ். சங்கானை சந்தையில் பொருத்தப்பட்டுள்ள குடிநீர் தாங்கியிலிருந்து வரும் நீர் பொது மக்களின் குடிநீர் பாவனைக்கு உகந்ததல்ல என்றார்.


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1031

திகதி 03.02.2014

வெற்றி எண்கள் 13 15 41 54

ஆங்கில எழுத்து N

ஜக்[illegible] பரிசு ரூ. 2,10,07,080/= வெல்லப்படவில்லை

| அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,10,07,080/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 4,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 268 | 1,000/= | ரூ. 2,68,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 500 | 1,000/= | ரூ. 5,00,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11861 | 60/= | ரூ. 7,11,660/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | .6366 | 40/= | ரூ. 2,54,640/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155342 | 20/= | ரூ. 31,06,840/= |
| ஆங்கில எழுத்து | 22518 | 20/= | ரூ. 4,50,360/= |
| | | மொத்தம் ரூ. | 77,41,500/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
| --- | --- |
| கொழும்பு | 605690057-2-12 |
| கொழும்பு | 605694148-6-16 |
| கொழும்பு | 605695628-3-23 |
| அம்பாறை | 605682231-5-05 |
| ஹம்பாந்தொட்டை | 605685014-6-16 |
| மட்டக்களப்பு | 605692304-7-47 |
| நுவரெலியா | 605684369-2-32 |
| காலி | 605687190-1-41 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 81,41,500/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 21,311,460/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.02.06 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3338)


# வைத்தியசாலை ஊழியரின் துவிச்சக்கர வண்டி மாயம்.

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியொன்று காணாமற்போயுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர் ஒருவரது துவிச்சக்கர வண்டி ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே காணாமற்போயுள்ளது.

நேற்று முற்பகல் குறித்த ஊழியர் தமது துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டுச் சென்ற இடத்திற்கு வந்து பார்த்தபோது அது காணாமற்போயிருந்ததை அடுத்து இவ்விடயம் குறித்து வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவேயும் இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகள் பல களவுபோயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மஹாத்மா காந்தி புலமைப் பரிசில்

# வடக்கில் 36 மாணவர்கள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மஹாத்மா காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 36 மாணவர்கள் 2013 - 2015 காலப்பகுதிக்கான மஹாத்மா காந்தி புலமைப் பரிசிலைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, வவுனியா மத்திய மகா வித்தியாலயம், ரம்பைக்குளம் மகளிர் மத்திய மகா வித்தியாலயம், சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, தமிழ் மத்திய மகாவித்தியாலயம், விபுலானந்தக் கல்லூரி, தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, புனித சேவியர் ஆண்கள்' கல்லூரி, முசலி மகா வித்தியாலயம், வங்காலை புனித ஆன் மத்தியமகா வித்தியாலயம்.

கல்வியமைச்சின் ஏற்பாட்டில் 150 திறமைசாலி மாணவர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதியன்று கல்வியமைச்சர் பந்துலகுணவர்த்தன, இலங்கைக்கான இந்தியத்தூதுவர் வை.கே. சின்ஹா ஆகியோர் முன்னிலையில் மஹாத்மாகாந்தி புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தில் கல்வியமைச் சின் உயரதிகாரிகள், பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கலந்து கொண்டனர்.

2006 முதல் வழங்கப்படும் மஹாத்மாகாந்தி புலமைப் பரிசில் வழங்கல் இம்முறை 7ஆவது தடவையாகவும் வழங்கப்பட்டது.

இந்த 150 மாணவர்களும் திறமை மற்றும் தேவை அடிப்படையில் 25 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப் புலமைப் பரிசிலின் பகுதியாக மாதாந்தம் ரூபா 2000 என்ற அடிப்படையில் ஒவ்வொரு மாணவருக்கும் தமது உயர்தரக்கல்வியை பூர்த்திசெய்வதற்காக ரூபா 48,000 இரண்டுவருடங்களில் வழங்கப்படும்.

# இளைஞர் கழக சம்மேளனத்தின் "இளைஞன்" மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)



இம் மலர் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2ஆவது இளைஞர் மாநாட்டில் வைத்து வெளியிடப்பட்டது.

நிகழ்வின் பிரதம விருந்தினரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சீ.வீ.விக்கினேஸ்வரன் இம் மலரை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை 'கல்விக் காருண்யன் 'மனித் நேய ஈகையாளன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக் கொண்டார்.

வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன செயற்றிட்டங்களைப் பதிவிடுவதும் பிரதேச இளைஞர் யுவதிகளின் ஆக்கங்களிற்கு களம் அமைக்கும் விதமாக இம் மலர் உருவாக்கப்பட்டுள்ளதாக நூலாசிரியர் எஸ்.பங்கையாசினி தெரிவித்தார்.

இம் மலரில் கடந்தகால வலி.தென் மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளன நிர்வாகிகள், இளைஞர்களின் ஆக்கங்கள் என்பவற்றை தாங்கி வெளிவந்துள்ளது.

பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் நூலொன்றினை வெளியிடுவது முதற்தடவையாகும். தொடர்ந்து வரும் காலங்களில் இம் மலர் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(48)

# மகளிர் குடியேற்றத் திட்டம் தெல்லிப்பளையில் ஆரம்பம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஏற்பாட்டில் "துர்க்காதேவி மகளிர் குடியேற்றத்திட்டம்" என்ற பெயரில் தெல்லிப்பளையில் அமைக்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டது. மேற்படி துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் தங்கியிருந்து திருமணமான 10 பெண்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிதியிலிருந்து தலா 500,000 ரூபா பெறுமதியில் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்காக தெல்லிப்பளையைச் சேர்ந்த பொன்னையா குடும்பத்தினர் 7 1/2 பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்துள்ளனர். துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன், வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டி வைத்தனர்.

# தொழிற்சாலை பாதுகாப்பு இதுவரை 1706 பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொழிற்சாலை பாதுகாப்பு திணைக்களத்தில் இதுவரை ஆயிரத்து எழுநூற்று ஆறு தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக திணைக்கள புள்ளி விபரங்கள் மூலம் தெரியவருகிறது. மேற்குறித்த எண்ணிக்கையை விட ஒரு மடங்கு அதிகமான தொழிற்சாலைகள் இயங்கி வருகின்ற போதும் அவை இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நூற்று ஐம்பத்து இரண்டு தொழிற்சாலைகளும், தெல்லிப்பளை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் முப்பத்து மூன்று தொழிற்சாலைகளும், வலி.தெற்கு (உடுவில்) பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இருபது தொழிற்சாலைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. வலி. மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பத்துக்கும் குறைவான தொழிற்சாலைகளே பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் கணிசமான தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேசங்களை விட தீவகப் பகுதியில் குறைந்தளவான தொழிற்சாலைகள் இயங்குகின்றபோதும் அவற்றில் அனேகமானவை பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(54)

# ஆட்டோடு சேர்ந்ததுதான் குட்டிக்கும்...




மழயிலே கனமிருந்தால் வழியிலே பயமிருக்கும் என்பார்கள்.

இலங்கை அரசாங்கத்தின் நிலையும் இப்பொழுது அப்படித்தான் உள்ளது. போர்க்குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள் போன்ற விவகாரங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு பெரிய தலையிடியைக் கொடுத்திருக்கின்றன.

இந்த விவகாரங்களை அரசாங்கம் கடக்க முடியாமல் திண்டாடி திணறிக் கொண்டிருக்கிறது. இவற்றுக்கு ஒரு சரியான தீர்வைக் காணாமல் இருக்கும் போது இவை அரசாங்கத்தின் கழுத்தை மேலும் மேலும் இறுக்கிக்கொண்டிருக்கும்.

இந்த விவகாரங்கள் ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்திற்கு எதிராக தீவிரமான சுருக்கு வளையங்களாக இறுகிக்கொண்டிருக்கின்றன.

ஆனால் இந்த நெருக்கடிகளிலிருந்து அரசாங்கம் தன்னை விடுவித்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் நிறையவே இருந்தன; இருக்கின்றன.

இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதற்கான அறிவும் மனநிலையும் அரசாங்கத்திடம் இல்லை. அரசாங்கத்திடம் மட்டுமல்ல, சிங்கள சமூகத்திடமும் இல்லை.

இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கும் இலங்கையில் ஜனநாயகச் சூழலை உருவாக்குவதற்கும் அதிகாரங்களைப் பகிர்வதற்கும் போருக்குப் பின்னர் நல்லதொரு சூழல் உருவாகியிருந்தது. ஆனால் அதனை அரசாங்கமும் பயன்படுத்தவில்லை சிங்கள சமூகமும் பயன்படுத்தவில்லை.

பதிலாக இந்த விவகாரங்களிலிருந்து சாதுரியமாக தப்பித்துக்கொள்வதற்கே இந்த தரப்புகள் முயற்சிக்கின்றன. இது நீதியின்மையாகும்.

போருக்குப்பின்னர் உருவாகிய சூழலில் தீர்வுகாண வேண்டிய விடயங்களுக்கு தீர்வு கண்டிருந்தால் – சமூகங்களுக்கிடையிலான நீதியை நிலைநாட்டியிருந்தால் இன்று சர்வதேச சமூகத்தைக் கண்டு அச்சமடையத் தேவையில்லை.

அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் மனித உரிமை அமைப்புக்களும், சனல்4 போன்ற சர்வதேச ஊடகங்களும் இலங்கையை மிரட்டிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிராது.

இதெல்லாம் மிக எளிய உண்மைகள். இவற்றைப் புரிந்துகொள்வதற்கு அதிக சிரமம் எடுக்கவேண்டியதில்லை.

இங்கே பிரச்சினையாக இருப்பது என்னவென்றால், அதிகார மமதையும், இன ரீதியான குறுகிய சிந்தனையுமே. இந்த இரண்டும் ஒருபோதும் எந்த விடயத்தையும் முற்போக்காக சிந்திப்பதற்கு இடமளிக்காது.

இதுதான் இலங்கையின் துயரம். இதுதான் இலங்கையின் அவலமும் கூட.

போர் முடிந்த பின்னரான நான்கு ஆண்டு காலத்திலும் அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை உருவாக்கியிருக்க வேண்டும். ஆனால் இலங்கையில் நடந்திருப்பதோ வேறு. நடந்துகொண்டிருப்பதும் வேறு.

இனக்குரோதமும் நம்பிக்கையீனங்களும் அதிகாரப்பிரயோகங்களும் சிறுபான்மை இன சமூகங்களிடையே பலத்த கேள்விகளை உருவாக்கியுள்ளன. சமூகங்களுக்கிடையிலான இடைவெளிகளும் அதிகரித்திருக்கிறது.

இதனால் ஒவ்வொரு சமூகமும் இன ரீதியாக ஒவ்வொரு விதமாக சிந்திக்கின்றன. இந்த நில்லையைப் பயன்படுத்தியே வெளிச்சக்திகள் இலங்கையின் உள்ளே தலையீடுகளைச் செய்ய முயற்சிக்கின்றன.

1980களில் இத்தகைய ஒரு நிலை இலங்கையில் இருந்தது. சிறுபான்மைச் சமூகங்களை நியாயமாக நடத்துவதற்கு அன்றைய ஜேஆர் அரசாங்கம் விரும்பவில்லை. இதனைப் பயன்படுத்தி இந்தியா இலங்கையில் தலையிட்டது.

அதாவது சிறுபான்மைச் சமூகங்களை அரவணைக்க விரும்பாத ஜேஆர் இந்தியாவின் காலில் பணிந்தது. அப்பொழுது ஜேஆர் அரசு மட்டுமல்ல சிங்களச் சமூகமும் சிறுபான்மை மக்களைப் பொருட்படுத்தாமலே இருந்தது.

இதைப்போன்ற ஒரு நிலையே இன்றும் உள்ளது.

அயலானை நேசிக்கத்தெரியாமல் விட்டுவிட்டு, அடுத்தவனுக்கு பயந்துகொண்டிருக்கும் நிலை.

இதை எப்படித்தான் விளங்கவைப்பது?

ஆனால் இங்கே உள்ள கொடுமையான வேதனை என்னவென்றால், இலங்கையின் மீது மேற்கொள்ளப்படுகின்ற எத்தகைய அழுத்தங்களும் – இலங்கையின் உள்ளே செய்யப்படுகின்ற எந்தவிதமான தலையீடுகளும் எல்லோரையுமே பாதிக்கும். அது தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்று வேறுபாடுகளின் அடிப்படையில் அமையாது.

சிங்களச் சமூகமும் அரசும் விடுகின்ற பெருந்தவறுகள் ஒட்டுமொத்த இலங்கையையே பாதிக்கின்றது. ஆட்டோடு சேர்ந்ததுதான் குட்டிக்கும் என்பார்கள்.

இலங்கையின் அமைதியற்ற நிலைக்கு சிங்களவரோடு சேர்ந்து தமிழ்த்தரப்பிற்கும் பொறுப்புகள் உண்டு. அதையும் இங்கே கணக்கெடுக்க வேண்டும்.

உண்மையாக நடந்துவரும் மனிதனுக்கு எந்த உபதேசமும் தேவையில்லை. - வாரியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## குரூர 'ஞாயங்களும்' நாமும்!

நேற்று பெப்ரவரி 4–ஆம் திகதி, உலக புற்றுநோய் தினமும் கூட. இலங்கையின் சுதந்திர தினமாகக் கொண்டாடப்படும் நாள்தான் உலக புற்றுநோய் தினமாகவும் அனுசரிக்கப்படுகிறது என்பது ஒருவகையில் விநோதமானதுதான்.

இந்த நாட்டின் இனப்பிரச்சினை என்பதும் ஏதோ புற்றுநோய் போலவே தீர்க்க முடியாத வியாதியாகத் தொடர்வது வேதனையளிக்கவே செய்கிறது. இதற்கான விழிப்புணர்வை நாம் ஏற்படுத்திக் கொள்வதற்கான தினமோ வாரமோ இன்னும் கைகூடவில்லை.

"விவேகமிக்க மனிதர்கள் நிச்சயமாகப் போரைத் தவிர்ப்பர்" என்பது கிரேக்கப் பொன்மொழி. இந்த விவேகம் இன்னும் கைகூடாத சண்டித்தன வக்கிரங்களின் பழிதீர்ப்பு மிச்சங்களே இன்னும் இங்கே ஒலித்தபடி உள்ளன.

போர் முடிந்ததில் நிம்மதியுறாமல், மேலும் சண்டைநிலையைத் தக்கவைத்துக் கொள்ள என்னவெல்லாம் பேசமுடியுமோ அந்த விரோத வசனங்களே அரசியல் பேச்சாகத் தொடர்கிறது.

காரணம், இத்தகைய பேச்சுக்களே இரு தரப்பிலும் வாக்குகளை அள்ளித் தருவதாக இருக்கிறது. ருசிகண்ட பூனைகள் சுற்றிச் சுற்றி அதே அடுப்பங்கரையையே வலம் வருகின்றன.

மக்கள் எதிர்த்தரப்பை நினைத்து எந்நேரமும் விரோத – பயத்துடன் இருப்பதும், இடைவிடாமல் அவலங்களைச் சுமப்பதும்தான் அவர்களை ஆவேச நிலைக்குத் தள்ளும்; வற்றாத இந்த எதிர்ப்புணர்ச்சிதான், வாக்குகளை அள்ளித் தரும் என்று இதுகாலவரை செயற்பட்ட விதத்தின் மாற்றமெதுவுமில்லாத நிலைதான் இப்போதும்.

இதற்காக அவர்களுக்கு எதிர்த்தரப்பிலுள்ள தீவிரவாதமும், விரோத மனப்பாங்கும் நலிவுற்றுவிடாமல், அவற்றைத் தூண்டி வரவேற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மக்கள் வாழ்வு சிதைந்துகொண்டிருப்பது பற்றி எந்த வெட்க உணர்வும் கிடையாதவர்களே தலைவர்களாகவும் வலம் வரும் விநோதமான சமூகமாக நாமிருக்கிறோம்! மக்களை நிம்மதியாக வாழவைக்க – சமூகத்தின் சீரழிவுப் பயணத்தை நிறுத்த எப்படி, யாருடன், என்ன பேச வேண்டும் என்பது தெரிந்தாலும் அது நடைபெறுவதில்லை. ஏன்?

வெளிநாடுகளின் நிகழ்ச்சிநிரலில் எங்களுக்கான விடிவும் இருக்கும் என்பதற்கு மேல் நம்மில் பெரும்பாலானோரால் சிந்திக்கவே முடியவில்லை. அல்லது அரசியல் தலைவர்களும் ஊடகங்களும் சிந்திக்க விடுகிறார்களாயில்லை.

வெளிநாடுகளுக்கும் எங்களது பிரச்சினைகள் உண்மைத் தன்மையுடன் யதார்த்தத் தளத்தில் விளக்கப்படுவதில்லை. பேனைப் பெருமாளாக்கும் நமது மிகைப்படுத்தல் ஓலங்களையெல்லாம் அவர்களும் நம்புகிறார்கள் என்று பாமரத்தனமாக நினைக்கிறோம்.

அவர்கள் தங்கள் தேவைகளுக்காக அனுதாபம் காட்டுவதையும் அரசை மிரட்டப் பிரேரணைகள் நிறைவேற்றுவதையும் எங்களது விடிவுகாலத்துக்கு அறிகுறிகளாக காட்டி ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களிடம் மக்களாகிய நாம் ஏமாந்துகொண்டிருக்கிறோம்.

இங்கு நல்லிணக்க சூழல் உருவாவதன் தேவையை எதிர்த்தரப்பு உணர்ந்துகொள்ளவில்லை என்றால் மறுதரப்புக்கும் அது தேவையில்லை, நாமும் அதைக் குழப்புவோம் என்ற மூர்க்கனின் முட்டாள்தன வீரமே நமக்கு நியாயமாகக் காட்டப்படுகிறது.

இருபத்தோராம் நூற்றாண்டிலும் நமது சிந்தனை இன்னும் இதுபோலவே இருக்கிறது. இன மொழி தேச ரோசங்களுக்காகச் சாகவும் சாகடிக்கவும் தயாராக இருக்கும் தலைவர்களிடமும் ஊடகங்களிடமும் ஒளிந்திருக்கும் இந்த 'குரூர ஞாயங்களை' விளங்கிக் கொள்வதே, மக்களும் சமூகமும் காப்பாற்றப்படுவதற்கான முதற்படி.

– ஆசிரியர்

# நாட்டை பிரிவினைக்கு உட்படுத்த ஜெனிவா பேரவை முயற்சி

## அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனை படுகொலை செய்த குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டனையை வழங்க முடியாத ஜெனிவா பேரவை இன்று மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி நாட்டை மீண்டும் பிரிவினைப் பாதையில் இட்டுச்செல்ல முயற்சிப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள இலவசக் கல்வித்திட்டத்தினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகவும் வெற்றிகரமாக முனனெடுத்து வருகிறார்.

இக்கல்வித் திட்டத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பிரிவினைவாதம் எதுவும் காணப்படவில்லை. கல்வித் திட்டத்தில் சகல இனங்களுக்கும சம உரிமை வழங்கப்பட்டு வருகிறது.

அது மாத்திரமின்றி நாட்டின் அனைத்து இனங்களும் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ வேண்டும் அதற்காக எமது எதிர்காலச் சந்ததியினரை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்ற பிரதான நோக்கம் இங்கு கொள்ளப்பட்டிருக்கின்றது. இதனைக் கருத்திற் கொண்டு தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றார். அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். அதில் ஒரு பகுதிதான் 1000 பாடசாலை அபிவிருத்தித் திட்டமாகும்.

1000 பாடசாலை திட்டத்தின் மூலம் நகர்ப்புறப் பாடசாலைகளைப் போன்று கிராமப்புற பாடசாலைகளும் புதிய கல்வித்திட்டத்திற்கமைய முன்னெடுத்துச் செல்லப்படும்.

இது இவ்வாறிருக்க இன்று ஜெனிவா பிரச்சினை ஒன்று தலைதூக்கியுள்ளது. ஜெனிவா பேரவை எமது அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரி. மகேஸ்வரன் தேங்காய் உடைத்து தெய்வ தரிசனத்துக்காகவே கோவிலுக்குச் சென்றார். ஆனால் அவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

தெய்வ தரிசனத்துக்காக கோவிலுக்குச் சென்ற மகேஸ்வரனைப் படுகொலை செய்தவர்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்க முடியாத ஜெனிவா பேரவை எமது அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது. ஜெனிவாவின் இத்தகைய போக்கு நாட்டை மீண்டும் ஒரு பிரிவினை வாதத்துக்கு இட்டுச் செல்கின்றது என்றார்.

# ஆசிய மனிதஉரிமை ஆணைக்குழு ஊடகவியலாளரின் கொலைக்கு கண்டனம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் மெல் குணசேகரவின் கொலைக்கு ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கண்டனம் வெளியிட்டுள்ளது.

வீட்டிலிருந்த போது மெல் படுகொலை செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் திட்டமிட்ட படுகொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் இவ்வாறான குற்றச் செயல்கள் பதிவாகின்றன.

கொலை செய்வதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இருக்கின்றனர். எதிரிகள் இவ்வாறானவர்களைப் பயன்படுத்தி இலகுவாக படுகொலைகளைச் செய்ய முடியும். போரின் காரணமாகவே இவ்வாறான கொலையாளிகள் உருவாகியுள்ளனர். இவ்வாறான குற்றச் செயல்கள் தொடரபில் அரசாங்கம் உரிய விசாரணை நடாத்தி குற்றவாளிகளைத் தண்டிப்பதில்லை.

இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெற்றால் அது அரசாங்கத்தின் ஆதரவுடன் இடம்பெறுகின்றது என்றே மக்கள் கருதுகின்றனர்.

இது சரியா, தவறா என்பதனை விடவும் இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறுவதனை தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது. நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமைகளை சீர்செய்ய அரசாங்கம் கூடுதல் முனைப்பு காட்ட வேண்டுமென ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# இலங்கை பற்றி பேசுவதற்கு அமெரிக்காவுக்கு தகுதி இல்லை

## சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பேசுவதற்கு அமெரிக்காவிற்கு தகுதி கிடையாது என ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

உலகின் பாரியளவிலான மனித உரிமை மீறல்களுக்கு அமெரிக்காவே காரணம். மனித உரிமை மீறல்கள் என்ற போர்வையில் அமெரிக்கா, இலங்கை போன்ற சிறிய நாடுகளை துன்புறுத்தி வருகின்றது.

மேற்கு ஆசிய நாடுகளில் அமெரிக்கா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட போதிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவிற்கு எதிராக குரல் கொடுக்கப்படவில்லை மனித உரிமை பாதுகாப்புத்தொடர்பில் அமெரிக்காவின் ஆலோசனை அவசியமில்லை.

எவ்வாறெனினும், நல்லிணக்க முனைப்புக்களில் ராஜபக்ஷ அரசாங்கம் காட்டிய தாமததமே சர்வதேச நாடுகள் தலையீடு செய்வதற்கான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்த நிறைவின் பின்னர் உரிய முனைப்புடன் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் உலக நாடுகள் தலையீடு செய்திருக்காது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மேல்மாகாணசபைத் தேர்தலில் ஊடகவியலாளரும் போட்டி

மேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடுவதற்கு ஊடகவியலாளர் எஸ்.எம் மரிக்கார் வேட்புமனுப் பத்திரத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

அவர் கொழும்பு மாவட்டம் சார்பில் போட்டியிடவுள்ளார்.

சிறிகொத்தாவில் உள்ள கட்சித் தலைமையகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் முன்னிலையில் அவர் கைச்சாத்திட்டுள்ளார். ஊடகவியலாளராக நீண்ட காலம் பணியாற்றிய எஸ்.எம் மரிக்கார், சிரச எப்.எம் அலை வரிசை பிரதானியாகவும், எம். பீ.சீ, எம்ரி.வி. ஊடக வலையமைப்பின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்?

# ஓர் உரையாடல்...

யோகா-ராஜன் கட்டுரையிலிருந்து

**சிறீதரன் எம்.பி, மற்றும் அனந்தி எழிலன் போன்றவர்களின் வெற்றுவேட்டுப் பேச்சுக்களினால் இன்று இல்லாவிட்டாலும் இன்னும் சில மாதங்களிலோ வருடங்களிலோ தீவிரவாதிகள் உருவாகுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு! மற்றது, புலம்பெயர்ந்த தமிழரில் "நாடுகடந்த தமிழர்" மட்டும் ஒரு அமைப்பாக இல்லை. புலம்பெயர்ந்தவர்களில் வன்முறையை ஆதரிக்கின்ற மிகப் பெரும்பான்மையான சமூகம் ஒண்டிருக்கு! அதாவது தோல்வி என்ற மனோவியாதியால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகம்! அது தனக்கு வியாதி ஒண்டிருக்கு என்பதை உணர்கின்ற திறன்களை இழந்த நிலையில்!**



**யோகா:** இன்றைக்கு பரவலாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் முதல் மாற்றுக் கருத்தாளர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுகுத்தோழர் உட்பட மற்றும் மிதவாத அரசியல்காரர்கள் வரை எல்லோருமே ஒருமித்த குரலில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றவேண்டும் அல்லது இராணுவ பிரசன்னத்தைக் குறைக்கவேண்டும் என்றுதான் பேசிக் கொள்கிறார்கள்! ஆனால் இது சார்பாக உங்கள் குரல் வேறொரு தொனியில் ஒலிப்பதை என்னால் உணரமுடிகிறது. அது பற்றி விபரமாகக் கூற முடியுமா?

**ராஜன்:** ஆம்! நிச்சயமாக நான் வேறொரு குரலில்தான் இதை அணுகுகிறேன்! கடந்த 30 ஆண்டு காலப் போராட்டத்தின் விளைவு; ஒரு வன்முறைப்போக்கை தன்னகத்தே கொண்ட ஒரு சமூகமாக, தமிழ்ச் சமூகத்தை பரிணமிக்கச் செய்திருக்கிறது! இவ் வன்முறைப் போக்கில் அல்லது வன்முறைச் சிந்தனை முறையில் இருந்து இச் சமூகம் விடுபடுவதற்கும், தொடர்ந்து ஒரு ஜனநாயகவழிக்குத் திரும்புவதற்கும் ஒரு குறிப்பிட்ட காலம் தேவை. அதில் இருந்துதான் இந்த இராணுவ வெளியேற்றத்தையும் நான் பார்க்கிறேன்!

**யோகா:** தமிழ்ச் சமூகம் ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கும், இராணுவ வெளியேற்றத்துக்கும் இடையில் என்ன விசயத்தைப் பார்க்க முனைகிறீர்கள்? மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுற மாதிரி?

**ராஜன்:** தமிழீழப் போராட்டமானது இராணுவரீதியாக மிகுந்த வலுப்பெற்ற நிலையில்தான் மிக மோசமாகத் தோற்கடிக்கப்பட்டது என்பதை முதலில் நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்! இதன் விளைவாக, பாரிய ஆயுதங்களைக் கையாளக்கூடிய அறிவுள்ள சமூகமாக தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது ஒரு முக்கிய விசயம். அதோடு ஏற்கனவே புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இன்னும் தமிழ்ப் பிரதேசங்களில் இருக்கத்தான் செய்கின்றன!

அதே நேரத்தில், மிகுந்த தோல்வி மனப்பான்மையுடன், மீண்டும் ஒரு யுத்தத்தை எதிர்பார்க்கிற அல்லது மீண்டும் ஒரு யுத்தம் வேண்டும் என நினைக்கிற அடையாளங்களை இழந்து தவிக்கிற தமிழ்ச் சமூகம் ஒன்று மேற்குலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறது! இவர்கள் பேரவாவுடன் இருக்கிறார்கள்... தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்காக மீண்டும் ஒரு யுத்தம் வரணேண்டும் என்று!

இந்தக் கட்டத்தில், புலம்பெயர்ந்த இவர்களின் தூண்டுதலாலோ அன்றி நாட்டில் இருக்கக்கூடிய சில தீவிரவாதக் குழுக்களாலோ இராணுவத்துக்கு எதிரான சிறு தாக்குதலைத்தன்னும் தொடுப்பதற்கான வாய்ப்புகள் இன்னும் இருக்கின்றன. இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளும் இலங்கையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும், ஆளுமைக்குள் வைத்திருக்கும் நோக்கிலும் கூட இலங்கையிலுள்ள சில தமிழ் தீவிரவாத சக்திகளை பயன்படுத்துவதற்கு முயற்சிக்கக்கூடும் என்பதையும் நிராகரித்துவிட முடியாது!

அப்படி ஒரு சிறு தாக்குதல் தன்னும் தொடுக்கப்பட்டால், புனர்வாழ்வில் இருந்து மீண்டு வந்திருக்கும் முன்னாள் போராளிகளை வகை தொகையின்றி அழித்தொழிப்பதற்கு இராணுவம் தயங்கவே மாட்டாது! இதனால் வன்னி மக்கள் மீண்டுமோர் பேரவலத்துக்கு உட்படுவதும் தவிர்க்க முடியாததாகும்!

அதாவது புலம்பெயர் தமிழர்களினதும், தமிழ் தீவிரவாதப் பிரிவினரதும், நலன்களுக்காகச் செயற்படுவதன் மூலம், அதாவது வன்முறையில் ஈடுபடும் சந்தர்ப்பம் வரப்பெற்றால் அங்கு பிரதானமாகக் கொல்லப்பட இருப்பது போரின் அவலங்களை இன்றும் சுமந்துகொண்டிருக்கும் அப்பாவிகளான முன்னாள் போராளிகள்தான் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்! மாஸ்ரர்... சென்ற ஆண்டு (2013) இரு முன்னாள் புலிப்போராளிகளை அவர்களது வாழ்வாதாரப் பிரச்சினை சார்பாக அணுகி உரையாடியபோது; முன்னாள் புலிகளின் உளவுப்பிரிவில் இருந்த ஒருவர் "இங்கு ஏதாவது நடக்குமாக இருந்தால் எங்களைத்தான் சுட்டுத் தள்ளுவாங்கள்" என்று கூறியது உங்களுக்கும் ஞாபகமிருக்கும்! இத்தகையை ஏதுமற்ற போராளிகளைப் பாதுகாப்பதுதான் இன்றைய நிலையில் எமது மனிதாபிமானக் கடமை. அவர்களது வாழ்வின்மீது அக்கறையாக இருக்கவேண்டியது தமிழ்த் தேசியத்தின் கடமையும்கூட!

மேலும், சர்வதேச உளவுப் பிரிவுகள் தமது நலன்களைத் தக்கவைக்கும் பொருட்டு, சில தமிழ்த் தீவிரவாதத் தரப்புக்களை வன்முறையில் ஈடுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு! அந்தவகையில் இராணுவத்தை மீளப்பெறுவது என்பது, தமிழ்ச் சமூகத்தை குறிப்பாக முன்னாள் போராளிகளையும், வன்னிவாழ் மக்களையும் அழித்தொழிப்பதற்கு நாங்களே வழி வகுப்பது போல் ஆகும்!

இது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான்! இதன் அர்த்தம் இராணுவத்தின் இருப்பை தொடர்ச்சியாகப் பேணவேண்டும் என்பதல்ல! இந்நிலையில் விழிப்புடன் இருக்கும் தமிழ் தீவிரவாத வன்முறை சக்திகளின் செயற்பாடுகள்செயலிழக்கும் வரை எமது விருப்பு வெறுப்புக்களையும் மீறி இராணுவத்தின் கண்காணிப்புப் பணி தொடரத்தான் செய்யும்! அதன் பின்பே இராணுவ வெளியேற்றமும் சாத்தியமாகும்!

**யோகா:** தமிழ் தீவிர சக்திகள் ஆயுதமேந்துமளவுக்கு இன்னும் தீவிரவாத எண்ணங்களுடன் இருக்கிறார்களோ என்பதை உறுதிப்படுத்த முடியாமலிருக்கிறது! ஆனால் 2009இல் கடுமையான தாக்குதல்கள் மத்தியில் மக்கள் பேரளவில் உயிரிழப்புக்களைச் சந்தித்துக்கொண்டிருந்த நிலையிலும் ஐரோப்பியத் தமிழ் ஊடகங்களும், புலி ஆதரவாளர்களும் கூட "இறக்கும் மக்களின் தொகை போதியதாக இல்லை! இன்னும் பல் மடங்கில் மக்கள் அழிக்கப்படவேண்டும்" என்ற வக்கிரத் தொனியில் கருத்துக்கள் பகிரப்பட்டதை நினைக்கும்போது, புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றி நீங்கள் கூறுவதில் உண்மையிருப்பதை உணரமுடிகிறது! ஆனாலும் நாடுகடந்த தமிழீழக்காரர்கள் தமது வழி ஜனநாயக வழி என்றுதானே பரப்புரை செய்துகொண்டிருக்கிறார்கள்! அப்படியிருக்க அவர்கள் எப்படி நாட்டில் வன்முறையைத் தூண்ட முடியும் என்று நினைக்கிறீர்கள்?

**ராஜன்:** நீங்கள் கூறுவது சரிதான்! நாட்டில் இன்னும் தீவிரவாதச் சிந்தனையுடன் தமிழர்களில் ஒரு பகுதியினர் இருக்கிறார்கள் என்றுதான் நான் நம்புகிறேன்! அப்படி இன்று இல்லாவிட்டாலும்... சிறீதரன் எம்.பி, மற்றும் அனந்தி எழிலன் போன்றவர்களின் வெற்றுவேட்டுப் பேச்சுக்களினால் இன்னும் சில மாதங்களிலோ வருடங்களிலோ தீவிரவாதிகள் உருவாகுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு!

மற்றது, புலம்பெயர்ந்த தமிழரில் "நாடுகடந்த தமிழர்" மட்டும் ஒரு அமைப்பாக இல்லை. புலம்பெயர்ந்தவர்களில் வன்முறையை ஆதரிக்கின்ற மிகப் பெரும்பான்மையான சமூகம் ஒண்டிருக்கு! அதாவது தோல்வி என்ற மனோவியாதியால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகம்! அது தனக்கு வியாதி ஒண்டிருக்கு என்பதை உணர்கின்ற திறன்களை இழந்த நிலையில்!

மேலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் தாம் இருக்கும் நாடுகளில் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் நோக்கில் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு பேரவாவுடனிருக்கிறார்கள்!

**யோகா:** அதுசரி ராஜன்... இலங்கை இராணுவமே பாசிசப் போக்குடன்தான் இருக்கின்றது என்ற ஒரு கருத்து நிலவுகின்றதே!

**ராஜன்:** ஆம்... யுத்தம் நடைபெற்ற சூழலில் இராணுவம் பாரிய பலத்துடன் சிவில் சமூகத்துக்குரிய கட்டமைப்புக்கள் பலவற்றை தன்னகத்தே கொண்டிருந்தது உண்மைதான்! ஆனால் யுத்தத்துக்குப் பின் உடனடியாக இல்லாவிட்டாலும், பொலிஸ் மற்றும் அரசாங்க அதிபர் என்று சிவில் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் பலவற்றை இராணுவம் மீள ஒப்படைத்திருக்கிறது! 2009இல் இருந்து ராணுவம் அதைப் படிப்படியாக செய்துகொண்டுதானிருக்கிறது!


மேலும் இதை இராணுவமும் ராஜபக்ச அரசும் முகங்கொடுக்கின்ற ஒரு பிரச்சினையாகப் பார்க்கமுடியும்! யுத்தம் முடிந்தபோது மிகப்பலமாக இருந்த இராணுவம், தனது அதிகாரத்தை விட்டு விலகுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் எடுக்கும்! அதை பாசிசம் என்ற அளவுக்கு உயர்த்திப் பார்க்கத் தேவையில்லை!

அத்துடன் இராணுவம் ஒரு கட்டளைக்குக் கீழ் மட்டுமல்லாமல், அரசியலமைப்புச் சட்டத்தை குறிப்பிட்ட அளவுக்கேனும் ஏற்று இயங்குகின்ற அரசயந்திரமாக இருப்பதனால், பாசிசம் எண்டு ஒவ்வொருவரதும் வாழ்க்கையிலும் மூக்கை நுழைக்கின்ற முறையில் உள்ளது என்பதை ஏற்க முடியவில்லை! அதுமட்டுமல்ல, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியே கட்டளைத் தளபதியாகவும் இருக்கின்றார். மேலும் இலங்கை இராணுவம்; ஜனாதிபதியையும், அமைச்சரவையையும், பாராளுமன்றத்தையும், நீதித்துறையையும் ஏற்றே செயற்படுகிறது! இராணுவம் அரசியல் அமைப்பை மதிக்கிறது என்பது, தனது அதிகார எல்லை என்ன என்ற குறிப்பான பிரச்சினையில் மட்டுமே! மாறாக, மனித உரிமைகள் போன்ற ஜனநாயகம் சம்பந்தப்பட்ட விடயங்களில் வழுவி நிற்கிறது என்பதை மறுப்பதற்கில்லை!

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய இலங்கைக்கான எதிர்பார்ப்பு உண்மையாகியுள்ளது

## அமைச்சர் செனவிரத்ன



சகல இனங்களுக்குமிடையில் இணக்கம் சமாதானம் மற்றும் ஒற்றுமை என்பவற்றுக் கூடாக ஐக்கிய இலங்கைக்கான நீண்டகாலமாக காத்திருந்த எதிர்பார்ப்பானது தற்போது உண்மையானதொன்றாக மாறியுள்ளது என அமைச்சர் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்ட செய்தியில்,

ஒரு கொடியின் கீழ் ஒரு நாட்டுக்கான நீண்டு செல்லும் அடித்தளமானது ஏற்கனவே இடப்பட்டுள்ளது. எனினும்- இவ் அடித்தளத்தை அழிப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளினால் சதித்திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதலினால்- 66 ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்படும் இவ் வேளையில் இச் சகல எதிர்ச்சக்திகளையும் தோற்கடிக்க ஒன்றுகூடிப் பணியாற்றுவதற்கு நாம் தீர்மானிக்க வேண்டும். சவால்களுக்கு முகங்கொடுக்காமல் எந்தவொரு முன்னேற்றமும் அடையப்படுவதில்லை.

அத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு சிறந்த தலைமைத்துவம் மற்றும் மக்களின் வலிமை என்பவற்றின் மூலம் நாம் எப்பொழுதும் வலுப்படுத்தப்படுகின்றோம். தமது தாய் நாட்டினை நேசிக்கும் மக்களினால் நாம் என்றும் ஆசீர்வதிக்கப்படுகின்றோம். அவர்கள் அபிவிருத்திக்கான பாதையில் முன்னணி வகிப்பவர்கள்.

தற்போது பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனை வரை தீவு முழுவதும் பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்தியினை உண்மையாக்குவதற்கு பெருமளவான நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆதலினால் எதிர்கால சந்ததியானது சுபீட்சமான நாட்டிற்கான வாரிசாக இருக்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

1948 ஆம் ஆண்டில் காலனித்துவத்திலிருந்து பெற்றுக் கொண்ட சுதந்திரம் மற்றும் 2009 ஆம் ஆண்டில் பயங்கரவாத ஒழிப்பு என்பன எமது வரலாற்றில் பொன்னால் பொறிக்கப்பட்ட திருப்பு முனைகளாகும். 2009 ஆம் ஆண்டிலிருந்து புதிய அத்தியாயத்தின் ஆரம்பத்தினை இலங்கை அடையாளப்படுத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டிலிருந்து கடந்த நான்கு வருட காலப் பகுதியில் பொருளாதார மற்றும் சமுதாய மாற்றம் ஒன்று ஏற்படும் அதேவேளை இலங்கையானது வலுவுற்றுள்ளது.

தெற்காசியாவில் ஒரு முடுக்கிவிடப்பட்ட அபிவிருத்தியினைச் சான்றுப்படுத்தும் நாடொன்றாக இலங்கை தற்போது கருதப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டளவில் பல்வேறுபட்ட துறைகளில் பெருமளவான அபிவிருத்தி இலக்குகளை அடைவதே எமது எதிர்பார்க்கையாகும்.

ஆதலினால் வெற்றிகொள்ளப்பட்ட மொத்த சுதந்திரத்தினையும் வெற்றிப் பெருமையுடன் பாதுகாக்க சகல இலங்கையரும் விழிப்புடன் இருத்தல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

# ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு பலநாடுகள் ஆதரவு வழங்கும்



ஐ.நா மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா சமர்ப்பிக்க உள்ள தீர்மானதற்கு எதிராக பல நாடுகள் இலங்கைகு ஆதரவளிக்கும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானத்தை முறியடிக்க பல நாடுகளின் ஆதரவு திரட்டப்பட்டுள்ளது. வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக பல நாடுகளுக்கு விஜயம் செய்து, ஆதரவு திரட்டியுள்ளேன். சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் குறிதது விளக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் தீர்மானத்தை தோற்கடிக்கும் நோக்கில் இலங்கைக்கு ஆதரவளிக்க சில நாடுகள் ஏற்கனவே உறுதியளித்துள்ளன. சில நாடுகள் அமெரிக்கத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும். இலங்கை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மண்டியிட்டு படைவீரர்களை தூக்குமேடைக்கு அனுப்பி வைக்கத் தயாரில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வேட்பு மனுவில் ஹிருனிகா கைச்சாத்து



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திரவின் புதல்வி ஹிருனிகா பிரேமசந்திர வேட்பு மனுவில் கைச்சாத்திட்டுள்ளார். எதிர்வரும் மேல் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஹிருனிகா பிரேமசந்திர போட்டியிடவுள்ளார்.

ஆளும் கட்சியில் போட்டியிடுவதற்காக ஹிருனிகா விண்ணப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஹிருனிகா அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தார். மத்திய கொழும்பின் இணைத் தொகுதி அமைப்பாளராகவும் ஹிருனிகா நியமிக்கப்பட்டுள்ளார்.

# வேலைக்கமர்த்தப்படுபவர்கள் குறித்து அவதானமாக இருக்க அறிவுறுத்து

(கொழும்பு)

வீடுகளில் பணிபுரிவதற்காக பிற இடங்களிலிருந்து வருகை தருவோர் தொடர்பாக அவதானமாக செயறபடும்படி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

ஊடகவியலாளர் மேல் குணசேகர கொலை தொடர்பில் தகவல் வெளியிடும், செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகன இநத அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

ஊடகவியலாளரை கொலை செய்தவர் தொம்பே பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தார்.



கைது செய்யப்பட்டவர் பண்டிகை காலத்தின் போது, ஊடகவியலாளர் வீட்டில் நிறப் பூச்சு பணிகளுக்காக அமர்த்தப்பட்டவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான வெளியார்கள் தொடர்பில் அவதானத்துடன் செயறபடுவதன் மூலம் அனர்த்தங்களை தவிர்த்துக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் 374 மதமாற்ற அமைப்புக்கள்

(கொழும்பு)

பௌத்த மதத்தில் இருந்து ஏனைய மதங்களுக்கு மாற்றும் நோக்கில் 374 அமைப்புக்கள் நிறுவனப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளதாக பொது பல சேனா, அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கொழும்பு மேல் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

இந்த அமைப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்காக மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர்களின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் அதிகாரிகள் பாதுகாபபு வழங்குகின்றனர். அதற்கு அரசியல்வாதிகளின் அனுசரணை கிடைக்கப்பெறுகின்றது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் திகதி, தலாஹேன அரளிய பிரதேசத்தில் அமைந்துள்ள கல்வாரி தேவஸ்தானம் தாக்கப்பட்டமை தொடர்பில் சட்டமா அதிபரினால் தொடரப்பட்டிருந்த வழக்கு மீதான விசாரணையின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 11 பிரதிவாதிகள், வழக்கின் சாட்சியாளர்களாக பெயரிடப்பட்டுள்ளனர்.

தலாஹேன தேவஸ்தானம் தாக்கப்பட்டமை தொடர்பில் தமக்கு எந்தவித தொடர்பும் இல்லை என நீதிமன்றில் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, இநத வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 7 ஆம் திகதி மீண்டும் இடம்பெறவுள்ளது.

# எயிட்ஸ் நோயாளர்களில் 80 வீதமானோர் மத்திய கிழக்கு சென்று திரும்பிய பெண்கள்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள எய்ட்ஸ் நோயாளர்களில் 80 வீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்காகச் சென்று திரும்பிய பெண்கள் என ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது தடவையாக வெளிநாடு செல்லும் பெண்கள் மேற்கொள்ளும் வைத்திய பரிசோதனையின்போதே எச்.ஐ.வி. தொற்றிய அதிகமானோர் இனங்காணப்பட்டுள்ளதாக பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் நோய் ஒழிப்பு செயற்றிட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

மேலும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையுள்ள நான்கு ஆண்டுகளில் இலங்கையில் எய்ட்ஸ் நோய் தொற்றியோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹொங்கொங் வர்த்தக பிரதிநிதிகள் ஏப்ரலில் இலங்கை வரவுள்ளனர்

(கொழும்பு)

ஃபாங் தலைமையிலான பிரதிநிதிகள் குழு ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளனர் என ஹொங்கொங் வர்த்தக அபிவிருத்தி குழுவின் தென் கிழக்கு ஆசியா மற்றும் இந்தியா பிராந்திய முகாமையாளர் சனி சௌவ் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு 3 இல் அமைந்துள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைசசின் வளாகத்திற்கு வருகை தந்திருந்த ச்னி சௌவ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதன் முறையாக ஹொங்கொங் வர்த்தக அபிவிருத்தி குழுவுக்கும் ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கும் இடையே 2013 ஏப்ரல் மாதம் முதல் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக அபிவிருத்தி புரிந்துணர்வு ஒப்பந்தம் வெற்றியளித்ததுள்ளது.

திருமதி மார்கரெட் ஃபாங் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர், இந்த உடன்படிக்கையின் அடுத்த செயற்பாட்டு நிலை குறித்து ஆராய்வதற்கே விஜயம் செய்யவுள்ளனர். சில ஹொங்கொங் உற்பத்தியாளர்கள் ஏற்கனவே தமது தொழிற்சாலைகளினை இலங்கையில் அமைப்பதற்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

குறிப்பாக ஆடை, உணவு, கைவினைத்திறன் மற்றும் சூரிய ஒளி தொடர்பான உற்பத்தி துறைகளிலேயே அவர்களின் ஆர்வம் காணப்பட்டது.

மேற்படி 15 நிறுவனங்களிலிருந்து 20 பிரதிநிதிகள் இக்குழுவில் அடங்குவர். இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஹொங்கொங்கில் காணப்படும் இறக்குமதியாளர்கள் மற்றும் சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான உதவிகளை நாம் செய்துவருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் சுத்தமான குடிநீர் உதவி வழங்குகிறது பாகிஸ்தான்

(கொழும்பு)

இலங்கையில் சுத்தமான குடிநீர் செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்கு பாகிஸ்தான் நிதியுதவியினை வழங்க முன்வந்துள்ளது.

கொழும்பில் உள்ள உயர்ஸ்தானிகரகத்தின் ஊடாக பாகிஸதான் அரசாங்கம் இந்த நிதியை வழங்கவுள்ளது. வடமத்திய மாகாணத்தில் பொலனறுவை கொடபொக்குன பகுதியில் குறித்த இரண்டு சுத்தமான குடிநீர் விநியோக செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் குவாசிம் குவார்ஷி, செயற்றிட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து ஒப்பந்த ஆவணங்களை கையளித்துள்ளார்.

பொலனறுவை கொடபொக்குன பகுதியில் 155 தமிழ் குடும்பங்களும், 148 முஸ்லிம் குடும்பங்களும் வசிக்கின்றன. யுத்த காலத்தில் அந்தக் குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரதின பொது மன்னிப்பில் யாழில் 9 கைதிகள் விடுதலை



(யாழ்ப்பாணம்) இலங்கையின் 66ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் யாழ்.சிறைச்சாலையில் இருந்து பெண் கைதி ஒருவர் உட்பட ஒன்பது கைதிகள் நேற்று முற்பகல் விடுதலை செய்யப்பட்டனர். குற்றச் செயல்களின் நிமித்தம் நீதிமன்றத்தினால் தண்டப் புணம் விதிக்கப்பட்டு அதனைச் செலுத்த முடியாது சிறைத் தண்டனை அனுபவித்து வந்த வர்களே இவ்வாறு நேற்று யாழ். சிறைச்சாலையில் இருந்து பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இந்தக் கைதிகள் விடுவிப்பு நிகழ்வில் யாழ்.சிறைச்சாலை அத்தியட்சகர் ஏச்.ஏ.சி.பெரேரா, யாழ்.சிறைச்சாலை பிரதான ஜெயிலர் இந்திரகுமார் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர் (பா)

# தொழிற்சாலைகளைப் பதிவு செய்ய உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடிதம்

தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துகளை தவிர்க்கும் நோக்கில் தொழிற்சாலைகளை தொழிற்சாலை பரிசோதனை பாதுகாப்பு திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தொழிற்திணைக்கள தொழிற்சாலை பரிசோதகரால் கோரப்பட்டு அதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் சில உள்ளூராட்சி மன்றங்கள் தொழிற்சாலை பாதுகாப்பு திணைக்கள அனுமதியுடன் இயங்காத தொழிற்சாலைகளுக்கும் அங்கீகாரம் வழங்கி வருடாந்தவரி அனுமதிப்பத்திரம் வழங்கிவந்தது. இதனால் தொழிற்சாலைகள் பல பதிவு செய்யப்படாததுடன் மேலும் பல தொழிற்சாலைகளும் இவ்வாறு உருவாகியது. இதனால் தொழிற்சாலை உரியபாதுகாப்பு கேள்விக்குரியதாகியது. அதனால் சில இடங்களில் விபத்துகளும் இடம் பெற்றிருந்தன.

எனவே இவற்றினை தடுக்கும் வகையில் இந்த ஆண்டு வரி அனுமதிப்பத்திரம் பெறும் போது தொழிற்சாலை பரிசோதனை பாதுகாப்பு திணைக்கள அனுமதியை முன்னுரிமைப்படுத்த வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு தொழிற்சாலைகள் பதிவுசெய்யப்படும் போது தொழிற்சாலை பொறியியலாளர் நேரடி களஆய்வு செய்து, ஆபத்தான இயந்திரங்கள் தொடர்பாக சோதனை செய்து பாதுகாப்பு வழிமுறைகளை தெரிவித்தால் தொழிற்சாலை விபத்துக்களை தவிர்க்கமுடியும் என தெரிவிக்கப்படுகிறது. (54)

# சிறப்புற நடைபெற்ற கால்கோள் விழா

யா/வரணி சைவப்பிரகாச வித்தியாசாலையில் புதுமுக மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த 16ஆம் திகதி அன்று பாடசாலை அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக முன்னாள் தபாலதிபர் க.அருணாசலம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை முன்னாள் பாடசாலை அதிபர் ப.இராசரத்தினம் தனது சொந்த செலவில் வழங்கியிருந்தார். இவர் வருடா வருடம் தனது சொந்த செலவில் புதுமுக மாணவர்களுக்கு இலவசமாக கற்றல் உபகரணங்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (150)

# உபகரணங்கள் அன்பளிப்பு

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு ஆனைக்கோட்டையை சேர்ந்தவரும் கனடா வாசியுமான கந்தையா என்பவர் மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இதில் இரத்தப்பரிசோதனை செய்யும் சிகிச்சை உபரணங்களையும் நவீன குளியலறை பிளாஸ்ரிக் சொகுசு கதிரையொன்றையும் அண்மையில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி காந்தநேசனிடம் கையளித்துள்ளார்.

இவர் முன்னரும் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆவி பிடிக்கும் கருவி மற்றும் அதனுடன் இணைந்த உபகரணங்களையும் வழங்கியுள்ளார். (104)

# குழந்தைகள் கற்க மென்பொருள் தொகுப்பு

மக்கள் வங்கி சிறு குழந்தைகள் ஆர்வத்துடன் கற்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட e-கற்போம் (e-learning) எனும் மென்பொருள் தொகுப்பினை வழங்கிவருகிறது.

இந்த மென் பொருளில் 3D விளையாட்டு வடிவில் தமிழ், ஆங்கில, சிங்கள எழுத்துக்கள் மற்றும் உலகில் உள்ள வியத்தகு படைப்புக்கள், வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், இயற்கை அதிசயங்கள், உலக சாதனையாளர்கள் எனப் பல்வேறு சுய கற்றலுக்கான அம்சங்கள் அடங்கி உள்ளன. மக்கள் வங்கியின் இசுறு உதான கணக்கினை வைத்திருக்கும் சிறுவர்களுக்கும் புதிதாக கணக்கினை ஆரம்பிப்பவர்களும் இந்த மென்பொருளை இலவசமாக பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)




# சங்கக்கார சதம் வலுவான நிலையில் இலங்கை

(சிற்றாகொங்)

சங்கக்காரவின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் இலங்கை அணி பலமான நிலையைப் பெற்றுள்ளது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக்கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று பங்களாதேஷின் சிற்றாகொங்கில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இலங்கை அணி முதலிரு விக்கெட்டுக்களையும் 49 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்தது. இந்நிலையில் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார மற்றும் மஹேல ஜெயவர்த்த ஜோடி பங்களாதேஷ்அணியின் பந்து வீச்சாளர்களைப் புரட்டியெடுத்து ஓட்டங்களை மலைபோலக் குவித்தது. இந்த ஜோடி 178 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது.

தொடர்ந்து ஒரு முனையில் மிகவும் நிதானமாக ஆடிய நட்சத்திர வீரர் சங்கக்கார சதமடித்து அசத்தினர். இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை இலங்கை அணி முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் சங்கக்கார 245 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், 19 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 160 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. டெஸ்ட் அரங்கில் சங்கக்கார பெற்றுக்கொண்ட 34ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் மஹேல ஜெயவர்த்தன 147 பந்துகளை எதிர்கொண்டு 72, கருணாரட்ன 31, சண்டிமால் 27 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் மொகமதுல்ல இரண்டு, ஹஜி, ஷகிப் அல் ஹசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.




# இல்ல மெய்வல்லுநர்

(கொடிகாமம்)


கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் எஸ். துரைராசா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (130)

(புலோலி)

புலோலி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக்கு எதிராகவுள்ள தற்காலிக மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி பா. தயாநிதி தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் கே. லிங்கநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (109)

# பாரத ரத்னா விருது நேற்று பெற்றார் சச்சின்



(புதுடில்லி)

கிரிக்கெட் சகாப்தம் என அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது நேற்று வழங்கப்பட்டது.

சச்சின் டெண்டுல்கரின் சாதனைகளை பாராட்டும் விதமாக இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை வழங்குவதாக இந்திய மத்திய அரசு அறிவித்தது. சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற தினத்தில் இந்திய மத்திய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த விருது வழங்கும் வைபவம் நேற்று மதியம் 12.30 மணிக்கு இந்திய ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. விருதை இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வழங்கினார்.

பாரத ரத்னா விருதை பெற்ற முதல் விளையாட்டு வீரர் என்ற சாதனையை டெண்டுல்கர் பெற்றார். மேலும் குறைந்த வயதில் இந்த விருதை பெற்றவர் என்ற பெருமையும் அவருக்கு கிடைத்தது.

1954ஆம் ஆண்டு முதல் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 43 பேர் இந்த விருதை பெற்றுள்ளனர். இந்நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா, மூத்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விருது பெற்ற பின்னர் கருத்துத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், எனது தாயாருக்கு இந்த விருதை சமர்ப்பிக்கின்றேன். இந்த நாட்டில் பிறந்தமைக்கு நான் பெருமை அடைகிறேன். கிரிக்கெட்டை நிறுத்தினாலும், இந்திய மக்களுக்காக நான் தொடர்ந்து பணியாற்றுவேன். அவர்களின் மகிழ்வுக்கு ஏதேனும் ஒரு வழியில் என் சேவை இருக்கும். எனது தாய்க்கும் இந்த நாட்டில் உள்ள அனைத்து தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் எனது விருதை சமர்ப்பிக்கின்றேன் என்றார்.



# ரொனால்டோவுக்கு ரெட் கார்ட்

எதிரணி வீரரை தாக்கிய கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு ரெட் கார்ட் (சிவப்பு அட்டை) காட்டப்பட்டது. ஸ்பெயினில் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் 22ஆவது லீக் போட்டியில் ரியல் மட்ரிட், அத்லெடிக் பில்பாவோ அணிகள் மோதின. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. போட்டியின் 65ஆவது நிமிடத்தில் ஜெசே ஒரு கோல் அடிக்க, ரியல் மட்ரிட் அணி முன்னிலை பெற்றது.

அடுத்து பில்பாவோ அணியின் கொமெஜ் ஒரு கோல் அடிக்க போட்டி சமநிலையானது. இதனால் போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது. அப்போது ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, பில்பாவோவின் குர்பெகுய் இடையே மோதல் ஏற்பட்டது. தனது மார்பில் இடித்த குர்பெகுயை, தனது இடது கையால் கீழே தள்ளினார் ரொனால்டோ. இதை எதிர்த்த ஆண்டர், ரொனால்டோ மார்பில் வேகமாக மோதினார். உடனடியாக அங்கு வந்த நடுவர் ரொனால்டோவுக்கு சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றினார்.

தொடர்ந்து 10 வீரர்களுடன் விளையாடிய ரியல் மட்ரிட் அணி, 11 என, போட்டியை சமநிலை செய்தது.

# ஹோலி கலங்கரை விளக்கு மார்ட்டின் குரோ புகழாரம்

சச்சின், சேவாக், ராவிட் ஆகிய மூவரின் கலவையாக ஹோலி விளங்குவதாக நியூசிலாந்து அணியின் முன்னாள் கப்டன் மார்ட்டின் குரோ புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய அணியை மறுகட்டமைப்பதில் ஹோலி கலங்கரை விளக்காகத் திகழ்கிறார். உண்மையான கப்டனாக விளங்கும் நோக்கில் அவர் ஆட்ட நுணுக்கங்களை விரைவாக கற்றுக்கொள்கிறார். நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்களுக்கு அவர் முன்மாதிரியாக விளங்குகின்றார்.

ராவிட்டை போல தீவிரமாகவும், சேவாக்கை போல தைரியமாகவும், சச்சினை போல் அசாதாரணமாகவும் அவர் விளையாடுகிறார். அவரது தனித்திறமையே அவரை இந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது. அவர் பந்துகளை அடித்து ஆடும் அழகு வியப்பூட்டும். ஆட்டத்தின் இயல்பை பிடித்துவிட்டால் எப்படிப்பட்ட பந்து வீச்சையும் சிதறடித்து ஓட்டங்களை குவிக்கும் வல்லமை அவரிடம் இயல்பாகவே உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குளிர்கால ஒலிம்பிக்; ஊக்கமருந்தை தடுக்க கடும் நடவடிக்கை

ரஷ்யாவின் சோச்சியில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் 2453 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் சோச்சி நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு, ஊக்க மருந்து பயன்பாடு குறித்த பரிசோதனைகள் மிகக் கடுமையாக இருக்கும் என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது. சோச்சி ஒலிம்பிக் போட்டிகளில் ஊக்க மருந்து பயன்பாட்டை தவிர்ப்பது குறித்த உயர்மட்டக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் எடுக்கப்பட்ட முடிவின்படி சோச்சியில் மொத்தமாக 2,453 பரிசோதனைகளை மேற்கொள்ளப்படும் என்று, சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் செய்தித் தொடர்பு இயக்குநர் மார்க் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் ஆரம்பமாவதற்கு இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில், ரஷ்யாவின் ஜரீனா ஸ்டாரிக் எனும் போட்டியாளர் ஊக்க மருந்து பரிசோதனையில் தோல்வியடைந்ததால் போட்டியிலிருந்து வில்கினார்.

கடந்த முறை குளிர்கால ஒலிம்பிக் போட்டி கனடாவின் வான்கூவர் நகரில் நடைபெற்றபோது, சோச்சியில் திட்டமிடப்பட்டுள்ளதைவிட குறைவான அளவுக்கு ஊக்கமருந்து பரிசோதனைகள் நடைபெற்றன.

தொழில்நுட்பம் ஒத்துழைக்கும்பட்சத்தில், இம்முறை சோச்சியில் விளையாட்டு வீரர்களிடமிருந்து பரிசோதனைக்காக எடுக்கப்படும் மாதிரிகள் பத்தாண்டுகளுக்கு பாதுகாத்து வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை சோச்சியில் போட்டிகள் முடிவடைந்த பின்னரும் ஆயிரத்துக்கும் அதிகமான ஊக்க மருந்து பரிசோதனைகள் நடத்தப்படும் என்று கூறியுள்ள சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் இதில் குறிப்பாக ஐஸ் ஹொக்கி போன்ற குழு விளையாட்டின் மீது அதிகம் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளது.



# இங்கிலாந்து அணியின் புதிய பயிற்றுநர் வோர்ன்?

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக அவுஸ்ரேலியாவின் முன்னாள் பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் நியமிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

அவுஸ்ரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி டெஸ்ட், ஒருநாள் மற்றும் ருவெண்ரி-20 என அனைத்து தரப்பிலான ஆட்டத்திலும் தோல்வியடைந்தது. 103 நாள் பயணத்துக்குப் பின் இங்கிலாந்து அணி திங்கட்கிழமை லண்டன் திரும்பியது. துவண்டிருக்கும் இங்கிலாந்து அணிக்கு சுழற்பந்து பயிற்சியாளராக அவுஸ்ரேலியாவின் முன்னாள் சுழல் ஜாம்பவான் வோர்ன் நியமிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியானது. தன் டுவிட்டர் பக்கத்திலும் வோர்ன் இந்தத் தகவலைத் தெரிவித்தார். ஆனால், இங்கிலாந்து பயிற்சியாளராக செயற்படுவது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை என வோர்ன் குறிப்பிட்டிருந்தார். ஏற்கெனவே, மார்ச் மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள ருவெண்ரி-20 உலகக் கோப்பை போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியின் சுழற்பந்து வீச்சு பயிற்சியாளராக வோர்ன் நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இங்கிலாந்து பயிற்சியாளர் பதவியை தான் கணக்கில் எடுக்கவில்லை என தென் ஆபிரிக்க அணியின் பயிற்றுவிப்பாளர் கரி கேர்ஸ்டன் தெரிவித்துள்ளார். அன்டி ப்ளவர் விட்டுச்சென்ற இங்கிலாந்து அணியின் பணிப்பாளர் பதவிக்கு அதிகம் போட்டியுடையவர் என எதிர்பார்க்கப்பட்டவர் கரி கேர்ஸ்டன். இந்த நிலையில் தான் அதற்கு முயற்சிக்கவில்லை எனவும், இப்போது இருக்கின்ற நிலையில் அதை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

விளையாட்டுச் செய்திகள்

# இல்ல மெய்வல்லுநர் இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் எஸ்.தர்மரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை கோட்டக் கல்வி அதிகாரி பா.ரகுநாதன் கலந்து கொள்ளவுள்ளார். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகளை கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு பாடசாலை சமூகம் கேட்டுள்ளது. (109)

(அல்வாய்)

அல்வாய் அம்பாள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் ஆ. சூசைநாதர் தலைமையில் நடைபெறவுள்ளஇப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை அன்னை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா, வடமராட்சி வலய கணித உதவிக் கல்விப் பணிப்பாளர் ம. ஈஸ்வரதேவன், வடமராட்சி வலய ஆசிரிய ஆலோசகர் ம. வின்சன்கோமகன், ஓய்வுபெற்ற அதிபர் ம. மகேஸ்வரராசா, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அதிபர் இ. ஸ்ரீநடராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகமூட்டுமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது.

# நாளை

(யாழ்ப்பாணம்)

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வு கல்லூரி அதிபர் வண. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பெற்றோர் உட்பட அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களை உற்சாகப்படுத்துமாறு கல்லூரிச் சமூகம் கேட்டுள்ளது.

இதேவேளை, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் இன்றைய தினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

(கைதடி)

கைதடி கலைவாணி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல். 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா. கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. சர்வேஸ்வரன், பரந்தன் மக்கள் வங்கி கிளை முகாமையாளர் க. சிறிதரன், கௌரவ விருந்தினர்களாக பாடசாலை முன்னாள் முதல்வர் லயன் ப. செல்லத்துரை, சுவிஸ் நாட்டில் வசிக்கும் பழைய மாணவர்களான பொ. சந்திரசேகரம், இ. யோகதீசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வின் பெற்றோர், கிராமப் பெரியோர், விளையாட்டு நலன் விரும்பி கள், ஆர்வலர்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது. (90)



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் வீதியோட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ்வீதியோட்டம் ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் தனித்தனியே நடைபெற்றது. இதில், ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை கனிஸ்ரன், இரண்டாமிடத்தை கேமதன், [illegible] ஜெனிகரன், நான்காமிடத்தை பமில்டன், ஐந்தாமிடத்தை ஜெலக்ஷன், ஆறாமிடத்தை றஜீபன், [illegible] ஜெயகிருஷ்ணா, எட்டாமிடத்தை தேனுசன், ஒன்பதாமிடத்தை ஜெயன், பத்தாமிடத்தை துஷ்யந்தன் ஆகியோர் பிடித்துக் கொண்டனர். ஆண்களுக்கான போட்டி ஆரம்பமான வேளை போட்டியாளர்கள் தயார் நிலையில் நிற்பதைக் காணலாம். (93)

# நெல்லை பிளாஸ்ரர்ஸ் சம்பியன்



(கரவெட்டி)

கரவெட்டி இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை நெல்லை பிளாஸ்ரர்ஸ் அணி கைப்பற்றிக்கொண்டது.

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளத்தினால் நடாத்தப்பட்டு வரும் கரவெட்டி பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் மென்பந்தாட்ட கிரிக்கெட் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப்போட்டியில் மாலுசந்தி மைக்கல் இளைஞர் கழக அணியும், நெல்லை பிளாஸ்ரர்ஸ் இளைஞர் கழக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடி நெல்லை பிளாஸ்ரர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இறுதிவரை களத்திலிருந்த ஜீவன் ஆறு சிக்ஸர்கள் அடங்கலாக 50 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 59 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மைக்கல் அணி நான்கு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். பந்து வீச்சில் டெஸ்மன், பிரகாஷ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் பிரதேச இளைஞர் கழக வெற்றிக் கிண்ணத்தை நெல்லை பிளாஸ்ரர்ஸ் இளைஞர் கழக அணி கைப்பற்றிக்கொண்டது. (48)

# வென்றது கொக்குவில் இந்து

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 167 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றது.

239 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் மற்றும் 167 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (48)

# மென்பந்து கிரிக்கெட்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையம் என்பவற்றின் ஆண்டு நிறைவை முன்னிட்டு மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை நாளை மறுதினத்திற்கு முன்னர் இணுவில் பொதுநூலகத்தினருடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (48)

# அரச அதிபர் பெண்கள் மென்பந்து கிரிக்கெட் வேலணைப் பிரதேச செயலக அணி சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண மென்பந்து கிரிக்கெட் தொடரின் கிண்ணத்தை வேலணைப் பிரதேச செயலக அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றி கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட இப்போட்டி ஐந்து ஓவர்களாக நடைபெற்றது.

இதில் வேலணைப் பிரதேச செயலக அணியும், கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கோப்பாய் பிரதேச செயலக அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 31 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 32 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வேலணைப் பிரதேச அணி சீரான முறையில் ஓட்டங்களைக் குவித்து வந்தது. இறுதிப் பந்தில் இரண்டு ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் போட்டி பரபரப்பான கட்டத்தை அடைந்தது. விறுவிறுப்பு நிறைந்த இந்தச்சூழ்நிலையில் வேலணைப் பிரதேச அணி வீராங்கனை இறுதிப் பந்தில் பவுண்டரி விளாசி வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் வேலணைப் பிரதேச செயலக அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்ததுடன் கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. (எஸ்.பி.)

# முதல் வெற்றி ஹென்றீஸ் வசம்

(இளவாலை)

தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் முதல் வெற்றியை இளவாலை ஹென்றீஸ் அணி பதிவாக்கியுள்ளது. வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்டு வரும் அங்கத்துவ அணிகளுக்கிடையிலான தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் கடந்த 2ஆம் திகதி இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இத்தொடரின் முதலாவது போட்டியில் இளவாலை ஹென்றீஸ் அணியும், தெல்லிப்பளை நாமகள் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது திறனை வெளிப்படுத்தின. இதன் காரணமாக போட்டி முடிவு 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலை பெற்றது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இளவாலை ஹென்றீஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93,48)

அழுக்கக் குழுவாகக் கூட பல நாடுகளில் செயற்பட முடியவில்லை. புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புக் களுக்கு பிரித்தானிய அவுஸ்ரேலிய அரசாங் கங்களிடம் உள்ள செல்

கண்டிக்கவோ தண்டிக்கவோ முனையும் தீர்மானமல்ல.

சென்ற ஆண்டின் தீர்மானம் கற்றபாடங்களும் நல்லிணக்க மும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் வரம்பிற்கு உட்பட்டே அமைந்தது. கற்ற

தீர்மானங்களை ஒரு தேசியப் பிரச்சினையாக்கி நாட்டின் அவசரமான பிரச்சினைகளி லிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதில் வெற்றி கண்டிருக்கின்றது.

இம்முறையும் மார்ச் மாத

# நமது மக்களைத் திசைதிருப்பி நடக்கும் மேற்குலக நாடகங்கள்

அஸ்வத்தாமா கட்டுரையிலிருந்து.



புலம் பெயர் தமிழர் களின் செயற்பாடுகளா லேயே ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறுகிற்து என்று சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களே தமிழ் மக்களின் விடுதலைக் கான வழி என்று எங்களை நம்பத்தூண்டுகின்றனர். புலம்பெயர் தமிழர்கள் மாபெரும் சக்தி என்ற வளர்க் கப்படும் நம்பிக்கையைப் பல நிகழ்வுகள் பொய்ப்பித் துள்ளன.

இறுதிக்கட்டப் போரில் மனிதப் பேரவலத்தை நிறுத்த முடியாமை முதல் அண்மைய பொதுநலவாய மாநாடு வரை அதற்கான சான்றுகளைத் தேடலாம். புலம் பெயர்சமூகம் ஒரு

வாக்கின் பெறுமதியும். இலங்கையில் நடந்த பொது நலவாய மாநாட்டில் பிரித்தானிய, அவுஸ்ரேலிய பிரதமர்களின் பங்குபற்றலால் புலனாக்கியது. தமிழ் மக்களி னதோ இலங்கை மக்களினதோ விடிவை அவர்கள் பெற்றுத்தரமாட்டார்கள்.

கடந்த இருமுறைகளிலும் ஜெனிவாவில் இலங்கைக்கெதி ராகக் கொண்டுவந்த தீர்மானங் கள் பலர் எதிர்பார்த்தது போன்று போர்க்குற்ற, மனித உரிமை மீறல்கட்கு நீதி கேட்கும் ஒன்றாக அமைய வில்லை. அது அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தைக்

பாடங்களும் நல்லிணக்கமும் ஆணைக்குழுவை நியமித்த நோக்கமோ சர்வதேச விசாரணைகளைத் தவிர்ப்பது தான். அதை நியமிப்பதற்கான ஆலோசனையும் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகிற சில வட்டாரங்களில் இருந்தே வந்திருக்கக்கூடும்.

அமெரிக்காவும் மேற்குலகும் இலங்கை மீதான பிரேரணை யைப் பற்றிப் பேசுகையில், ஐ.நா.செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கையான தாருஸ்மன் அறிக்கையைப் பற்றிய ஒரு சொல்லேனும் பேசவில்லை. அதை விடவும் சனல் - 4 காணொளிகள் பற்றியெல்லாம் இலங்கை மீதான தீர்மானத்தில் எவ்விதமான கணிப்பும் இல்லை. இவ்விடயங்கள் பல சொல்லாத செய்திகளைச் சொல்கின்றன.

அமெரிக்காவுக்கு இலங்கை யைத் தன்னுடைய மனித உரிமைகள் பொறியில் விழுத்து வதற்கான ஒரு நகர்வு தேவைப் பட்டது. அதற்கான ஆடுகளந் தான் ஜெனிவா. அங்கு நடப்பவை இலங்கை மீதான மேற்குலக ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒரு காய்நகர்த்தல் என்பதில் ஐயமில்லை.

அதை இலங்கை அரசாங்கம் அறியும். ஆனாலும் அது வெளியிற் பேச இயலாத விடயம். அதேவேளை ஒவ்வொரு முறையும் இலங்கை அரசாங்கம் இந்தத்

இறுதியில் தென் மற்றும் மேல் மாகாணங்களுக்கான தேர்தல் கள் வரவுள்ளன. இலங்கைக்கு எதிரான இன்னொரு தீர்மானம் நிறைவேறுமிடத்து பயங்கர வாதத்தை ஒழித்து அமைதியை நிலைநாட்டியதற்காக மேற்குலகு என்னைத் தண்டிக்க நினைக்கிறது. என் கரங்களை உங்கள் வாக்குகளின் மூலம் பலப்படுத்துங்கள் என்று ஜனாதிபதி மக்கள் முன் போய் நிற்பார். வெற்றியும் பெறுவார்.

இவ்விடத்தில் எதிர்க்கட்சி இல்லாத தேசத்தில் மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்கு திசைதிருப்பிகளாக இவ்வாறான மேற்குலக நாடகங்கள் அரங் கேறுகின்றன. அவை அரசாங் கத்தின் கைகளை வலுப்படுத்து கின்றன. அதன் வாயிலாகத் தமிழ்மக்கள் தொடர்ந்தும் அடக்குமுறைக்கு ஆளாவார்கள்.

இதற்கிடையில் ஜெனிவா வால் தமிழ் மக்களுக்கு பயன் விளையும் என்று எதிர்பார்ப்பு களை உருவாக்குவது ஆபத் தானது. மக்கள் அணிதிரண்டு போராட ஊக்குவிப்பதற்கு ஆயத்தம் இன்றி இன்னமும் மேற்குலகையும் அதன் ஆதரவையும் நம்புகின்ற போக்கில் இருந்து தமிழ்த் தரப்புகளும் தலைமைகளும் ஊடகங்களும் விடுபடுமா என்பது பற்றிச் சிந்திப்பது பயன்தருவதாகும்.

தமிழ் மக்களுக்கு மறுக்கப் பட்டு வருகின்ற மனித உரிமை களும் அடிப்படை உரிமைகளும் சிங்கள, முஸ்லிம், மலையகத்

தமிழ் மக்களுக்கும் மறுக்கப்படு வதைப் பரந்த நோக்கில் காணுதல் வேண்டும். இத்தகைய சூழலில் அனைத்து மக்களையும் அணிதிரட்டிப் போராடுவதற்கான அரசியல் கொள்கையும் வேலைத்திட்டமும் உடைய இன்றைய தேர்தல் அரசியலுக் குப் பதிலான மாற்று அரசிய லில் மக்கள் அணிதிரள வேண்டும். அதுவே சகலவித மான ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான சரியான போராட்டமாக இருக்கும்.

ஜெனிவாவில் நடக்கவுள்ளதில் தமிழ் மக்களின் எதிர் காலம் இல்லை. பறிபோகிற நிலங்களையும் மறுக்கப்படு கின்ற உரிமைகளையும் ஜெனீவா பெற்றுத்தராது. ஆனால் எல்லாத் தரப்புகளும். பேசவும் தத்தம் நம்பிக்கைகளை வளர்க்கவும் காலங்கடத்தவும் நல்லதொரு வசதியாக ஜெனிவா ஆகிவிட்டது. இம்முறைத் தீர்மானத்தில் இன்னது வரும் என இன்னும் ஒரு மாதத்திற்கும் அதன் பின்னர் இன்னது நடக்கப்போகிறது என்று மேலும் கொஞ்சக் காலத்திற்கும் கதை பேசிக் காலங்கடத்தலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கைக்கு எதிரான இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் தமிழ் மக்களின் வாழ்க்கையிற் பயனுள்ள முன்னேற்றம் ஏதாவது ஏற்பட்டுள்ளதா? பறித்த நிலங்களுக்கு மேலாக எஞ்சியிருந்த நிலங்களும் பறிபோகின்றன. வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது. இது தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய விடயம்.

ஜெனிவா தமிழ் மக்களின் விடுதலைக்கான வழி என்று சொன்னவர்களும் சொல்கின்ற வர்களும் இதுவரை தமிழ் மக்களுக்கு ஜெனிவா தீர்மானத் தால் விளைந்த பயனெது வென்று சொல்லட்டும். ஒன்றை உறுதியாகச் சொல்வேன். ஜெனிவாவை நம்பச் சொல் கிறவர்கள் இலவுகாத்து ஏமாந்த கிளியை இன்னொரு முறை காத்திருக்கத் தூண்டுகிறார்கள். தொடர்ந்தும் தூண்டிக் கொண்டேயிருப்பார்கள்.

மனித மனங்களின் பக்குவத்தை அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ள முடியாது. ஒரு குழந்தை மீது வைக்கிற நேசம். பெண்ணின் மீது வருகிற காதல். தகப்பன் மீது வைக்கிற அன்பு. இவற்றையெல்லாம் தாண்டி ஒரு மேசை, தாத்தாவின் ரேடியோ பெட்டி, தலைமுறைகள் கடந்த சோறு போடும் நிலம்.. கல்லூரித் தோழி எழுதிய காதல் கடிதம்... என ஒவ்வொரு மனிதனுக்கும் உயிரற்ற ஏதாவது ஒரு பொருளின் மீது அளவு கடந்த அன்பு இருக்கும். அது காதலும் கூட. இழந்த உறவுகள், சிதைந்த மனங்கள், மீளாத கனவுகள் என எவ்வளவோ இருந்தாலும், ஏதோ ஓர் உயிரற்ற பொருளிடம் உன்னதமாக இருக்கும் பக்குவம் மனித மனசுக்கு உண்டு. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமான பொருள்கள் நமது உணர்வுகளை, நினைவு-களைக் கிளறுகின்றன. எல்லாருடைய வாழ்க்கையிலும் சில பொருள்கள் நினைவுகளால் முக்கியத்துவம் அடைந்து இருக்கும். இந்த காரில்தான் போவேன். இந்த பேனாவில்தான் எழுதுவேன். இந்த கைக்குட்டை.... இந்த செல்போன்... என ஒவ்வொருவருக்கும் ஒரு பொருள். உயிரற்ற பொருள்கள் தரக்கூடிய உணர்வுகளும், கதைகளும் எப்போதும் தீரவே தீராது. 80 களில் பிரபலமாக இருந்த பத்மினி காருக்கும், அந்தக் காரை ஓட்டத் தெரியாத ஒரு பண்ணையாருக்கும் இடையே இருக்கும் சிநேகம், காதல்,




உரையாடல்கள் வாழ்வின் எந்த எல்லைக்கு அவரை எடுத்துச் சென்றது என்பதுதான் “பண்ணையாரும் பத்மினியும்” படத்தில் உள்ள கற்பனை.

நான் மதுரைக்காரன். 26 வயதுதான் நடந்துகொண்டிருக்கிறது. வீட்டில் இன்ஜினியரிங் படிக்க வைத்தார்கள். படித்து முடித்ததுமே ஏதோ ஒரு வேலை. மனசுக்கு ஒட்டவே இல்லை. திடீரென்று எல்லாவற்றையும் உதறி விட்டு, சினிமாவுக்குள் வந்து விட்டேன். யாரிடமாவது உதவி இயக்குநராக சேரத்தான் ஆசைப்பட்டேன். ஆனால் அது சரியாக வரவில்லை. அப்போதுதான் குறும்பட உலக நண்பர்கள், கோலிவுட்டை பரபரப்பாகப் பேச வைத்திருந்தார்கள். நானும் அந்தப் பக்கம் போய் பார்த்தேன். பிடித்திருந்தது. “நாளைய இயக்குநர்” நிகழ்ச்சிக்காக ஒரு குறும்படம் எடுத்தேன். இதுவரை ஏழு படங்கள் வரை இயக்கியிருக்கிறேன். பார்த்தவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள். அதுதான் அடுத்தடுத்த பயணங்களுக்கு எரிபொருள். ஏழு படைப்புகளில் ஒரு படம்தான் இந்தப் “பண்ணையாரும் பத்மினியும்”.

- இயக்குநர் அருண்குமார்



## பிறந்தவுடன் சொல்ல முடியுமா?

ஒரு வாழைக்கன்று வைத்தால் அது எதிர்காலத்தில் வாழைமரமாகி வாழையிலை, வாழைப்பூ, வாழைக்காய், வாழைப்பழம், வாழைத் தண்டு தரும் என்று வைக்கும் போதே சொல்லலாம். ஒரு பசுமாடு கன்று ஈன்றால் அது எதிர்காலத்தில் பால் தரும் என்று சொல்லலாம். ஆனால் ஒரு மனிதன் எதிர்காலத்தில் என்ன ஆவான்? என்ன செய்வான்? என்று சொல்ல முடியாது. ஒரு வீட்டிலே குழந்தை பிறந்து அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் “என்ன குழந்தை பிறந்திருக்கு” என்று கேட்டால், “ஆண் குழந்தை பிறந்திருக்கு” அல்லது “பெண் குழந்தை பிறந்திருக்கு” என்று பெற்றவள் சொல்வாள். அப்படியில்லாமல் “ஒரு டாக்டர் அல்லது இன்ஜினியர் பிறந்திருக்கிறார்” என்று சொல்வாளா?

- ‘திருக்குறள் முனுசாமி’ மேடைப்பேச்சில்

# தென் அமெரிக்க பேருந்துப் புரட்சி



- வீ.எம்.கோபு -

தென் அமெரிக்கா அரசியல் புரட்சிகளால் மட்டுமே புகழ் பெற்றது. ஆனால் கத்தியின்றி ரத்தமின்றி சத்தமின்றி கவனமின்றி, பல நகர மேயர்கள், அங்கொரு பேருந்துப் புரட்சி நடத்தியுள்ளனர். நாளிதழ்களும் தொலைக்காட்சிகளும் தொழிலதிபர்களும் சமூகத்தொண்டு வியாபாரிகளும் சிந்தனையாளர்களும் கண்டுகொள்ளாவிட்டாலும், மற்ற நாட்டு மேயர்களும் முதலமைச்சர்களும் மாநில ஆளுநர்களும் பார்த்து ஆய்ந்து தழுவியுள்ளனர். இது ஒரு விஞ்ஞானப் புரட்சியோ தொழில்நுட்பப் புரட்சியோ அல்ல, நிர்வாகப் புரட்சி; அரசியல்வாதிகள் சிந்தித்து சோதித்து நன்கு செய்தது; போக்குவரத்தில் பொதுமக்களுக்கு மாபெரும் முன்னேற்றம் தருகிறது, தந்து வருகிறது; மக்கள் பணத்தை சிக்கனமாகவும் அறிவுடனும் ஆற்றலுடனும் கையாண்டு வருகிறது.

பேருந்துகளே (பஸ்கள்) சிக்கனமான, சிறப்பான, ஜனநாயகமான வண்டிகள் என்பதே இதன் அடிப்படை தத்துவம். கார்களும் ரயில்களும், மெட்ரோவானாலும், மோனோ ரயிலானாலும், நிலத்திலோ, சுரங்கம் செய்தோ, தரைதளத்திலோ பேருந்துகளுக்கு இணையாகா. பிரேசில் நாட்டில் குரிடிபா நகரில் தொடங்கி, பல தென் அமெரிக்க ஊர்களில் Bus Rapid Transit (BRT) - வேகப் பேருந்து முறை பரவியுள்ளது. கொலம்பியா நாட்டு பொகோட்டா நகர மேயர் என்ரிக்கே பெனலோசா இத்திட்டத்தை உலகெங்கும் சிறப்பாக பறையடிக்கும் வியாசர். கொக்கைன், ஹெரோயின் வகை போதைப் பொருட்களின் மூலமாக பத்திருபது ஆண்டுக்கும் முன் கொலம்பியா இகழப்பட்டது. இப்போது பேருந்து போக்குவரத்திற்கு புகழப்படுகிறது.

பாதுகாப்பின் சாக்கில் ஜனாதிபதி, அமைச்சர்கள், பின் அவசர சாக்கில் தீயணைப்பு, அம்புலன்ஸ் வண்டிகள், பின் நீதியரசர், எம்.பி, மற்ற அதிகாரிகள் என எல்லோரும் தனிப்பாதையில் செல்ல விரும்புவர். தனிப்பாதை மீண்டும் நெருக்கமாகும் - இது சமூக அரசியல் ரீதியான எதிர்ப்பு. வீதிகள் அகலமில்லை, பேருந்து பழுதானால் என்னாகும், டிக்கெட் விலை உயர்த்த வேண்டும், அடிக்கடி வீதிகள் தோண்டப்படுதல் என்ற நிர்வாக ரீதியாக எதிர்ப்புகளும் பேசப்பட்டன.

பெனலோசாவின் சிந்தனையோடம் இதற்குத் தீர்வு சொல்கிறது: வீதிகளை ஜனநாயகமாக பங்கிட வேண்டும் - 80 பேர் செல்லும் பேருந்துக்கு ஒருவர் செல்லும் காரை விட 80 மடங்கு அதிக இடம் வீதியில் தரவேண்டும். சுருக்கமாக: “ஒரு சிறந்த நகரின் அறிகுறி, ஏழைகளும் காரில் செல்வது அல்ல; பணக்காரர்களும் பஸ்ஸில் செல்வதே!”

வேகமாக பேருந்துகள் செல்ல அவற்றுக்கு தனிப் பாதை அமைத்து (வீதியில் 24 மணி நேர இட ஒதுக்கீடு செய்து) இதை சாதிக்கலாம். ரயில் போல நிறுத்தத்திலேயெ பயணச்சீட்டு தருதல், படிகளில்லா பேருந்துகள், உயர் தளத்தில் பேருந்து ஏற மேடைகள் “பிளாட்ஃபோர்ம் அகல கதவுகள் போன்றன வேகப் பேருந்து முறையின் மற்ற அம்சங்கள். இவையாவும் நிர்வாக மாற்றங்களே : புது தொழில்நுட்பம் ஏதும் தேவையில்லை. இதுவே இத்திட்டத்தின் அற்புதம், வியக்க வைக்கும் புதுமை.

மெட்ரோ ரயில், சுரங்கர ரயில் அமைக்க வேகப் பேருந்து முறையை விட நூறு மடங்கு அதிக பணம் செலவாகும்; அவற்றைக் கட்ட அதிக நேரமும் பொருட்களும் வேண்டும். சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் ஒரு பாதையைத் தவிர, ரயில்களை விட பேருந்துகளே அதிகமான பயணிகளையும் வழிசெலுத்துவதாக பெனலோசா கூறுகிறார்.

பல நாடுகளின் பல ஊர்களில் BRT என்னும் வே.பே.மு அமலாகிவிட்டாலும் இது பல மக்களும் அறியாத ரகசியமாகவே இருக்கிறது. என்ன பேருந்து தானே என்ற அலட்சியமோ?



# புத்தகக் கண்காட்சியில் நிகழ்ந்த அற்புதம்!

- சாரு நிவேதிதா -

எல்லோரும் புத்தகக் கண்காட்சியைக் கொண்டாடுகிறார்கள். எழுத்தாளர்களின் கொண்டாட்டம்தான் அதிகமாக இருக்கிறது. பூரிப்பும் சந்தோஷமும் அவர்கள் முகத்திலேயே தெரிகிறது. இதுதான் எனக்குப் புரிய மாட்டேன் என்கிறது. பெரிய டாப் செல்லரின் நாவலே மொத்தமாக 3000 பிரதிதான் விற்கிறது. இதில் நான் எங்கிருந்து புத்தகக் கண்காட்சியைக் கொண்டாடுவது? எல்லோரும் மூட்டை மூட்டையாக புத்தகங்களை அள்ளிக் கொண்டு போகிறார்கள். ஒரு மூட்டையில் கூட இலக்கியப் புத்தகங்கள் இல்லை. இதை எப்படி நான் வரவேற்பது?

கண்காட்சியில் நுழைகிறேன். ஒருவர் கை கொடுத்தார். பேசினார். பேசினேன். உங்களை டிவி நிகழ்ச்சிகளில் பார்த்திருக்கிறேன். சந்தித்ததில் ரொம்ப ரொம்ப ரொம்ப சந்தோஷம் என்றார். சந்தோஷம் என்றேன். விடை பெறும் போது உங்கள் பெயரைத் தெரிந்து கொள்ளலாமா என்றார்.

இதை எப்படி நான் சந்தோஷமாக எடுத்துக் கொள்வது? கண்காட்சியின் உள் வாசலில் நுழையும் போது ஒரு பிரம்மாண்டமான திரையில் மிஷ்கினும் வெற்றிமாறனும் புத்தகங்களின் முக்கியத்துவம் பற்றிப் பேசுகிறார்கள். அங்கேயே என் கையில் விஷம் இருந்தால் குடித்து விட்டுச் சாகலாம் என்று தோன்றியது. புத்தகங்களின் முக்கியத்துவம் பற்றிக் கூட ஒரு சினிமாக்காரர் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா? என்ன சமூகமடா இது!

வெளிவாசலில் டிவி ரசிகர்... உள்வாசலில் சினிமாக்காரர்! இதையும் தாண்டி உள்ளே போனால் ஒரு ஸ்டாலில் எனக்கு மிகப் பிடித்த Tahar Ben Jeloun-இன் நாவலின் மொழிபெயர்ப்பு நாவலைக் கண்டேன். நிழலற்ற பெருவெளி என்ற தலைப்பு. இது ஜெலோனின் எந்த நாவலின் மொழிபெயர்ப்பாக இருக்கும் என்று குழம்பினேன். ஏனென்றால், அவரது நாவல்களின் தலைப்புகள் எல்லாம் எனக்குத் தெரியும். இருந்தாலும் ஜெலோன் என்பதால் வேறு யோசனையே இல்லாமல் வாங்கினேன்.

வீட்டுக்கு வந்து பார்த்தால் அந்த நாவல் நான் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தொழுகை என்ற தலைப்பில் (முழுத் தலைப்பும் மறந்து விட்டது) ஜெலோனின் This Blinding Absence of Light என்ற அற்புதமான நாவல் பற்றி ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருந்தேன் அல்லவா? அந்த நாவலின் மொழிபெயர்ப்பு தான் நிழலற்ற பெருவெளி. இந்த நாவல் நோபல் பரிசுக்கு நிகரான டப்ளின் இம்பாக் விருது பெற்றது.

மொழிபெயர்த்தவர் ஜெலோனின் மூஞ்சியில் சாணி அடித்து விட்டார் என்றே சொல்ல வேண்டும். இரண்டு தலைப்பையும் ஒப்பிடுங்கள். 20 கைதிகள் வெளிச்சமே இல்லாத பாதாள அறைகளில் அவர்கள் சாகும் வரை அடைக்கப்படுகிறார்கள். கண்களைக் குருடாக்கும் இருள். This blinding absence of light. இதை அப்படியே மொழிபெயர்த்தால் கண்களைக் குருடாக்கும் இருள். Absence of light என்பதை அப்படியே தமிழில் சொல்ல முடியாது. ஆனால் இங்கே பெருவெளி எங்கே வந்தது? பெருவெளி மறுக்கப்பட்டவர்கள் ஆயிற்றே? நேர் எதிராகவா மொழிபெயர்ப்பது? வெளி என்றால் space. அவர்களின் வெளி தானே ஐயா மறுக்கப்பட்டது? இதில் எங்கிருந்து வந்தது நிழலற்ற பெருவெளி? இந்த நாவலின் ஃப்ரெஞ்ச் தலைப்பு Cette aveuglante absence de lumière இதன் நேரடி வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பே This Blinding Absence of Light தான். இதற்குக் காரணம் ஐரோப்பிய மொழிகள் பலவற்றுக்கும் மூலம் ஒன்று. இங்கே தமிழ், மலையாளம், தெலுங்கு மாதிரி. இதைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமானால் “இந்தக் கண்களைக் குருடாக்கும் இருள்” என்றே மொழிபெயர்க்க வேண்டும். அல்லது, வேறு தலைப்பு தான் தேடியிருக்க வேண்டும். உதாரணமாக, அதற்கு முன் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்.

தமிழில் என் மொழிபெயர்ப்பில் வெளிவந்த ஊரின் மிக அழகான பெண் என்ற தொகுப்பு தான் சிறுகதை மொழிபெயர்ப்பில் ஆகச் சிறந்தது. இதை நிரூபிக்க நான் எந்த விவாதத்திலும் கலந்து கொள்ளத் தயார். க.நா.சு. கூட சில விஷயங்களை முழுங்கி விடுவார். முழுமையாக இராது. இருந்தாலும் என்னுடைய முன்னோடி என்ற வகையில் க.நா.சு.வும் நானும் மட்டுமே முதன்மை மொழிபெயர்ப்பாளர்கள். அந்த அளவுக்கு சரியாக இருக்கும். ஜி. குப்புசாமி, ராமானுஜம், எம்.எஸ். ஆகியோரின் மொழிபெயர்ப்பும் நன்றாக இருக்கும். ரவிக்குமாரின் மொழிபெயர்ப்புகள் மிகச் சிறப்பானவை. ஆனால் அவர் கருணாநிதியின் காலில் விழுந்ததால் அவர் செய்த அரும் பணிகள் எல்லாம் அந்த கருணாநிதி சுனாமியில் அடித்துக் கொண்டு போய் விட்டன.

ஊரின் மிக அழகான பெண் - மொழிபெயர்ப்பு மட்டும் அல்ல; அந்தத் தேர்வே அபாரமானது. உலக இலக்கியத்திலேயே மூழ்கிக் கிடந்தால் அப்படி முத்தெடுக்க முடியும். அந்தத் தொகுப்பில் நான் எடுத்த ஒரு எழுத்தாளர் Rogelio Sinan. பனாமா நாட்டைச் சேர்ந்தவர். கணனி வருவதற்கு முன்னால் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு இவரது ஒரு கதையை நான் மொழிபெயர்த்தேன். ரோஹலியோ சினானின் கதை பெயர் Red Beret. சிவப்புத் தொப்பி. தமிழில் பார்த்தால் எவ்வளவு தட்டையான தலைப்பு பாருங்கள். அந்தக் கதையின் நாயகி கதையின் இடையே கடல் கன்னியாக மாறி விடுவாள். எனவே கடல் கன்னி என்று அதற்குத் தலைப்பு வைத்தேன்.

வெளியே (space) மறுக்கப்பட்டவர்களின் பாதாள சிறை வாழ்க்கைக்கு பெருவெளி என்று தலைப்பு வைப்பது ஏன் தெரியுமா? தமிழ் மொழியை ஐம்பது ஆண்டுகளாக பெரும்பாலான எழுத்தாளர்கள் திருகிக் கொண்டிருக்கிறார்கள். விஷயத்தை நேரடியாகச் சொன்னால் அது இலக்கியம் இல்லை என்று முட்டாள்தனமாக நினைக்கிறார்கள். அதனால் கவித்துவ வெங்காயத்தைச் சேர்த்து அது இப்படி டப்பாவாகி விடுகிறது. என்ன கருமமோ! இதையெல்லாம் எப்படிக் கொண்டாடுவது என்று புரியவில்லை.

இருந்தாலும் புத்தக விழாவில் ஒருசில அதிசயங்கள் நடக்கத்தான் செய்கின்றன. முதல்நாள் புத்தக விழாவுக்குச் சென்ற போது கடைகளைச் சுற்றிப் பார்த்தேன். ஒரு புத்தகமும் வாங்கவில்லை. சுற்றிப் பார்த்தபடி சென்று கொண்டிருந்தேன். அன்னம் ஸ்டால் தென்பட்டது. உள்ளே போனேன். மந்திரச் சிமிழ் என்று ஒரு பத்திரிகையைக் கண்டேன். அதில் சார்ல்ஸ் ப்யூகோவ்ஸ்கி, கேத்தி ஆக்கர், ஜே.ஜி. பல்லார்ட் என்று எனக்குப் பிடித்த பெயர்கள். ஒரு பிரதி அல்ல; 2009 இலிருந்து ஆகஸ்ட் 2013 வரை வந்த ஏழெட்டு இதழ்கள் கிடந்தன. அத்தனையையும் வாங்கினேன். பில் போடும் இடத்தில் இருந்தவர் முக மலர்ச்சியுடன் எழுந்து நின்று கை கொடுத்தார். பணம் கொடுத்து விட்டுக் கிளம்பும்போது உங்கள் பெயர் என்ன என்று கேட்டேன். செண்பக நாதன். மந்திரச் சிமிழின் ஆசிரியர் என்றார். பக்கத்தில் இருந்த இன்னொரு இளைஞரைக் காண்பித்து இவர் உதவி ஆசிரியர் கிருஷ்ண மூர்த்தி என்றார்.

இங்கே நிறுத்துகிறேன். நீங்களே யோசித்துப் பாருங்கள். எங்கள் மூவரின் மனநிலை அப்போது எப்படி இருந்திருக்கும்? என் கையில் அப்போது எந்தப் புத்தகமும் இல்லை. அந்தப் புத்தகக் காட்சியில் நான் வாங்கிய ஒரே புத்தகம் மந்திரச் சிமிழ் தான்.

இது போன்ற அற்புதங்கள் நிகழ்வதால்தான் நான் புத்தகக் கண்காட்சிக்கு செல்கிறேன்.

# முல்லை புறநகர் வைத்தியசாலைகளில் மாற்று வழியூடாக மருத்துவசேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நட்டாங்கண்டல், மூங்கிலாறு, அளம்பில், ஐயன்கண்குளம் ஆகிய வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கு வைத்தியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள போதும் வைத்தியர்கள் எவரும் இதுவரை விண்ணப்பிக்கவில்லையென முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அமிர்தராஜா திலீபன் நேற்றுமுன்தினம தெரிவித்தார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தின் நட்டாங்கண்டல் வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாத நிலையில் இந்த வைத்தியசாலையை நம்பி வாழ்கின்ற சுமார் 3000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது அடிப்படை மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன், இதுதொடர்பான மகஜர் ஒன்றினையும் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வடமாகாண சுகாதார அமைச்சுக்கு கையளித்திருந்தனர். இருப்பினும் இதுவரை நிரந்தர வைத்தியர் எவரும் நியமிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிக்கையில் "நட்டாங்கண்டல், ஐயன்கண்குளம் ஆகிய வைத்திய சாலைகளுக்கு மல்லாவி வைத்தியசாலை வைத்தியர்களும் மூங்கிலாறு மற்றும் அளம்பில் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வைத்தியர்களும் தற்காலிகமாக சேவைகளை வழங்கி வருகின்றனர். அத்துடன் மேலதிகமான அவசர நோயாளிகளை பொது வைத்தியசாலைகளுக்கு மாற்றக்கூடிய வகையில் அம்புலன்ஸ்களும் வழங்கப்பட்டிருக்கின்றது" எனத் தெரிவித்தார்.

## வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பண்ணை வீதி அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகள் கடந்த சில நாட்களுக்கு முன்பதாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியின் ஒரு கிலோமீற்றர் நீளமான வீதி ஏற்கனவே புனரமைக்கப்பட்டு காபெற் இடப்பட்டிருந்த நிலையில் நிறுத்தப்பட்டிருந்தது. தற்சமயம் விட்ட இடத்தில் இருந்து இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளது.

தற்சமயம் மண்டைதீவுச் சந்திக்கு அப்பால் கனரக இயந்திரங்களின் உதவியுடன் இந்த வீதி அகலமாக்கப்படும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மகா பொறியியல் நிறுவகம் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. (பா)

## கைகளின் அசைவுகளில் வெளிப்படும் உண்மைகள்

மனிதர்களின் நடத்தைகளுக்கு காரணகாரியத்தை எடுத்தியம்பிக் கொண்டிருக்கும் தெய்வீகக் கலையாக திகழ்ந்து விளங்கும் ஜோதிடமானது தன்னகத்தே யதார்த்தபூர்வமான அரிய கருத்துக்களை கொண்டுவிளங்கி வருவது வெள்ளிடை மலையாகும்.

அந்த வகையில் வியப்பினையும் உண்மையையும் ஏற்படுத்தும் தன்மையை பறை சாற்றிக் கொண்டிருக்கும் விநோத கலையாக "ஆளை அறிந்து கொள்ள கைகள் வைத்திருக்கும் முறைமையைக் கொண்டு அன்னவரின் உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் எண்ணப்பாங்கினை ஐயந்திரிபற கண்டு கொள்ள முடியும்" பல்லி சொற் பலன், பல்லி விழும்பலன், காகங்கள் கரைதல், முழிவியழுங்கள், பிறந்த திகதி மற்றும் கூட்டெண் கூறுகின்ற சங்கதிகள், ஜாதகப்பலாபலன்கள், காண்டம், உடல் மொழியின் கருத்துக்கள், மச்சங்களினால் ஏற்படும் நன்மை, தீமைகள், பறவைகளின் சகுனங்கள், கனவுகள் எடுத்தியம்பும் பலாபலன்கள் போன்று ஒருவர் எப்படித்தனது கரங்களை வைத்திருக்கின்றார் என்பதை அவதானிப்பதன் மூலம் நடத்தைகளை அறிந்து கொண்டால் அவரின் உள்ளக்கிடக்கையில் பொதிந்துள்ள விடயத்தை உணர்ந்து உறவுக்கு கை கொடுக்கலாமா அன்றி தூரவிலகிச் சென்று விடுவோமா என்பதை தீர்மானம் செய்து விட முடியும். கைகள் வைத்திருக்கும் முறைமைகளை அவதானித்து பத்து வகையான நபர்களை இனங்கண்டுள்ள இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள மனிதர்களை நாம் அன்றாட வாழ்வில் சந்திக்கின்றோம், பழகுகின்றோம், ஆனால் இவர்கள் இப்படிப்பட்டவர்களா என்பதை அறியமுடிகின்ற போது ஆச்சரியத்தால், வியப்பினால் அதிசயப்படுகின்றோம். இவர்களுள் நீங்களும் ஒருவராக இருக்க முடியும்?

### அமைதி இல்லாதவர்

சிலருடைய கைகள் ஒருநிமிட மேனும் சும்மாய் இருக்காது. தங்கள் கைக்குட்டையை எடுத்து விரல்களில் சுற்றுவார்கள், சட்டைப் பொத்தானைப் பிடித்து திருகுவார்கள் நகங்களைக் கடிப்பார்கள் காகிதத்துண்டை எடுத்து சுக்கு நூறாகக் கிழித்துப் போடுவார்கள். இப்படி ஏதாவதொன்றை இடைவிடாது செய்து கொண்டே இருப்பார்கள். இத்தகையவர்கள் உண்மையிலேயே நல்லவர்களாக, வல்லவர்களாக, சக்திவாய்ந்தவர்களாகக் காணப்படுவர். ஆனால் தங்கள் சக்தியை எவ்வாறு ஆக்க வழியில் பயன்படுத்துவது என்று அறியாமல், புரியாமல் திண்டாடிக் கொண்டிருப்பர். பெரும்பாலும் இவர்கள் சிறுவயதில் எவ்விதமான கட்டுப்பாடு சட்ட திட்டங்களும் இன்றி வளர்ந்தவர்காளக இருப்பர். எனவே வயது வந்த பெரியவர்களான பிறகும் கூட இவர்களால் தங்களைத் தாங்களே ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியாமல் தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரை என்ற நிலைப்பாட்டில் தக்க வைக்கப்பட்டிருப்பர். தங்கள் உள்ளத்தில் பொங்கிவரும் உணர்ச்சிகளை மன ஓட்டத்தை இவர்களால் கட்டுப்படுத்திக் கொள்ளமுடிவதில்லை.

வாழ்க்கையில் தங்களுக்கென ஓர் உறுதியான குறிக்கோளையும் இலக்கினையும் வைத்துக் கொள்வதில்லை. இன்றைக்கு ஒரு தொழிலில் கால் வைப்பார்கள், அது பலன் அளிக்கப்போகும் சமயத்தில் பொறுமை இழந்து போய் பிறிதொரு தொழிலுக்கு மாறிவிடுவர். இப்படியே ஒன்றைவிட்டு ஒன்றாக மாறிக்கொண்டே போவதால் எந்தத் தொழிலிலும் அல்லது வியாபாரத்திலும் தொட்டகுறை விட்ட குறையாக வெற்றி பெறவோ, நிலைத்து நிற்கவோ முடிவதில்லை.

தங்கள் தோல்விகளுக்கு காரணமான பலவீனங்கள் எவை என்பதை இவர்கள் மிக நன்றாக உணர்ந்திருப்பினும் அந்தப் பலவீனங்களைப் போக்கிக் கொள்வதற்கான முயற்சியும். மன உறுதியும் இவர்களிடம் எள்ளத்தனையும் காணப்படமாட்டாது. ஏந்தெந்த நேரத்தில் எதுதேவைப்படுகின்றதோ அதையே செய்து கொண்டிருப்பர். பிறகு திடீரென தங்கள் தவறுகளை உணர்ந்து வருந்தி கண்ணீர்விட்டு அழ முற்படுவர். இப்படியே இவர்களின் வாழ்நாள் ஓடிக் கொண்டே இருந்தால் எதிர்காலம் எவ்வாறு அமைந்து விடுமோ என்று அஞ்சுவார்கள்.

தங்கள் வாழ்க்கை முறைகளை எப்படி வகுத்துக் கொள்ளவேண்டும் என்பது பற்றி பெரியவர்களிடத்தில் சென்று ஆலோசனை கேட்பார்கள். ஆனால் அந்தப் பெரியவர்களின் யோசனைப்படி நடந்து திருந்துவதற்கு முடியாதிருக்கும் பழக்க தோஷமோ, அல்லது விதியின் கைப்பாவையாக இருப்பதோ, ஜாதகப் பலாபலனோ இவர்களின் நடத்தைக்கு காரணமாக அமைந்திருக்கலாம்.

(தொடரும்)

ஜோதிர் வித்யா ரத்னா
V.A.சிவராசா,
(B.A.B.Phil.Dip - in -Ed)

# வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சங்கத்தானை ஈழவாரியம்பதியுறை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 13ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் மகோற்சவ பிரதம குருவாக சிவாகம கிரிய தத்துவநிதி சிவஸ்ரீ மு.பாஸ்கரக்குருக்கள் கிரியைகளை ஆற்றவுள்ளார்.

# பராமரிப்பு நிலையம் திறப்பு விழா

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் கல்வளை பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட முதியோர் பகல் பராமரிப்பு நிலைய கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு சங்கத் தலைவர் க.தம்பாப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர். எஸ்.முரளிதரன் சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா, வலி.தென் மேற்கு முதியோர் சங்க சமாசத் தலைவர் எம்.எக்ஸ்.சர்வானந்தன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (104)

# முரசின் இன்றைய பலன்



(05.02.2014 புதன்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 23 ஆம் திகதி.
ஷஷ்டி / மரணயோகம்.
ரேவதி நட்சத்திரம் மு.ப. 10.24வரை. பின் அச்சுவினி.
இராகுகாலம் 12.35 - 02.05 வரை. சுபநேரம் 05.05 - 06.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உங்கள் திறமையை வெளிக்கொணர ஏற்ற சந்தர்ப்பம் உருவாக்கப்படுதல், தேகநலம் பெற நோயகல 'ஜிம்' உடற்பயிற்சி நிலையம் செல்ல முஸ்தீபு. |
| ரிஷபம் | நச்சரித்துக் கொண்டிருக்கும் பழைய கடனைக் தீர்க்க நகைநட்டுக்களை அடகு வைத்தல், உத்தியோகத்தில் பணி சிறக்க சக ஊழியர்கள் வலக்கரமாக விளங்குவர். |
| மிதுனம் | ஆடம்பரச் செலவுகளை புறந்தள்ளிவிட்டு அத்தியாவசியத் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பீர், மதம்மாறி விரும்பிய பெண்ணைக் கரம்பிடிக்க முயன்றதை பெற்றோர் விரும்பாமை. |
| கடகம் | பணியகத்தில் நிலவிய முரண்பாடு அற்றுப்போய் சுமுக நிலை தோன்றல், பிரபலமான பிரமுகரின் தொடர்பினால் அரசுப்பணிபெறபச்சைக் கொடிகாட்டுதல். |
| சிம்மம் | மனதை அரித்துக் கொண்டிருந்த பிரச்சினை தீர பேச்சுவார்த்தை தொடங்குவீர், மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்பட சந்தர்ப்பமொன்று எதிர்பாராது கிட்டுதல். |
| கன்னி | வெளியூரிலிருந்து கிடைத்த பணத்தினால் கடன் தொல்லை அற்றுப்போதல், வியாபாரம் சிறக்க அனுபவசாலிகளின் ஆலோசனைகளைக்கேட்டு செயற்படுதல். |
| துலாம் | சிக்கலையும், சவால்களையும் ஏற்படுத்தும் காரியங்களைக் கைவிட்டுவிடுங்கள், விட்டுக்கொடுப்பினால் சக ஊழியர்களின் ஒத்துழைப்புக்கிட்டி பணிசிறத்தல். |
| விருச்சிகம் | உங்களின் நடவடிக்கையை வேவுபார்ப்பதற்கு சிலர் முயல்வதையிட்டு எச்சரிக்கையாக இருங்கள், பெற்றோரை வருத்திக்கொண்டிருக்கும் நோய்கள் கட்டுப்பாட்டில் வருவதினால் நிம்மதி. |
| தனுசு | உங்களைப் புரிந்து கொள்ளாத உறவினர்களின் பராமுகத்தை நினைத்து கவலை கொள்ளல், எப்பாடுபட்டாவது சாதித்துக்காட்டுவேன் என்ற எண்ணம் மேலோங்குதல். |
| மகரம் | குடும்பத்தின் எதிர்கால நன்மைக்காக பொறுப்புக்களை சுமக்க முன்வருதல், எதிரியின் அடாவடித் தனத்தால் பாதிக்கப்படாமலிருக்க நியாயத்தை எடுத்துக்கூறல். |
| கும்பம் | மனதில் ஏற்பட்ட குழப்ப நிலைகள் அகன்று விட தெய்வ தரிசனம் செய்யப்புறப்படல், பிறர் வியக்கும் வண்ணம் யுக்தியைக் கையாண்டதால் பணி இலகுத் தன்மையை அடைதல். |
| மீனம் | எதிர்பார்த்த நிலுவை வரச்சுணங்கியதினால் பொருட்களைக் கொள்வனவு செய்ய இயலாமை, பகீரதப் பிரயத்தனத்தினால் இழுபட்டுக் கொண்டிருந்த விவாகம் நிறைவேறல். |

# புனரமைக்கப்படாத வீதிகள் குறித்து மக்கள் கோரியும் பயன் இல்லை

(மானிப்பாய்)

வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினால் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட வீதியின் சில பகுதிகள் புனரமைக்கப்படவில்லையென குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

மானிப்பாய் ஞானவைரவர் கோவில் ஒழுங்கையில் ஆனந்தாவீதி புனரமைக்கப்பட்டது. இதன் சில பகுதிகள் புனரமைக்கப்படவில்லை.

இவ் வீதியின் 50 மீற்றர் நீளமான பகுதி ஒதுக்கீடு முடிவடைந்துவிட்டது என ஒப்பந்ததாரரினால் காரணம் கூறி புனரமைக்கப்படாமல் உள்ளது.

30 வருடங்களிற்கு மேலாக புனரமைக்கப்படாத குறித்த வீதி அண்மையிலேயே புனரமைப்பிற்காக உள்வாங்கப்பட்டது.

எனினும் குறித்த சில பகுதிகள் புனரமைக்கப்படாமையால் பிரதேச மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

இதனால் அப் பகுதி மக்கள் அனைவரும் கையொப்பமிட்டு கடிதமொன்றினை வலி. தென் மேற்கு பிரதேச சபை பதில் தவிசாளருக்கு கையளித்துள்ளனர்.

பதில் தவிசாளர் மேற்படி வேலைகளை செய்வதாக உறுதியளித்துள்ளார். இருந்தபோதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது குறித்து பதில் தவிசாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அது சிறுபகுதி என்பதுடன் ஒதுக்கீடுகளை விட எந்தவொரு தொகையும் அதிகமாக செலவு செய்ய முடியாது. ஒதுக்கீடு முடிவடைந்து விட்டதால் எதுவும் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார். (48)

# துரிதகதியில் இடம்பெறும் வணக்கபீட புனரமைப்பு

(குருநகர்)

மண்டைதீவுக்கும், குருநகருக்கும் மத்தியிலுள்ள சிறுத்தீவில் அமைந்துள்ள லூர்து அன்னை ஆலய வணக்கபீடம் (ஹெவி) யுத்தத்தால் சேதமடைந்த நிலையில் கடந்த ஆண்டு திருநாள் கொண்டாடப்பட்டது.


இம்மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை லூர்து அன்னை திருநாள் நடாத்தப்படவுள்ளது.

அதனையொட்டி சேதமடைந்துள்ள வணக்கபீடம் திருத்தி புனரமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேவேளை, சிறுத்தீவில் கரையிறங்கும் அணைக்கட்டு நிறுவப்படாமையால் தற்காலிகமாக அமைக்கப்படும் இறங்குதளத்தை அமைப்பதிலும், தீவினுள் யாத்திரிகர் சென்றுவரும் பாதை செப்பனிடுவதிலும் குருநகர் இளைஞர்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாத்திரைத்தலமாக யாழ். மறைமாவட்டத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள சிறுத்தீவு லூர்து அன்னை திருநாள் வழிபாடுகள் பற்றிய நேரசூசிகைகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. (68)

# முன்னுதாரணமாக திகழும் மாற்று வலுவுடைய இளைஞர்



(கரணவாய்)

கரவெட்டி கிழக்குப் பகுதியில் வாழும் மாற்றுவலுவுடைய இளைஞரின் செயற்பாடு ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்வதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.


இவ் இளைஞர் இறுதி யுத்தத்தினால் தனது தாய், தந்தை, சகோதரனை இழந்து வன்னியிலிருந்து வடமராட்சிக்கு வந்து இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றார்.

மேலும் இவருக்கு பிறப்பிலிருநதே இரண்டு கால்களும் வலது குறைந்துள்ளதால் இவரால் தொழிலை மேற்கொள்ள முடியாது மிகவும் சிரமப்பட்டு வாழ்ந்த நிலையில் இவருக்கு கரவெட்டி சமூக சேவை அமைச்சினால் மூன்று சில்லு சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது இவ் இளைஞர் இச்சைக்கிள் மூலம் கிராமம் கிராமமாகச் சென்று சிறிய போத்தல்களைப் பெற்று அதில் தேன் அடைத்து விற்பனை செய்து வருகின்றார்.

அத்துடன் நிலக்கடலையும் வறுத்து விற்பனை செய்து வருகின்றார். இதன்மூலம் இவ் இளைஞர் நாளொன்றுக்கு 1700 ரூபா வருமானமாக பெறுவதாக தெரிவிக்கின்றார்.

வாழ்வதற்கு ஊனம் ஒரு தடையல்ல என்பதை இவர் தன் வாழ்வில் நிரூபித்துள்ளார். இவரின் இத்தகைய செயற்பாட்டை கிராம மக்கள் பாராட்டுகின்றனர். (18)



மண்டைதீவு கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட வீட்டினைக் காணலாம். இக்கிராமத்தில் இத்திட்டத்தின் கீழ் 210 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படம்: பா.பார்த்தீபன்)

## வட வரணியிலிருந்து படையினர் வெளியேறினர்

(வரணி)

வடவரணிப் பகுதியில் யுத்த காலத்தில் முகாமிட்டிருந்த மினி முகாம்கள் மற்றும் காவலரண்கள் முழுமையாக அகற்றப்பட்டு காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தற்போது வட வரணிப் பகுதியில் ஜே/339 பிரிவில் பாதுகாப்புத் தரப்பினர் முற்றாக வெளியேறி யாக்கரு பகுதிக்குச் சென்றுள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவிக்கின்றனர். (150)

## வைர விழா

(வரணி)

வரணி மகாவித்தியாலயத்தின் அறுபதாம் ஆண்டு வைரவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதனை முன்னிட்டு பாடசாலை நிர்வாகத்தினரால் சிரமதானப் பணிகள், முன்னோடி வேலைத்திட்டங்கள் நடைபெற்ற வண்ணமுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. (150)

# ஆயுர்வேதம்



## மன இறுக்கத்தைப் போக்குங்கள்!

சில பழக்கங்கள் வரம்புக்கு உட்படும்போது ஆரோக்கியத்தைத் தருகின்றன. வரம்பை மீறும்போது நோய்களைத் தருகின்றன. சரகர் எனும் ஆயுர்வேத முனிவர் உடற்பயிற்சி, சிரிப்பு, பேச்சு, வழிநடத்தல், உடல் உறவு, இரவில் நெடுநேரம் தூக்கமின்றி விழித்திருத்தல் ஆகியவற்றை வரம்புக்கு உட்படுத்த வேண்டிய பழக்கங்கள் என்று கூறுகிறார்.

இவை அனைத்தும் அளவுக்குட்பட்டிருக்கும் வரை ஆரோக்கிய வாழ்விற்கு இன்றியமையாதவைகளாகினறன. அளவை மீறும்போது அவையே வாழ்வைக் குலைக்கலாம். வரம்பைப் பகுத்தறிவால் அறிந்து அமைத்துக் கொள்ளக் கூறுகிறார்.

திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை இயந்திர வாழ்க்கை வாழும் பலரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நல்ல ஓய்வும், நல்ல நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் மனம்விட்டு மகிழ்ச்சியுடன் பேசுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொள்வது நலம் தரும்.

மனம் லேசாவது சிரிப்பினாலும் மகிழ்ச்சியாலும்தான். இயற்கையான சூழலில் நம்மை அறியாமல் நம் மனம் லேசாக பல அரிய வாய்ப்புகள் உண்டு. சிறு குழந்தைகளின் விளையாட்டில் குழந்தையோடு குழந்தையாக மாறப் பழகிக் கொண்டால் முகத்தில் சிரிப்பு தானே தோன்றும்.

மனம்விட்டுச் சிரிக்கும்போது நுரையீரலிலிருந்து மூச்சுக் காற்று சிறிது தொடர்ந்து அதிக அளவில் அதிக வேகத்தில் வெளியாகிறது. வெளியாகும் வேகத்தில் ஆழ்ந்துள்ள நுரையீரல் கோச அறைகளில் தேங்கியுள்ள அசுத்தக் காற்று வெளிப்படுவதும் அதேவேகத்தில் சுத்தமான காற்று உள்ளே செல்வதும் நாமறியாமல் நிகழ்பவை. அதனால் தினமும் சில நிமிடங்களாவது சிரிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியம்.

களைப்பு நீக்கும் மருந்துகளில் கெடுதி விளைவிக்காதது – நல்லதை நிலைத்திருக்கும்படி தருவது சியவனப்ராசம், தச மூலாரிஷ்டம், அஸ்வகந்தாரிஷ்டம் முதலியவை. பசியைத் தூண்டி உணவைச் செரிக்கச் செய்வதும், உடல் தேய்வை ஈடுசெய்யுமாறு சத்து ஊட்டம் பெற வசதி செய்து தருவது – வில்வாதி லேகியம, ஜீரகவில்வாதி லேகியம், மகாபில்வாதி லேகியம் முதலியன.

மன நிம்மதியும் வலிமையும் அளிப்பவை பிறர் நல்வாழ்வு பெறச் சிந்திப்பதும், அவற்றுக்கான பணிகளில் ஈடுபடு வதும் தசைகளின் இறுக்கத்தைத் தளர்த்தி மன இறுக் கத்தைப் போக்கவல்லவை – அருவிகளில் குளிப்பது, எவ் வகைச் சிந்தனையுமின்றி காலாற நடப்பது, வாரமிருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, நல்லெண்ணத்துடன் பழகும் பெரியோர்கள் நண்பர்களுடன் நற்பணிகளில் ஈடுபடு வது போன்றவை.

வார இறுதி நாட்களில் ஆயுர்வேத மருத்துவமனைகளில் செய்யப்படும் எண்ணெய் தேய்ப்பு, பெட்டியினுள்ளே செலுத்தபபடும் மூலிகை நீராவிக்குளியல், மூக்கினுள் விடப்படும் மூலிகைத் தைலங்களால் தலைப்பகுதியைச் சுத்தப்படுத்திக் கொள்ளுதல், நெற்றியின் மீது தாரையாக விடப்படும் மூலிகை எண்ணெய்கள், தலையில் எண்ணெய்யை நிரப்பி நிறுத்தி வைக்கும் சிரோ வஸ்தி சிகிச்சை, ஆசனவாய் வழியாக எண்ணெய் கஷாயம் போன்றவற்றைச் செலுத்தி குடலைச் சுத்தம் செய்து கொள்ளுதல் போன்ற சிகிச்சை முறைகளை சீரான இடைவெளியில் செய்து வந்தால், உடல் களைப்பு நீங்கி மனமும் இறுக்கம் தளர்ந்து லேசாகும். எதிர்கால ஆரோக்கியம் பாழாகாதவாறு இந்த சிகிச்சை முறைகள் உங்களுக்கு உதவும்.

### இதயத்திற்கு நலம் தரும் கொய்யாப்பழம்!

- கொய்யாப்பழத்தில் நீர் 7G சதவீதமும், மாப்பொருள் 15 சதவீதமும், புரதம் 15 சதவீதமும், கொழுப்பு 0.2 சதவீதமும், கல்சியம் 0.01 சதவீதமும், பொஸ்பரஸ் 0.04 சதவீதமும், இரும்புச் சத்து 1 யூனிற்றும், விற்றமின் சி 300 யூனிற்றும் நிறைந் துள்ளது.
- பச்சைப்பசேலென்ற நிறத்திலும், மஞ்சள் நிறத்திலும் இருந்தாலும், வெப்பம் மிகுந்த நிலங்களில் விளையும் கொயயாப் பழங்கள் தான் ருசியில் முதலிடம் வகிக்கின்றன.
- இதனைத் தொடர்ந்து சாப்பிட்டால், இரத்தத்தைச் சுத்தம செய்து, நிரந்தரமாக தலைவலிக்குத் தீர்வளிக்கிறது.
- நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் கொய்யாவுக்கு முக்கிய பங்கு உண்டு.

# மக்களுடன் முரண்பாடற்ற வகையில் நடத்துநர்கள், சாரதிகள் பணிபுரிய வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தியிருக்கும் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள், மக்களின் சிரமமற்ற போக்குவரத்து தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும். நடத்துநர்களும் சாரதிகளும் மக்களுடன் முரண்பாடற்ற விதத்தில் சேவையாற்றுவதை அவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தவறின் மக்கள் மாற்று போக்குவரத்து மார்க்கங்களை அணுக வேண்டியநிலைக்கு தள்ளப்படுவர் என ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட தனியார் போக்குவரத்து சேவை சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

நீண்டகால யுத்த நெருக்கடிக்குள் சிக்குண்டு தமது பொருளாதாரங்களை முழுமையாக இழந்தநிலையில் மீண்டும் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் வங்கிக் கடன் களைப் பெற்றும் பேருந்துகளைக் கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தியிருக்கும் உரிமையாளர்கள், மக்களின் சிரமமற்ற போக்குவரத்து தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும்

பேருந்துகளின் நடத்துநர்களும் சாரதிகளும் மக்களுடன் முரண்பாடற்றவிதத்தில் சேவையாற்றுவதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் மக்களுடன் முரண்பட்டு சேவையாற்றுகின்ற சந்தர்ப்பத்தில் மக்கள் மாற்று போக்குவரத்து மார்க்கங்களை அணுகவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர் இதனால் பேருந்து உரிமையாளர்களின் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு எனக் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட தனியார போக்குவரத்து சேவை சங்கத்தின் புதிய நிர்வாகத்தெரிவு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது சங்கத்தின் தலைவராக ஜெகதீஸ்வரனும்(ஆஞ்சி) செயலாளராக ஜமுனாகரனும், பொருளாளராக தயானந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர். சங்கத்தின் உபதலைவராக ஆனந்தன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண போக்குவரத்து துறை அமைச்சர் டெனீஸ்வரன், கரைச்சி பிரதேச செயலக கணக்காளர் மற்றும சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் உரிமையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு துரித முன்னேற்றம்

## பிரதம மந்திரி தெரிவிப்பு

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, வடக்கு கிழக்கு மாகாணங்கள் துரித கதியில் பொருளாதார முன்னேற்றம் கண்டு வருகிறது என பிரதம மந்திரி டி.எம்.ஜெயரெட்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

யுத்தத்தினால் பாதிப்புக்குட்பட்ட வடக்கு- கிழக்கு பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பை இயல்புநிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான பௌதீக மற்றும் சமூக ரீதியான திட்டங்கள் பல அப்பிரதேசங்களில் துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கும் புனர்வாழ்வளிப்பதற்கும் ஒரு குறுகிய காலத்தினுள் முடியுமாகியது.

விவசாயம்- மீன்பிடி மற்றும் சிறுகைத்தொழில் போன்ற துறைகளை மீண்டும் உயிர்ப்பிப்பதன் ஊடாக மக்களின் வாழ்வாதாரங்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. வடமாகாண சபையை அமைப்பதற்காக 2013- செப்டெம்பர் மாதம் தேர்தலை வெற்றிகரமாக நடாத்தி முடித்ததனால் அது நாட்டில் வாழும பல் இனத்தவர்களிடையேயும் நல்லிணக்கம்- புரிந்துணர்வு மற்றும் சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான திருப்பு முனையாக அமைந்தது.


ஜனாதிபதியின் தூர நோக்குள்ள தலைமைத்துவத்தின் கீழ் இந்த எட்டு வருட காலத்தினுள் சக்தி வள உருவாக்கம் நீர வழங்கல் நீர்பாசனம் கப்பற்துறை- விமானப் போக்குவரத்து தொலைத தொடர்பு தகவல் தொழில்நுட்பம்- போக்குவரத்து வீடமைப்பு- போன்ற பொருளாதார ரீதியாக மிக முக்கியத்துவம் வாய்ந்த துறைகளை அடிப்படையகாகக் கொண்ட பாரிய அளவிலான சில கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனை சிறப்பான விடயமாகக் குறிப்பிடலாம் எனத்ரிவிக்கப்பட்டுள்ளது.

# காந்தீயம் வெளிவந்துள்ளது

அகில இலங்கை காந்தி சேவாசங்கத்தின் வெளியீடான காந்தீயத்தின் ஜனவரி-பெப்ரவரி இதழ் வெளிவந்துள்ளது. காந்தி ஜெயந்தி தின நிகழ்வில் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆற்றிய உரையின் சுருக்கம, கவிஞர் மணிமன்றனின் மனித நேயக்குரவர் காந்தி எனும் தலைப்பிலான கவிதை இலங்கை இனப்பிரச்சினையின் நெல்சன் மண்டேலாவின் என்ற தலைப்பிலான ஆசிரியத் தலையங்கம், மில்க்வைற் பற்றி அண்ணா தொழிலதிபர் நடராசாவின் நினைவுகள், பஹசர-2013 சுவரொட்டியும் தமிழும் என்ற கட்டுரை, து.தசோனியா வின் சமூகத்திற்கு வேண்டிய அகிம்சை என்ற கட்டுரை மற்றும் காந்தி ஜெயந்தி படங்கள் இவ் இதழை அலங்கரிக்கின்றன.

இவ் இதழின் இலவசப் பிரதியொன்றைப் பெற விரும்புவர்கள் சுயமுகவரி எழுதப்பட்டு ரூபா 5 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர் காந்தியம இல 774 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியுமென் "காந்தீயம்" ஆசிரியர் எம்ஷாந்தன் சந்திய கீர்த்தி தெரிவித்துள்ளார்.

## பரமர் சங்கமம்



'குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் குட்டுபடவேணும்' எண்டு சொல்லுவினம். அதுபோலதான் எங்கை போனாலும் முகம் செல்ல அறிமுகம் பழக்கம், உத்தி யோகம், பதவி, பவுசெண்டு கனக்க வேண்டிக்கிடக்குப் பாருங்கோ!

கனக்க வேண்டாம் ஏழை, பரதேசிகளுக்கு கெண்டு யாழ்ப்பாணப் பெரிய கடேக்கை கட்டிவிட்டிருக்கிற தருமாஸ்பத்திரிக்குப் போனால் அங்கை என்ன நடக்குது. பணக்காரன், உத்தியோகத்தன், படையினர், குருமார், ஆசுப்பத்தரி வேலைக்காரரெண்டு அவையள் தானை முன்னுக்குப் போகினம்.

விடியப்புறம் இருட்டோடை எழும்பி கால், அரை, முக்கால், ஒருகட்டை தூரம் நடந்து பிடிச்சு தீவிலே இருந்தும் கிழக்காலை பருத்தித்துறை, இயக்கச்சி, வடக்காலை மாவிட்டபுரம், தெல்லிப்பளை மேற்காலை காரைநகர், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மாதகல், கீரிமலையெண்டு பஸ் ஏறிவந்து நாப்பது துண்டுகளுக்குள்ளை இடம் புடிச்சும் எங்களுக்குப் பின்னால ஒன்பது, பத்து மணிக்கும் வாறவையள் உடனும் உள்ளபோய் அலுவலை முடிச்சுக் கொண்டு போயிடினம்.

காலமை தேத்தண்ணியும் இல்லாமல் வயிறு காந்தக் காந்த இருந்து அவையளைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு ஒரு யோசினை ஒடிச்சுது. ஆசுப்பத்திரியில எல்லாமா ஆயிரக் கணக்கில வேலை செய்யினம் அவையளும், அவைக்கு தெரிஞ்சவையளும், வசதிபடைச்சவையளும் வைத்தியம் பாக்கவே நேரஞ்சரியாயிடும், பின்னையேன் அப்பாவியளைக் கூப்பிட்டு நம்பர்களைக் குடுத்துப்பேய்க் காட்டுவான்.

எல்லாம் ஏழை பரதேசியளை மையமா வைச்சுத்தான் துவங்குவினம். பிறகு அனுபவிக்கிறேல்லாம் வசதி படைச்சவையள்தான். தறுமாஸ்பத்தியில் குடுக்கிற குளிசையள் வேலை செய்யாது. வெளியால காசு கட்டிப்பாக்கிறம், வாங் கிற குளிசையளுந்தான் வருத்தத்தைத் தீர்க்குமெண்டுற வசதியுள்ளதுகள் பின்னையேன் எங்கடை தருமாஸ்பத்திரியளுக்கு வரிஞ்சு கட்டிக்கொண்டு வருதுகள்?

போன ஜனவரி 13ஆம் திகதி திங்கட்கிழமை கண் கொஞ்சம் பூஞ்சலடிக்கிறதுக்குக் காட்டப்போனன். எங்கள்ள கொஞ்சப்பேர் டிக்கட்டுகளை அடுக்கிப் போட்டிருந்தும். வெள்ளைச் சட்டைக் காறர்களும் அவையளுக்குப் பழக்கமானவையளும் வந்து வந்து காட்டிக் கொண்டு போச்சினம்.

மதியம் பன்ரெண்டு மணியடிக்கேக்கதான் என்னைக் கூப்பிட்டிச்சினம். அந்தச் சோதிக்கிற பொடியனிட்டை கேட்டன் உப்புடியேன் எங்கள விடியப் புறத்தோட கூப்பிட்டு நம்பர்களைத் தந்திட்டு மற்றவையளைப் பாக்கிறீங்கேண்டு. பொடியன் சொல்லிச்சு அதுதானாம் சட்டமெண்டு!

பாருங்கோவன் எல்லாரும் பணக்காரராகவும், பதவிக் காறராகவும் இருந்தா உலகத்தில ஏற்றத்தாழ்வு இருக்காது. 'குட்டுப் பட்டாலும் மோதிரப் கையாலை குட்டுப்பட வேணு' மெண்டு பழமொழியும் இல்லாமல் போயிடும் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# கல்வி, சுகாதாரத் துறைகளில் யாழ்.மாவட்டம் அதிவேக முன்னேற்றம்

## அரசாங்க அதிபர் பெருமிதம்



யாழ்.மாவட்டம் சுகாதாரம் கல்வி போன்ற துறைகளில் அதிவேக முன்னேற்றமடைந்து வரும் நிலையில் உற்பத்தித் துறையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையே கண்டுவருவதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று செயலகத்தில் நடைபெற்ற இலங்கையின் 66 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயம், கைத் தொழில், சுற்றுலாத்துறை ஆகி யவற்றிலேயே தற்சமயம் குறிபபிடத்தக்க முன்னேற்றத்தை கண்டு வருவதாகவும் தெரிவித்த அவர் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியேற்றத்திட்டங்கள் கடந்த காலங்களில் துரித கதியில் முன்னெடுக்கப்படவிருந்தது. புதிய ஆண்டிலும் இதனைத் துரிதமாக முன்னெடுக்க அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வீடமைப்பு, மீள்குடியேறிய மக்களுக்கான வாழ்வாதார நடவடிக்கைகளும் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்த அரச அதிபர் வெறுமனே அபிவிருத்தித்திட்டங்களின் பால் நின்றுவிடாது இந்த நாட்டில் சமூக அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் இனங்களுக்கிடையே ஒற்றுமையும் மொழிமேம்பாடும் அவசியம என்ற வகையில் அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. கடந்த காலங்களில் சிங்கள சகோதரர்களுடன் இருந்து வேலை செய்யாத நிலை இருந்து வந்தது ஆனால் தற்சமயம் சிங்கள சகோதரர்கள் வடமாகா ணங்களில் தமிழ்ச் சகோதரர்களுடன் கலந்து வேலை செய்யக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதுவே இந்த சமூக அபிவிருத்தியின் மேம்பாடாக இருக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் 50 இற்கும மேற்பட்ட சிங்கள சகோதரர்களுக்கு தற்சமயம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டிருக்கும் அவர்கள் இந்த மாவட்டத்தின் கிராமப்புறங்களிலே இணைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இவ்வாறு இணைக்கப்பட்டிருப்பதன் ஊடாக அந்தக் கிராமங்களின் ஊடாக அந்தக் கிராமங்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களை அவர்கள் பெறும் அதேவேளை தங்களது கலாசார விழுமியங்களை மற்றவர்களுடன் பரிசீலித்துக் கொள்ளும் நிலைமை உருவாகும் இதுவே சமூக ஒற்றுமையை ஏற்படுத்தவல்லது என்றார். (பா)

# புற்றுநோயாளர் பட்டியலில் வருடாந்தம் 15,000 பேர் இணைவு

புற்றுநோயாளர்கள் பட்டியலில் வருடாந்தம் 15,000 நோயாளர்கள் இணைந்துகொள்வதாக புற்றுநோய் ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச புற்றுநோய் தினத்தை முன்னிட்டு, மக்களை தெளிவுபடுத்தும் செயற்றிட்டங்கள் சில முன்னெடுக்கப்படுவதாக தேசிய புற்றுநோய் ஒழிப்பு பிரிவு தெரிவித்தது.

45 வயதிற்குப் பின்னர், மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்வது அனைவரினதும் சுகாதாரத்திற்கு சிறந்ததொரு விடயம் என கடந்த காலங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளுக்கமைய நாளாந்தம் இருவர் அல்லது மூவர் புற்றுநோய் காரணமாக உயிரிழப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# க.பொ.த. (உ/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (A/L) Examination model Paper

## பௌதீகப் புவியியல்

ஆசிரியர் : கலாநிதி க.குணராசா

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

1) இலங்கையின் மத்திய சூழல் அதிகாரசபை நிறுவப்பட்டது
 1) 1980 இல் 2)1981 இல் 3) 1982 இல் 4)1983 இல் (........)

2) பின்வருவனவற்றுள் எது இலங்கையில் இரண்டு பிரத்தியேகமாக இயற்கை ஒதுக்குகளின் பெயர்களைத் தருகின்றது
 1) ஹக்கலவும் ஹோட்டன் சமவெளியும்
 2) யாலவும் புந்தலவும்
 3) ஹக்கலவும் யாலவும்
 4) யாலவும் வில்பத்தும் (.........)

3) உலக புவித்தினம் கொண்டாடப்படுவது ?
 1) மார்ச் 8 ஆம் திகதியன்று
 2) ஏப்ரல் 22 ஆம் திகதியன்று
 3) யூன் 5 ஆம் திகதியன்று
 4) யூலை 11 ஆம் திகதியன்று (........)

4) அமில மழைக்கு காரணமாக அமைந்துள்ள முக்கியமான இரு வாயுக்களாவன
 1) காபனீர்ரொட்வைட்டும் ஐதரசனும்
 2) கந்தகவீரொட்சைட்டும நைதரசனின் ஒட்சைட்டுகளும்
 3) காபனீர்ரொட்சைட்டும் ஒட்சிசனும்
 4) கந்தகவீரொட்சைட்டும் ஐதரசனும் (........)

5) டீசல் எரிபொருளில் காணப்படும் பிரதானமான மாசடையச் செய்யும் பொருளானது
 1) ஈயம் 2) கந்தகம் 3) நைதரசன் 4) சிலிக்கன் (.........)


6) சாகல் என்று அழைக்கப்படுவது
 1) உயிர்ப்பல்வகைமை அதிகமாயுள்ள பிரதேசமாகும்
 2) மழைவீழ்ச்சியின் பயன்படுதன்மை அதிகமாயுள்ள பிரதேமாகும்
 3) பாலைவனமாதலில் வருடாந்த விகிதம் கூடுதலாயுள்ள பிரதேசமாகும்
 4) அதிகளவு பரப்பில் அயன் ஈரநிலங்கள் காணப்படும் பிரதேமாகும் (........)

7) அழிவினால் ஆபத்தை எதிர்நோக்கும் விலக்கினங்களைத் திறமையாகப் பாதுகாக்கப்படுதற்கு
 1) நிலச்சரிவுகளையும் நீர் அரிப்பையும் தடுக்க வேண்டும்
 2) மீள்வளமாக்கி இரைகௌவிகளை அறிமுகப்படுத்த வேண்டும்
 3) இயற்கையான வாழிடத்தைப் பாதுகாப்பதோடு சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்
 4) விலங்குப் பூங்காக்களை அமைப்பதோடு நீர்த்தேக்கங்களையும் அமைத்தல் வேண்டும்

8) பின்வரும் கூற்றுகளுள் எக்கூற்று புறுாண்ட்லன்ட் (Brundtland) ஆணைக்குழுவின் பிரதான நோக்கங்களைத் தருகின்றது
 1) காற்றின் தரத்தைப் பொறுத்து பாதுகாப்பதும் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும்
 2) நீரின் தரத்தை பேணுவதும் அழிவுக்குட்படுவதால் ஆபத்தை எதிர்நோக்கும் உயிரினங்களை பாதுகாக்கும்
 3) நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் இயற்கை சமநிலையை பேணுவதும்
 4) காடுகளைப் பாதுகாப்பதும் வெள்ளப்பெருக்கைத் தடுப்பதும் (........)

9) குறிப்பாக சூழலுக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கும் பின்வரும் உலக தாபனங்களுள் எது முதல் நிறுவப்பட்டது?
 1) ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித்திட்டம் (UNEP)
 2) இயற்கையைப் பேணுவதற்கான சர்வதேச ஒன்றியம் (IUCN)
 3) உலக வன விலங்கு நிதியம் (WWF)
 4) கிறீன்பீஸ் இன்டர்நனல் (.........)

10) பின்வரும் வரிப்படம் ஒரு சூழற்றொகுதியின் மூன்று ஆக்கக்கூறுகளைக் காட்டுகின்றது. இவ்வாக்கக் கூறுகளுக்கிடையிலான தொடர்பின் திசையினை பின்வரும் விடைகளுள் எது சரியாகத் தருவது




 1) மண் → குப்பை → உயிரினத்திணிவு → மண்
 2) மண் → உயிரினத்திணிவு → குப்பை → மண்
 3) உயிரினத்திணிவு → மண் → குப்பை → உயிரினத்திணிவு
 4) குப்பை → உயிரினத்திணிவு → மண் → குப்பை (........:)

11) ஈரநிலங்களாவன
 1) நீர்த் தாவரங்களைப் பயிரிடுவதற்காக மீட்கப்பட்ட நிலங்களாகும்
 2) ஈரலிப்பான அயனப்பகுதிகளாகும்
 3) ஆவியாதலிலும் பார்க்க மழைவீழ்ச்சி கூடிய பகுதிகளாகும்
 4) நிரந்திரமாகவோ தறிகாலிகமாகவோ ஆழங்குறைந்த நீரினால் மூழ்கடிக்கப்பட்ட பகுதிகளாகும். (..........)

12) அயனப்பகுதிகளில் கூடுதலாகக் காணப்படும் இரண்டு ஈரநிலச் சூழற்றொகுதிகளாவன
 1) கண்டற்றதாவரங்களும் உவர் சேற்றுநிலங்களும்
 2) கண்டற்றாவரங்களும் முருங்கைக் கற்பார் தொடர்களும்
 3) டைகாவும் மிதக்குமுயிர் நுணுக்கங்களும்
 4) கடற்புல்லும் முற்றா நிலக்கரிச் சேற்றுநிலங்களும் (..........)

13) இலங்கையின் முதலாவது 'ரம்ஸா' ஈரநிலமானது
 1) கொக்கிளாய் கடனீரேரி
 2) புந்தல தேசிய பூங்கா
 3) அறுகம் குடா
 4) முத்துராஜவெல (...........)

14) 2002 ஆம் ஆண்டில் நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி பற்றிய உலக உச்சி மாநாடு நடைபெற்றது
 1) நைரோபியில் 2) ஜோஹனஸ் பேர்க்கில்
 3) கியோட்டோவில் 4) மொன்றியலில் (........)

15) உயிர்ப்பல்வகைமை அதிக அளவாயுள்ளது
 1) சவன்னாவில்
 2) அயனமழைக்காடுகளில்
 3) இடைவெப்ப இலையுதிர் காடுகளில்
 4) ஊசியிலைக்காடுகளில் (........)

16) பச்சை வீட்டு வாயுக்களில் இரண்டு
 1) காபன்மொனொக்சைட்டும் ஐதரசனும்
 2) காபனீரொட்சைட்டும் நீராவியும்
 3) காபன்மொனொக்சைட்டும் ஒட்சிசனும்
 4) மீதேனும் நைதரசனுமாகும். (........)

17) இலங்கையில் ஏற்பட்ட பசுமைப்புரட்சியின் பிரதான பாதகமான சூழற்றாக்கங்களில் ஒன்று:
 1) யானைகள் படிப்படியாக அற்றுபோதல்
 2) கண்டல் தாவரங்கள் குறைந்து செல்லல்
 3) காவிகளால் ஏற்படும் நோய் பரவல்
 4) அதிகரித்த இரசாயன உள்ளீடுகளில் ஏற்பட்ட நீர்மாசடைவு (.......)

18) பின்வருவனவற்றுள் எது இலங்கையின் தேசியபூங்கா எனப் பிரகடனப்படுத்தப்பட்டது
 1) கல் ஓயாத் தேசியப்பூங்கா 2) மாதுறுஓயாத் தேசியபூங்கா
 3) ஹீறுலுவாவி தேசிய பூங்கா 4) றுகுணு தேசியபூங்கா (.......)

19) பின்னவலவிலுள்ள யானைகளின் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?
 1) கண்டி 2) கேகாலை
 3) கம்பஹா 4) குருநாகல் (........)

20) இலங்கையில் 2001 ஆம் ஆண்டின் வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இரண்டு மாவட்டங்களாவன:
 1) அம்பாந்தோட்டையும் மொனராகலையும்
 2) அம்பாந்தோட்டையும் திருகோணமலையும்
 3) புத்தளமும் வவுனியாவும்
 4) புத்தளமும் பொலநறுவையும்

21) 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் காட்டுத்தீயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அவுஸ்ரேலிய நகரம்
 1) கன்பெராவாகும் 2) சிட்னியாகும்
 3) பேர்த்தாகும் 4) அடிலெயிட்டாகும்

22) இலங்கையின் பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஈயமற்ற பெற்றோல் பயன்பாட்டை ஊக்குவிப்பது:
 1) பிரதேச ஒத்துழைப்புக்கான தென்னாசிய நாடுகளின் ஒன்றியத்தின் (சார்க்) சூழல் சார் திட்டத்தின் படி
 2) ஈயஞ்சேர்ந்த பெற்றோலியத்தினால் சுற்றாடல் மாசடைவதனால்
 3) ஈயஞ்சேர்ந்த பெற்றோலின் விலை கூடுதலாயிருப்பதனால்
 4) தென்னாசிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (SAFTA) இலங்கை இணைந்திருப்பதனால் (.......)

23) உயிர்ப்பல்வகைமை என்றால்
 ) நிலத்திலும் ஏரிகளிலும் காணப்படும் தாவரங்களில் பல்வகைமை
 2) விலங்குகளின் பல்வகைமையும் அவற்றினால் மனிதர்களில் ஏற்படும் செல்வாக்கும்
 3) குறிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தின் தாவரங்களினதும் விலங்குகளினதும் பல்வகைமை
 4) அயனபிரதேசத்தினதும் இடைவெப்ப பிரதேசத்தினதும் விலங்குகளின் பல்வகைமை (........)

24) பின்வருவனவற்றில் எந்தச்சோடி இலங்கையின் இரு வகையான புல் நிலங்களை உள்ளடக்கியது?
 1) நீர்த்தாழைகளும் பத்தனாக்களும்
 2) வில்லுகளும் உவர்சேற்று நிலப்புற்றுகளும்
 3) உவர் சேற்று நிலைப்புற்றுகளும் நீர்த்தாழைகளும்
 4) வில்லுகளும் பத்தனாக்களும் (.......)

25) பின்வருவனவற்றில் முருகைகற்பாறைகளுக்குப் பதிலாக சுண்ணாம்பு உற்பத்திக்கான மூலப்பொருளாகப் பயன்படுத்தக்கூடியது எது ?
 1) பொசுபேற்று 2) கருங்கல்
 3) தொலமைற்று 4) சல்பேற்று (.......)

26) திண்மக்கழிவுகளை முகாமைப்படுத்துவதற்கான மூன்று முக்கிய தேவைகளவான:
 ) கிராமிய அபிவிருத்தி, குடித்தொகைக் கட்டுப்பாடு, கல்வி
 2) கழிவுகளை குறைத்தல், மீள் சுழற்சிக்குட்படுத்தல், மீளபாவித்தல்
 3) தகவற்தொழிநுட்பம் தொடர்பாடல் போக்குவரத்து
 4) வறுமை ஒழிப்பு, மக்களின பங்களிப்பு, நகரத்திட்டமிடல் (.......)

27) ஆறுகளுக்கு குறுக்காக உயர் அணைக்கட்டுக்களை அமைப்பதால் கடுமையாகப் பாதிக்கப்படுவன
 1) வடிநிலத்தின் கீழ்ப்பகுதியின் உயிர்ப்பல்வகைமை
 2) நிலப்பரப்பினை அண்மித்த பகுதியினது வடிகால்அடர்த்தி
 3) வடிநிலத்தின் மேற்பகுதியின் உவர் சேற்று நிலம்
 4) வடிநிலத்தின் கீழ்ப்பகுதியின் படிவுவீழ்ச்சி (......)

28) இலங்கையில் சூழற்சட்டம் இயற்றப்பட்டது
1) 1980  2) 1981  3) 1971  4) 1970  (.......)

29) இன்றைய கடற்கரையோரச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டுபின்னர் மாற்றியமைக்கப்பட்டது
1)1952 இலும் 1971 இலும்
2) 1952 இலும் 1981 இலும்
3) 1988 இலும் 1999 இலும்
4) 1994 இலும் 1995 இலும்

30) யால தேசிய பூங்கா பரந்துள்ள மாவட்டங்களாவன
1) அம்பாறை, அம்பாந்தோட்டை, மொனறாகல
2) அம்பாந்தோட்டை, மாத்தறை, இரத்தினபுரி
3) அம்பாந்தோட்டை, அம்பாறை, பதுளை
4) மொனாறாகலை, பதுளை, அம்பாந்தோட்டை (..........)

31) பின்வரும் சர்வதேச சூழல் நிறுவனங்களில் எது முதலில் நிறுவப்பட்டது?
1) இயற்கையைப் பேணிக்காக்கும் சர்வதேச ஒன்றியம் (IUCN)
2) உலகறோர்ச் நிறுவனம்
3) உலக வன விலங்கு நிதியம்
4) ஜக்கிய நாடுகளின் சூழற்திட்டம் (..........)

32 பின்வரும் அணுகுமுறைகளுள் எவ்வணுகுமுறை சூழலைப்பேணும் ஒழுக்கவியலிலிருந்து முக்கியமாக பங்களிக்கின்றது
1) மதரீதியான அணுகுமுறை
2) மானிட ஆதிக்கவாத அணுகுமுறை
3) நியதிவாத அணுகுமுறை
4) தாராள அணுகுமுறை (........)

33) பின்வருவனவற்றில் எக்காரணி நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியில் முக்கிய பங்கினை வகிக்கின்றது?
1) உட்கட்டமைப்பு  2) குடித்தொகை
3) வெளிநாட்டு உதவி  4) அரசாங்கக் கொள்கை
(.........)


34) உயிரின மண்டலத்தின் உள்ளடக்கப்படுபவை
1) மனிதனும் தாவரங்களும்
2) விலங்குகளும் மனிதரும்
3) மண்ணும் தாவரங்களும்
4) தாவரங்களும் விலங்குகளும் (........)

35) சூழற்றொகுதி ஒன்றில் உள்ளடக்கப்படுபவை
1) விலங்குகள், தாவரங்கள், வளிமண்டலம்
2) உயிருள்ள கூறுகள், உயிரற்ற கூறுகள்
3) நீருக்குரிய கூறுகள், மண்ணுக்குரிய கூறுகள்
4) மண்ணுக்குரிய கூறுகள், வழிமண்டலத்துக்குரிய கூறுகள்
(..........)

36) உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் பிரதான செயல் முறையினைத் தெரிவு செய்க
1) சூழலின் போசாக்கு மாற்றம்  2) ஒளித்தொகுப்பு
3) வளிமண்டல கதிர் வீசல்  4) இயற்கைத்தேர்வு
(........)

37) புவி உயிரின இரசாயன வட்டம் என்றால்
1) வளிமண்டலத்தினது சக்திப்பாய்ச்சல்
2) தாவரங்களினால் நீர் உறிஞ்சப்படுதல்
3) தாவர விலங்கு மண் என்பவற்றினூடாக பொருட்களின் சுழற்சி நகர்வு
4) கற்கோளத்தின் சக்திப்பாய்ச்சல் (........)

38) கீழேயுள்ள படத்தின் இயற்கைக் காட்டினது தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பிரதான கூறுகள் காட்டப்பட்டுள்ளன பின்வருவனவற்றுள் எக்கூற்று கூறுகளுக்கிடையிலான சராசரி தொடர்பினைத் தருகின்றது




1) மண் → தாவரங்கள் →விலங்குகள் →பிரிகையாக்கிகள்
2) தாவரங்கள் →பிரிகையாக்கிகள் →விலங்குகள் →மண்
3) பிரிகையாக்கிகள் →விலங்குகள் →தாவரங்கள் →மண
4) மண் → விலங்குகள் → பிரிகையாக்கிகள்→ தாவரங்கள் (........)

39) • வளிமண்டலத்தில் மீதேன் வாயுவினது ($CH_4$) செறிவினை அதிகரிக்கும் நடவடிக்கைகள் எவை?
1) தரிசு நிலங்களின் மீள் காடாக்கம்
2) கடல் நீரின் உவர்த்தன்மை அகற்றல்
3) இரைமீட்டும் விலங்குகளின் மந்தை ஆதிக்கம்
4) இறப்பர் பயிர் செய்கை (...........)

40) அயன மழைக்காடுகள் அகற்றுதல் பரவலாக இடம்பெறுவது
1) தென்கிழக்கு ஆசியா
2) லத்தீன் அமெரிக்கா
3) தென் ஆசியா
4) மத்திய ஆபிரிக்கா (........)

41) பின்வரும் சோடிகளின் எச் சோடி நகர்ப்புற வளிமாசாக்கிகள் எனப்படுகிறது
1) காற்றுத் தொங்கல்களும் நைதரசனும்
2) கிருமி நாசினியும் களைக்கொல்லியும்
3) காற்றுத்தொங்கல்களும், காபனீரொக்சைட்டும்
4) ஹீலியமும் தூசும் (........)

42) கடல் மட்ட உயர்வினால் ஏற்படும் பிரதான பாதிப்புகளில் ஒன்று
1) கடற்கரையோர ஈரநிலங்களின் பரப்பு அதிகரித்தல்
2) கடற்கரையோரப்பகுதியின் நீர்மட்டம் குறைவடைதல்
3) கடற்கரையோரப் பகுதியின் காலநிலை வரட்சியடைந்து செல்லல்
4) கடற்கரையோரப் பகுதிகளில் கழிமுகங்கள் விருத்தியடைதல் (...........)

43) இலங்கையின் இரு பிரதான வனவிலங்குச் சரணாலயங்களாவன
1) புகுந்தல அளுத்கம
2) சிங்கராஜா, றக்குவானை
3) வில்பத்து, புகுந்தல
4) தம்பதெனியா, யால (..........)

44) உயிர் வாழ் முருகைக்கற் பாறைகள் அகழ்ந்தெடுக்கப்படுவதனால் தரம் இழக்கப்படுவது
1) ஈரநிலங்கள்
2) கடனீரேரிகள்
3) கடல் சார் உயிர்பல்லினத்தன்மை
4) நீர்த்தாழைகள் (........)

45) ஆற்றுப்படுக்கைளில் மண் அகழ்வதனால் விளைவது
1) சராசரி கடல் மட்டம் வீழ்ச்சியடைதல்
2) அயற்கடற்கரையோரத்தின்னல்
3) மேல் நீரேந்துப் பரப்பில் படிதல் நிலவுருவங்களின் உருவாக்கம்
4) காபன் வட்டத்தின் மாற்றங்கள் (........)

46) பின்வருவனவற்றுள் எது மீளப் பெற முடியாத வளமாகும்?
1) காற்று
2) உயிர்ச்சுவட்டு எரி பொருட்கள்
3) சமுத்திர நீரோட்டங்கள்
4) ஞாயிற்றுச் சக்தி (........)

47) பின்வருவனவற்றுள் 1995 ஆம் ஆண்டின் இலங்கையின் பாரிய காடாக்க திட்டத்தில் தரப்பட்டுள்ள விதப்புரை எது?
1) தனியார் காடுகளின் முகாமைத்துவம்
2) சகல காட்டுப்பொருட்களையும் ஏற்றுமதி செய்தல்
3) மரப்பயன்பாட்டைக் குறைப்பதற்கு பிளாஸ்டிக் தளபாடங்களின் இறக்குமதி
4) விறகுப் பயன்பாட்டைத் தடை செய்தல் (........)

48) பின்வரும் ஒப்பந்தங்களில் ஒப்பந்தம் ஈர நிலங்களின் பாதுகாப்பைப் பற்றியது?
1) மொன்றியல் பிரகடனம்
2) றம்சா ஒப்பந்தம்
3) நிகழ்ச்சி நிரல் 21 (Agenda-21)
4) பாலி பிரகடனம் (........)

49) விருத்தியடைந்து வரும் நாடுகளில் நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குப் பிரதானமாகத் தேவைப்படுவனவற்றில் ஒன்று
1) வறுமை ஒழிப்பு
2) சமூகத்திலுள்ள ஏழைகளைப் பராமரித்தல்
3) சேரிகளைத் தரமுயர்த்தல்
4) மத்திய வகுப்பினரின் சம்பளத்தை மீளமைத்தல் (........)

50) கடல் சார் உயிரினத் தொகுதிகளின் முதனிலை உற்பத்தியாக்கிகளாவன:
1) நண்டுகள்  2) மிதக்குமுயிர் நுணுக்குகள்
3) சுறாக்கள்  4) முருகைக்கற்கள்

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1.2 | 11.4 | 21.2 | 31.1 | 41.3 |
| 2.3 | 12.2 | 22.2 | 32.1 | 42.1 |
| 3.2 | 13.2 | 23.3 | 33.2 | 43.3 |
| 4.2 | 14.3 | 24.4 | 34.4 | 44.3 |
| 5.2 | 15.2 | 25.3 | 35.2 | 45.2 |
| 6.3 | 16.3 | 26.2 | 36.4 | 46.2 |
| 7.3 | 17.2 | 27.1 | 37.3 | 47.1 |
| 8.3 | 18.4 | 28.2 | 38.1 | 48.2 |
| 9.2 | 19.3 | 29.2 | 39.2 | 49.1 |
| 10.2 | 20.3 | 30.1 | 40.2 | 50.2 |

## பரீட்சைக்கு முன் பரிசில்கள் பெறுவோம்

மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்காக எங்கள் கல்விமுரசு இந்த வாரத்தில் இருந்து ஒரு புதிய நடைமுறையை அமுல்படுத்துகின்றது. ஞாயிறு, செவ்வாய் ஆகிய தினங்களில் வெளிவரும் புலமைப்பரிசில் வினாக்களுக்கான விடைகளை வினாத்தாளின் இலக்கத்துடன் தெளிவாக எழுதி அனுப்பவும், முன்னிலை பெறும் புள்ளிகளின் அடிப்படையில் கல்விமுரசு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கவுள்ளது. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைக்கு முன் இவ் விடைகள் அனுப்பி வைக்கப்படவேண்டும். அனுப்பி வைக்கப்படும் பெயர் விபரங்கள் புகைப்படத்துடன் வெளிவரும். அனுப்பவேண்டிய விபரங்கள்

1) முழுப்பெயர் :----------------------------------------
2) முகவரி :----------------------------------------
3) புகைப்படம் :----------------------------------------
4) தொலைபேசி இல:----------------------------------------

*குறிப்பு :- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் அந்த வாரத்திற்கான சரியானவிடைகள் பிரசுரமாகும்.*

# பல்லேகல கைத்தொழில் பேட்டையின் பல்வேறு இடர்பாடுகளுக்கு தீர்வு



(கொழும்பு)

கண்டி பல்லேகல கைத் தொழிற் பேட்டை தொழிற்துறையாளர்கள் கடந்த 20 வருட காலமாக எதிர்நோக்கி வந்திருந்த வாடகை தொடர்பிலான இடர்பாடுகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் தீர்வு காணப்பட்டுள்ளது.

கண்டி பல்லேகல பகுதியில் அமையப் பெற்றுள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கைத்தொழிற் பேட்டைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த முதலாம் திகதி விஜயம் மேற்கொண்டு தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

இதில் பல்லேகல கைத்தொழில் பேட்டையில் கட்டடத்திற்கான வாடகை கடந்த 20 ஆண்டுகாலமாக அதிகரிப்புச் செய்யப்படாத நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து அதனூடாக வாடகையை 7 சதவீத அதிகரிப்பை மேற்கொள்ள வழிவகை செய்வதுடன் அதற்கான இணக்கத்தையும் முதலீட்டாளர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டிருந்தார்.

இந்நிலையில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழிற்துறையாளர்கள் அமைச்சருக்கு தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

இதன்போது கைத்தொழிற் பேட்டையின் தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் துறைசார்ந்தோருடன் கலந்துரையாடிய அமைச்சர் அதன் மேம்பாடு மற்றும் செயற்றிறன் குறித்தும் கவனம் செலுத்தினார்.

கடந்த காலங்களில் குறித்த கைத்தொழில் பேட்டையின் நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டதுடன் எதிர்காலங்களில் அதனை வினைத்திறன்மிக்கதாக மாற்றியமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

கைத்தொழில் பேட்டையின் வளாகத்தை பார்வையிட்ட அமைச்சர். அங்குள்ள உள்ளக வீதிகள், கழிவு நீர் வாய்க்கால்கள் மின்னிணைப்பு உள்ளிட்ட உட்கட்டுமானங்கள் குறித்தும் கவனம் செலுத்தினார்.

இந்நிலையில் குறித்த கைத்தொழிற்பேட்டையினை மென்மேலும் வளர்த்தெடுப்பது மட்டுமன்றி கைத்தொழிற்துறையினை மேலும் விருத்தி செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்கவேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உடனிருந்தார்.

## கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை தன்வசம் வைத்திருந்த நபரொருவர் வனாத்தவில்லு காட்டுப்புலியங்குளம் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்த 17 ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 1985 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோர் மட்டக்களப்பில் மீள்குடியேற்றம்

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புணாணை கிழக்கில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை நேற்று முன்தினம் மீள்குடியேற்ற அமைச்சினால் மீள்குடியேற்றம் செய்யும் பணி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வாகரை பிரதேச செயலாளர் எஸ்.ஆர்.இராகுலநாயகி தலைமையில் அரசினர் தமிழ்க் கலவன பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வின் போது பிரதம அதிதிகளாக மீள் குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.எம்.எஸ் .சாள்ஸ், மற்றும் அமைச்சின் செயலாளர் இராணுவ உயர் அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் முயற்சியின் பயனாக இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இம்மக்கள் 1985,1990 காலப்பகுதியில் இடம்பெயர்ந்து வாழைச்சேனை, கொழும்பு என பல்வேறு இடங்ளில் வசித்து வந்துள்ளனர்.

முதற்கட்ட நடவடிக்கையாக 45 குடும்பங்களுக்கான 3 மில்லியன் ரூபா பெறுமதியான தற்காலிக வீடுகள் அமைக்கும் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் கடந்த காலத்தில் குறித்த பிரதேசத்தில் வாழ்ந்த சிங்கள,தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்களின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் பெயர் தெரிவு செய்யப்பட்டு மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளதாகவும் இரண்டாம் கட்ட நடவடிக்கையின்போது ஏனையோர்களின் பெயர் விபரம் பரிசீலிக்கப்பட்டு குடியேற்றம் செய்யப்படும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

# வெளிநாட்டில் நீதி வழங்க இலங்கை நீதிபதிகள் நியமனம்

இலங்கை நீதி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுஹத கம்லத் உள்ளிட்ட இரண்டு பேர் பிஜீ தீவுகளில் நீதவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலதிக சொலிசுட்டர் ஜெனரல் கம்லத மற்றும் சிரேஸ்ட சட்டத்தரணி அல்மீடியா குணரட்ன ஆகியோர் பீஜி தீவுகளின் நீதவான்களாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

பிஜீ தீவுகளின் ஜனாதிபதி ராட்டு ஈபலி நய்லாடிக்காவு , இரண்டு இலங்கை நீதவான்களையும் வரவேற்றுள்ளார். பிஜீ தீவுகளின் பிரதம நீதியரசர் அன்தனி கேட்ஸின் முன்னிலையில் இரண்டு இலங்கையர்களும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

# சுதந்திர தின நிகழ்வுகள்



யாழ்.மாவட்ட செயலகம்



ஆளுநர் செயலகம்



யாழ்.மாநகர சபை



கிளிநொச்சி மாவட்ட செயலகம்



இரத்ததானம்



கைதடியில்

(படங்கள்-பா.பார்த்தீபன், கே.நந்தகுமார், 29, 130)

### ராஜீவ்காந்தி கொலை வழக்கில்

# தூக்குத் தண்டனையை இரத்து செய்ய இந்திய மத்திய அரசு எதிர்ப்பு



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் தூக்குத்தண்டனையை இரத்துச் செய்ய இந்திய மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மூன்று பேரும் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை உச்ச நீதி மன்றத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், மூவரின் தூக்குத் தண்டனையை ஆயுளாக குறைக்க மத்திய அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மூவரின் கருணை மனுக்கள் மீது முடிவெடுக்க காலம் தாழ்த்தப்பட்டது உண்மைதான்,ஆனால் அந்த தாமதத்திற்கு காரணம் இல்லாமல் இல்லை என்றார். மேலும் கருணை மனு மீதான முடிவிற்கு காத்திருந்த கால கட்டத்தில் குற்றவாளிகள் எந்த வித துன்புறுத்தலுக்கும், மனித உரிமை அத்துமீறலுக்கும் ஆளாக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இறுதியாக, தூக்குத் தண்டனையை ஆயுளாக குறைக்க இந்த வழக்கு தகுதியற்றது என மத்திய அரசு தெரிவித்தது. வாதத்தை கேட்ட உச்ச நீதி மன்றம் இந்த வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது.

முன்னதாக கடந்த 30ஆம் திகதியன்று மூவர் தூக்குத் தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என வாதாடிய ராம் ஜெத்மலானி பேரறிவாளன், சாந்தன், முருகன் மூவருக்கும் 1998 ஜனவரி 28 அன்று தடா நீதி மன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டு, 1999 மே மாதம் 11ஆம் திகதி உச்ச நீதி மன்றத்தில் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவர்கள் குடியரசுத் தலைவருக்கு 2000ஆம் ஆண்டு ஏப்ரல் 26இல் கருணை மனு தாக்கல் செய்தனர். அந்தக் கருணை மனுக்கள் 11 ஆண்டுகளுக்கும் மேலாகக்கிடப்பில் போடப்பட்டு 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் 12இல் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, 2011 செப்ரெம்பர் 9இல் மரண தண்டனை நிறைவேற்ற உத்தரவு இடப்பட்டது.

11 வருடங்கள் 4 மாதங்கள் கருணை மனுக்கள் மீது எந்த முடிவும் எடுக்காமல் தாமதம் செய்ததற்கு மத்திய அரசு எந்த விளக்கமும் காரணமும் கூற முடியாது. உள்துறை அமைச்சகத்தில் 5 வருடங்கள் 6 மாதம் கருணை மனுக்கள் எந்த அசைவும் இல்லாமல் இருந்தன. அதுபோலவே, குடியரசுத் தலைவரிடம் 5 வருடங்கள் 6 மாதம் எந்த நகர்வும் இன்றிக் கிடந்தன. நியாயப்படுத்த முடியாத இந்தக் காலதாமதம் ஒன்றே இந்த மூவரின் மரண தண்டனையை இரத்துச் செய்வதற்கான அடிப்படையாகும் எனக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்து தேர்தலை இரத்து செய்யக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு தொடர எதிர்க்கட்சி முடிவு



தாய்லாந்து நாடாளுமன்றத் தேர்தலை இரத்துச் செய்யக் கோரி அரசியல் சாசன நீதி மன்றத்தை அணுகப்போவதாக பிரதான எதிர்க்கட்சியான ஜன நாயகக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஆனால், எதிர்க்கட்சிகளின் போராட்டம் காரணமாக 45 தொகுதிகளில் வாக்குப் பதிவு இரத்துச் செய்யப்பட்டது.

இந்நிலையில் எதிர்க்கட்சியினர் புறக்கணித்த இந்தத் தேர்தலை இரத்து செய்ய வேண்டும். என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இது தொடர்பாக ஜனநாயகக் கட்சியின துணைத் தலைவர் ஓங்கார்ட் லாம்பய்பூன் கூறுகையில், 'இந்த தேர்தலை இரத்துச் செய்யவேண்டும் அரசியல் சாசன நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளோம். அது தொடர்பான ஆதாரங்களை திரட்டி வருகிறோம்' என்றார். எதிர்க்கட்சிகளின் போராட்டம் காரணமாக மொத்தமுள்ள 4 கோடியே 87 இலட்சம் வாக்காளர்களில் 1 கோடியே 20 இலட்சம் பேர் வாக்களிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் தேர்தல் புறக்கணிப்பு, அரசு எதிர்ப்பாளர்களின் போராட்டம் உள்ளிட்ட காரணங்களால், அரசியல் சாசன நீதிமன்றத்தில் உரிய ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டால் தேர்தலை செல்லாது என அறிவிக்க வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

## ஏ.ஆர்.ரகுமானுக்கு கௌரவ டாக்டர் பட்டம்



இசை சேவையை பாராட்டி, ஏ.ஆர்.ரகுமானுக்கு, ஸ்கொட்லாந்து இசைக் கல்லூரி, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

'ரோஜா' படம் மூலம், தமிழ் திரையுலகில் இசையமைப்பாளராக அறிமுகமாகி, கன்னடம், மலையாளம், தெலுங்கு மற்றும் இந்திய படங்களுடன், 'ஸ்லம் டாக் மில்லினியர்' உட்பட, சில ஆங்கில படங்களுக்கும், ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார். இவரது இசைச் சேவையை பாராட்டி, ஸ்கொட்லாந்தில் உள்ள, ரொயல் கன்சர்வேட்டர் ஆப்ஸ்காட்லாந்து இசை கல்லூரி, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

கடந்த, 1ஆம் திகதி, ஸ்கொட்லாந்தில் நடந்த விழாவில், விருதைப் பெற்ற, ஏ.ஆர். ரகுமான் பேசும் போது, 'சர்வ தேச அளவில் இசை, நடனம், நாடகம், நடிப்பு எனப் பல கலைகளையும் கற்றுத் தரும் பழம்பெருமை வாய்ந்த கல்லூரி வழங்கிய இவ்விருது, எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது,' என்றார். இவ்விருது விழாவில், ஏ.ஆர்.ரகுமானின் இசைப் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

## இந்தியாவிடம் சீனா பாடம் கற்க வேண்டும்

### தலாய்லாமா ஆலோசனை



இந்தியாவிடம் பாடம் கற்றுக் கொள்ளுங்கள் என சீனாவுக்கு திபெத்திய தலைவர் தலாய் லாமா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் நடந்த ஷில்லாங் பல் கலைகழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும் போது அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தியாவில் வாழ்க்கைமுறை,மொழி மற்றும் பல்வேறுவிதமான மக்கள் இருந்தும் சகவாழ்வும் மகிழ்ச்சியோடும் வாழ்கின்றனார்.

முதல் முறையாக மேகாலயா வந்த போது மனிதன் வாழ அற்புதமான ஊர் என்று எனது மனதுக்கு தோன்றியது.

திபெத்தில் வாழும் மக்களுக்கு எதிராக சீனா குற்றம் சாட்டுவதை விட்டுவிட வேண்டும்.

நாம் பொதுவான நலன்களை மற்றும் பொதுவான பொருளாதார வளர்ச்சி சீனாவுடன் சொந்தம் கொண்டாட முயன்று வருகிறோம் காந்தி கொள்கையான அகிம்சையே, இந்தியாவின் அமைதியான வாழ்க்கைக் கருத்து அதன்மூலம் தான் ஒரு நல்ல ஆசியாவையும் மற்றும் நல்ல உலகத்தையே காணப் படவேண்டும் என்றார்.

### உலகச் செய்திகள்

## 2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஏலம்; 39 ஆயிரத்து 300 கோடி வருமானம்


(புதுடில்லி)

மத்திய அரசு 2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை நேற்று முன்தினம் ஏலம் விடப்பட்டது. இதில், ஒரே நாளில் அரசுக்கு 39 ஆயிரத்து 300 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. இந்த வருமானத்தின் மூலம் கடந்த காலத்தில் விற்கப்பட்ட ஸ்பெக்ட்ரம் உரிமம் குறைந்த விலைக்கே விற்கப்பட்டு, நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்பதும், ஊழல் நடந்திருப்பது நிரூபணம் ஆகிறது.

2 ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டினால் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் கோடி நாட்டிற்கு இழப்பு ஏற்பட்டதாக தணிக்கைக் துறை வெளியிட்ட அறிக்கையின்படி, பல கைதுகள், அரசியல் மாற்றம், லைசென்ஸ் இரத்து, என அடுத்தடுத்த சம்பவங்கள் இடம்பெற்றது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பல சுற்றுக்களாக ஏலம் நடாத்தப்பட்டது.

900 மெகா ஹர்ட்ஸ் , 1800 மெகா ஹார்ட்ஸ் பாண்ட் ஸ்பெக்ட்ரம் ஏலம் விடப்பட்டது. 16 ஆயிரம் கோடிக்கு (900 மெகா ஹார்ட்ஸ்), 23 ஆயிரம் கோடிக்கு (1800 மெகா ஹார்ட்ஸ்) ஆக மொத்தம் 39 ஆயிரத்து 300 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டது.



இது குறித்து தொலைத் தொடர்பு செயலர் எப்.எம். பருக்கி, தெரிவிக்கையில், 'நாங்கள் பட்ஜெட் வருமான இலக்கை எட்டியுள்ளோம் என்று நம்புகிறோம். 2013 - 2014 ஆம் ஆண் டுக்கான ஸ்பெக்ட்ரம் வரவு இலக்கு 40 ஆயிரத்து 874 கோடி ரூபாய் நிர்ணயிக்கப் பட்டிருந்தது என்றார்.

(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)

## இராணுவத்தை....

**யோகா:** இராணுவ முகாம்களுக்கு அருகில் வாழுகின்ற மக்கள் தமது குடும்ப நிகழ்வுகளுக்கு இராணுவச் சிப்பாய்களை அழைத்து கூடிக் குலாவியபோதும், இராணுவம் மீதான அச்சத்துக் குட்பட்டவர்களாகத்தான் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்! இந்நிலையில் இராணுவப் பிரசன்னத்தை எப்படி அங்கீகரிக்க முடியும்?

**ராஜன்:** உண்மைதான் மாஸ்ரர்! ஆனால் நீண்டகாலத்தில் ஏற்படப்போகும் மனிதவள இழப்பைத் தவிர்க்கும் நோக்கில், எமது சமூகம் சில நெருக்கடிகளை, அசௌகரியங்களைச் சந்திப்பதும் தவிர்க்க முடியாததுதான். இராணுவத்தால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களையும்', இராணுவ வெளியேற்றத்தையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக்கொள்ளக்கூடாது!

எமது மக்கள் மத்தியில் இருந்த குறுந்தேசியவாதப் போக்குத்தான், பலாலியிலும் ஆனையிறவிலும் இருந்த இராணுவத்தை வீட்டு வாசலுக்கு கொண்டுவந்தது என்ற விசயம் எல்லாரும் அறிந்ததுதான்!

அதேநேரத்தில், 2013 ஆகஸ்டில் நான் புதுமாத்தளன் சென்றபோது, இராணுவ முகாமுக்கு அருகில் நின்ற பெண்களிடம் 'நீங்கள் யாருக்கு வாக்களிப்பீர்கள்?' என்று கேட்டபோது, 'ரிஎன் ஏக்குத்தான் வாக்களிப்போம்' என்று உறுதியாகச் சொன்ன அப்பெண்களிடம், 'இராணுவத்தால் உங்களுக்குத் தொல்லைகள் இருக்கிறதா?' என்று கேட்டபோது 'அப்படியொரு தொல்லையும் இல்லை' என்று மறுத்ததையும் இங்கு நினைவுகூரலாம்!

இராணுவம் முழுக்க முழுக்க சுத்தமானது எண்டு சொல்லி சேட்டிவிக்கற் குடுப்பது இங்கு எனது நோக்கமல்ல! முன்னாள் போராளிகளைப் பாதுகாப்பதும், தமிழ்ச் சமூகத்தில் ஜனநாயக வழிமுறையைக் கொண்டுவருவதும்தான் இங்கு பிரதான பிரச்சினை! அதற்கு தமிழ் தீவிரவாதக் குழுக்களினால் எழக்கூடிய அச்சுறுத்தல் நடவடிக்கைகளை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தவேண்டும் என்பதுதான் இங்கு பிரதான விடயம்!

தமிழர்களைப் பொறுத்தவரை இந்தக் காலகட்டத்தில் இந்தப் பாதைக்கூடாகத்தான் செல்ல முடியும்!

# திக்கம் வடிசாலை விவகாரம்;

# பாதிப்பை தடுக்க போராடுவோம்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையை தென் பகுதி கம்பனிக்கு தனியாக வழங்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிடவேண்டும் இல்லையெனில் அந்தத்திட்டத்திற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை அணிதிரட்டி போராட்டம் நடத்துமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வடமாகாணசபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் அவர் நடாத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

1977ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இராசலிங்கத்தின் முயற்சிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தலா ஒவ்வொரு இலட்சம் ரூபா மூலதனத்தைக் கொண்டு இது உருவாக்கப்பட்டது. என்று தெரிவித்த அவர் ஆரம்பத்தில் தெங்கு பனம்பொருள் கொத்தணியிடம் நிர்வாகம் இருந்து வந்தது. பின்னர் 2001ஆம் ஆண்டில் அன்றைய அமைச்சர் மகேஸ்வரனினால் பனை அபிவிருத்திச்சபைக்கு அது கையளிக்கப்பட்டு மீண்டும் கொத்தணியிடம் நடாத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் இப்போது பனை அபிவிருத்திச்சபை நடாத்திவருகின்றது. இந்நிலையில் அரசாங்கம் தென்பகுதி தனியாருக்கு விற்கும் திட்டத்தை வரைந்துள்ளது. இதற்கு நாங்கள் எங்களது கடுமையான ஆட்சேபனையைத் தெரிவிக்கின்றோம். இந்த வடிசாலையில் ஏற்கனவே ஐந்த கோடி ரூபா பெறுமதியான ஸ்பிறிற் அங்கே இருக்கின்றது. 22 தொழிலாளர்கள் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டிருக்கின்றனர். தமிழ் மக்களது இந்த வளம் தொடர்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் 35 ஆயிரம் குடும்பங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் இவர்களது வாழ்வாதாரத்தை இல்லாது செய்துவிடும் என்றும் தெரிவித்த சிவாஜிலிங்கம் ஏற்கனவே யுத்தம் காரணமாக பனை வளம் அழிக்கப்பட்டிருக்கும் நிலையில் இதனை அனுமதிக்க முடியாது. அரசாங்கத்தை பார்த்துக்கேட்கின்றோம். இந்தத் திட்டத்தைக்கைவிடுங்கள் வேண்டுமானால் பனை அபிவிருத்திச் சபையே நடாத்தட்டும் அதைவிடுத்து தென்னிலங்கை தனியார் கம்பனிக்கு தாரை வார்க்க முயற்சி எடுக்கப்படுமேயானால் தீவிரமான போராட்டங்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு முன்னெடுக்கவேண்டிவரும் என்றும் சிவாஜில்ஙகம் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

### இந்திய-...

இந்தநிலையில், கொழும்பில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று ஜெயலலிதா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்

இதேவேளை, இலங்கையின் கடற்பரப்புக்குள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டின் பேரில் 30 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்டதாக இலங்கைக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

### பொருளாதாரத்...

தொடர்பேச்சுக்களின் இடையே செய்தியாளர்களிடம் பேசும் போதே பிஸ்வால் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

இவ்விவகாரம் தொடர்பாக பிஸ்வால் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் சிரேஷ்ட இராஜதந்திரிகளுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆதரவற்ற மூதாட்டிக்கு கைகொடுத்தது வயோதிபர் இல்லம்

(திருநெல்வேலி)

இரண்டு ஆண்பிள்ளைகள் இருந்த நிலையிலும் எவராலும் கவனிப்பாரற்றுக் கைதடி அரச முதியோர் இல்லத்தில் வயோதிபத் தாய் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நாவலர் வீதியைச் சேர்ந்த நேசதுரை புஷ்பசுலோசனா (வயது -60) என்னும் இப் பெண்ணுக்கு ஒரு பிள்ளை கனடாவிலும், மற்றையவர் வன்னியிலும் வாழ்ந்து வருகின்றனர். 1998ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்ற மகனிடமிருந்து. எந்தத் தொடர்பும் கிடைக்கப்பெறவில்லை. அதே மாதிரி மற்றைய மகனுடனும் தொடர்பில்லை இவரது கணவனிடமிருந்தும் தகவல்கள் இல்லை. உறவினர்களும் ஏறெடுத்துப் பார்க்காததினால் பல இடங்களிலும் அலைந்துதிரிந்த இவ் வயோதிபத் தாய் இறுதியில் செல்வச்சந்நிதிகோவில் சூழலில் தஞ்சமடைந்து அங்கு தங்கி இருந்தார் அங்கிருந்தபோது சுகவீனம் உற்றதினால் இயலாத நிலையில் யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

எவராலும் கவனிக்கப்படாது அவலப்பட்ட இவரை இவ் விடுதியின் வைத்தியர் ஒருவர் இரக்கப்பட்டு கைதடி முதியோர் இல்லத்தில் இணைத்து விட்டுள்ளார்.

கணவனின் நினைவோடும், பிள்ளைகளின், மீதுள்ள பாசப் பிடிப்போடும் இம் மூதாட்டி முதியோர் இல்லத்தில் தற்போது ஏக்கத்துடன் தங்கி உள்ளார். (137)

# இந்திய மீனவர்களுக்கு விளக்க மறியல்

காங்கேசன்துறை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 30 பேரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதவான் ஆர்.சபேசன் உத்தரவிட்டார் என யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையின் கடற்றொழில் பரிசோதகர் பாலசுப்பிரமணியம் ரமேஸ்கண்ணா தெரிவித்தார்.

மேற்படி மீனவர்களை ஊர்காவற்றுறை பதில் நீதிபதி வாசஸ்தலத்தில் நேற்று ஆஜர்ப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இராமேஸ்வரம், இராமநாதபுரம், தஞ்சை ஆகிய பகுதிகளிலிருந்து 8 படகுகளில் வந்த 30 மீனவர்கள் யாழ். தீவுப் பகுதிக்கு அண்மித்த கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்று இரவு காங்கேசன்துறை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ். கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

### தேர்தல்...

2 மயானக் காவலாளிகள், 1 நூலக உதவியாளர், 1 சிற்றூழியர் ஆகிய மொத்தம் 47 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“வடமாகாண தமிழ் பேசும் மக்கள் இன வேறுபாடின்றி, மனிதாபிமான அடிப்படையில் வாழ்கின்றவர்களென உலகம் எம்மை போற்றுமளவிற்கு எமது நடவடிக்கைகள் இருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். அமைச்சர் றிசாட்டும் அவரது இளைய சகோதரர் பாணியில் எம் எல்லோருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பாரென எண்ணுகிறேன்.

கத்தோலிக்க- முஸ்லிம் பிரச்சினை, தமிழர் -முஸ்லிம் பிரச்சினை, சிங்களவர் -முஸ்லிம் பிரச்சினை, சிங்களவர் -தமிழர் பிரச்சினைகளென்று வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பலவிதமான பிரச்சினைகள் எழுவதை நாம் காண்கிறோம்.

அமைச்சர் றிசாட் பதியுதீன் நினைத்தால் அவற்றை நீதி, நியாயமாக தீர்க்கலாமென்பது எனது கருத்து. அதற்குக் காரணம் உலகத்திலுள்ள பலம் வாய்ந்த 500 முஸ்லிம்களில் அவரும் ஒருவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவரது செல்வாக்கை இதிலிருந்து ஊகிக்கலாம்.

இன்று இந்தத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நாம் ஒன்றுசேர்ந்தது போல், தொடர்ந்தும் பல பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சர் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் அடுத்த தேர்தலுக்காக எம்மில் பலர் வேலை செய்கின்றனரே தவிர, இந்தத் தேர்தலில் எமக்கு வாக்களித்தவர்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக எமது நடவடிக்கைகள் அமைகிறதா என்பதில் சந்தேகமாகவே உள்ளது. நாம் அனைவரும் சேர்ந்து ஓர் ஐக்கியமான வடமாகாணத்தை கட்டியெழுப்புவதற்கு உதவியை நாடுகிறோம் என்றார்.

### ஒட்டுசுட்டானில்...

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைகள் இருக்கின்றன.

இதில் புதுக்குடியிருப்பூ் பிரதேச சபையானது, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளையும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 27 கிராம அலுவலர் பிரிவனையும் உள்ளடக்கிய 968 சதுர கிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்டதாகும்.

பெருமளவு பிரதேசத்தினை புதுக்குடியிருப்புப் பிரதேச சபை கொண்டிருப்பதினால் பின்தங்கிய கிராமங்களில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவில்லை என மக்களினால் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இந்தக் கோரிக்கைக்கு அமைவாக கடந்த ஜனவரி மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற வடமாகாண சபை அமர்வின் போது, ஒட்டுசுட்டான் பிரதேச சபையாக உருவாக்கப்பட வேண்டும் என என்னால் தீர்மானம். கொண்டு வரப்பட்டு அது ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி வடமாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை உள்ளூராட்சி அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி அமைச்சு மேற்கொள்ளும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### அமைதியை...

வாறு தெரிவித்தார். இந்த வைபவம் கேகாலை சுதந்திர மாவத்தையில் நடைபெற்றது. சுதந்திரதினத்தின் பிரதான வைபவம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்த மாவத்தையை ஜானதிபதி திறந்து வைத்தார்.

அதிதிகள் வருகையை அடுத்து குதிரைப்படை சகிதம் முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ பிரதான மேடையை வந்தடைந்தார். அவரை பிரதமர் தி.மு.ஜயரத்ன தலைமையிலான குழுவினர் வரவேற்று பிரதான மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று இனங்களையும் சேர்ந்த 110 மாணவிகள் தேசிய கீதமிசைக்க தேசியக்கொடியை ஏற்றிவைத்ததுடன், உயிரிழந்த முப்படையினருக்கும் தேசபிமானிகளுக்கும் இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தப்பட்டன.

அவர் அங்கு நாட்டு மக்களுக்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வரலாற்று புகழ்மிக்க கேகாலையில் 66ஆவது சுதந்திரதினத்தை கொண்டாடுவதையிட்டு பெருமையடைகின்றோம். நாடு அபிவிருத்தி பாதையில் முன்னேறிக்கொண்டிருகின்றது. இவற்றுக்கெல்லாம் பயுங்கரவாதம் ஒழிக்கப்பட்டமையே முக்கியமான காரணமாகும்.

2009ஆம் ஆண்டு மே மாதத்திற்கு பின்னரே வடக்கு மக்கள் சுதந்திரத்தை அனுபவித்துவருகின்றனர். அன்றிலிருந்து இன்றுவரையிலும் ஒரு குண்டுகூட வெடிக்கவில்லை. அவ்வாறு சுதந்திரத்தை வடக்கு மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற நிலையில், வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் மனித உரிமை, ஜனநாயகம் ஆகியவற்றை முன்னிறுத்திக்கொண்டே நாட்டுக்குள் வருகின்றனர்.

நாட்டின் சமாதானத்தை சீர்குலைக்கும் நோக்கில் ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதன் மூலம் நாட்டுக்கு நன்மைகள் ஏற்படப் போவதில்லை.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகம் மறந்துவிட்டது. மிகக் கடுமையான சவால்களுக்கு மத்தியிலேயே சுதந்திரம் வென்றெடுக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உள்ளிட்ட பலரை புலிகள் கொன்றனர். 2009 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வடக்கு மக்கள் முதல் அனைவரும் சுதந்திரத்தை அனுபவித்து வருகின்றனர்.

இந்தச் சுதந்திரத்தை தட்டிப்பறிக்க எவரையும் இந்த அரசாங்கம் அனுமதிக்காது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட உள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை. பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தை பலம் பொருந்திய நாடுகள் புரிந்து கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

### தீவக...

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் எமது கட்சியினூடாக முன்னெடுத்துச் செல்லப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளில் கட்டாயமாக எமது கட்சி இணைப்பாளர்கள் அல்லது அவ்விடத்து மக்கள் பிரதிநிதிகள் தவறாது சமுகமளிக்க வேண்டும். இல்லாதவிடத்து சந்தர்ப்பம் பார்த்து எமது அரசியல் எதிரிகள் எமது ஆதரவாளர்களை திசை திருப்பி விடுவார்கள். எனக்குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் முன்னாள் உறுப்பினர் கமல் கட்சியிலிருந்து முற்று முழுதாக நீக்கப்பட்ட கருத்துக்களையும் விரிவாகக் கூறினார்.

இக்கலந்துரையாடலில் ஊர்காவற்துறை பிரதேசசபைத் தலைவர் ஜெயகாந்தன், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வடமராட்சி பிரதேச இணைப்பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) சாவகச்சேரி நகரசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸான்டர் (சாள்ஸ்), வலிகாமம் மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) காரைநகர் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் காரைநகர் பிரதேச இணைப்பாளருமான கண்ணன் (ரஜனி), மானிப்பாய் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் மானிப்பாய் பிரதேச இணைப்பாளருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் (ஜீவா), கோப்பாய் பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன், ஈ.பி.டி.பியின் கரவெட்டி பிரதேச இணைப்பாளர், இராசதுரை செந்தில்நாதன், ஈ.பி.டி.பியின் சுவிஸ் கிளை முக்கியஸ்தர் ப.திலக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தீவகத்தில் அடிப்படை வசதிகள் நிவர்த்தி; மீள்குடியமர்வோருக்கு வாய்ப்பு



(வலி.மேற்கு)

தீவகம் இயல்புநிலைக்குத் திரும்பியுள்ளது. மக்களின் முன்னுரிமை தேவையறிந்து உட்கட்டுமான அபிவிருத்திகளும் இடம்பெற்று வருகின்றன. எனவே தீவகத்தை சொந்த வசிப்பிடமாகக் கொண்டு தற்காலிகமாக வெளி மாவட்டங்களில் வசிக்கும் அனைத்து வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மக்களும் உடன் மீளக்குடியமர முன்வரவேண்டும்.

இவ்வாறு வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சின்னயா சிவராசா தெரிவித்தார்.

தீவக மக்களின் மீள்குடியமர்வும் பிரதேச அபிவிருத்தியும் எனும் தலைப்பில் இடம்பெற்ற மக்கள் கலந்துரையாடல் வேலணை துறையூரில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துரையாற்றிய சின்னையா சிவராசா (போல்) மேலும் கூறுகையில்,

தீவகம் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச சபைகளைக் கொண்ட பரந்த பிரதேசம். கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற அசாதாரண சூழலினால் மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் உள்ளிட்ட வெளி மாவட்டம், பிற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மக்களின் வீடுகள், வளவுகள், காணிகள் என்பன கவனிப்பாரற்ற நிலையில் பற்றைகளாகவும் புற்காடுகளாகவும் உள்ளன.

உள்ளூராட்சி சபை பொறுப்பேற்ற பின்னர் 55 வீதமான மக்கள் மீள்குடியமர்ந்து சொந்தத் தொழில், விவசாயம் மற்றும் கைத்தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் மீளக்குடியமராத மக்களின் வீடுகள், காணிகளின் பற்றைகளால் அங்கு டெங்கு நுளம்புகள், ஏனைய விலங்குகளின் தாக்கத்தினால் அயலில் உள்ளவர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

எனவே வெளிமாவட்டங்களில் உள்ள தீவக பிரதேச மக்களை குறிப்பாக வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மக்களை மீளக்குடியமருமாறு கோருகின்றேன்.

இன்று மக்களுக்கான மின்சார தேவை வடக்கின் வசந்தத்தின் கீழ் முன்னுரிமை பிரகாரம் முன்னெடுத்து 90 வீதமான பிரதேசங்களுக்கு மின் வழங்கியுள்ளோம்.

குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வுகண்டு எமது பிரதேச சபையின் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி 5 உப அலுவலக பிரதேசங்களுக்கும் குடிதண்ணீர் வழங்கி வருகின்றோம்.

வடக்கின் வசந்தம், புறநெகும திட்டம், கமநெகும திட்டத்தின் கீழ் வீதிகள் புனரமைக்கப்பட்டு அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம்.

பிரதேச சபையும், பிரதேச செயலமும் ஒருங்கிணைந்த முறையில் உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் (ILDP) மூலம் கல்வி, சுகாதாரம், வீதி, குடிதண்ணீர், தொலைத்தொடர்பு, உட்கட்டுமானம், சிறுவர் அபிவிருத்தி, சிறுவர் வைத்தியசாலை, அராலி - வேலணை கடற்பாதை அபிவிருத்தி உள்ளிட்ட முன்வரைபுகளை தயாரித்து வைத்துள்ளோம்.

இவ்வாறான முன்வரைபுகளை வெளிநாட்டவர்கள் மற்றும் எமது அமைச்சுக்களின் ஊடாக முன்னிறுத்தி அபிவிருத்தி செய்யத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 100 மில்லியன் ரூபா எமது பிரதேச அபிவிருத்திக்கு கிடைக்கப்பெற்று உட்கட்டுமான தேவைகள் பூர்த்திசெய்யப்படவுள்ளன எனத் தெரிவித்தார்.

# அடகு நகைகளால் வங்கிகளுக்கு தலையிடி

(யாழ்ப்பாணம்)

வடபகுதி வங்கிகளின் வாடிக்கையாளர்களால் அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத தங்கநகைகளை விற்பனை செய்வதில் வங்கிகள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் படிப்படியாக அதிகரித்து வந்த தங்கத்தின் பெறுமதி கடந்த ஆண்டு பிற்பகுதியில் சடுதியாக குறைந்தது. இதனால் தங்கத்துக்கு அதிக தொகைக்கு அடகு வைத்தவர்கள் அதன் பெறுமதியுடன் வட்டியையும் சேர்த்து செலுத்துவதைவிட புதிய பவுணில் புதிய டிசைன்களில் நகைகளை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினர்.

இதனால் வங்கிகளில் நகைகள் மீட்கப்படவில்லை. அவற்றினை வங்கிகள் விற்பனை செய்யும்போது பலர் அவற்றினை வாங்க பின்நிற்கின்றனர்.

இதற்கு பல காரணங்கள் கூறப்பட்டபோதும், தரம் குறைந்த தங்கம் அல்லது போலியானது இதனாலேயே உரியவர்கள் அதனை மீளப்பெறவில்லை என்ற காரணமே பிரதானமாக உள்ளது.

இவ்வாறாக வங்கிகளில் உள்ள விற்பனை செய்யப்படாத நகைகளை விற்பன்னைக்கு என எழுதி கண்ணாடிப் பெட்டிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை காண முடிகிறது. (54)

# அல்லைப்பிட்டியில் விபத்து; இருவருக்கு படுகாயம்

(யாழ்ப்பாணம்)



நேற்று மாலை 5.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவு நோக்கி சென்று கொண்டிருந்த வடிரக வாகனமும், அதே இடத்திலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றை ஒன்று முந்திச் செல்லும்போது அல்லைப்பிட்டி சந்திக்கு அண்மையில் வடிரக வாகனம் பாதையினை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ம.தயா (வயது - 60) உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வீதிவழியாக வந்த ஆட்டோவில் ஏற்றப்பட்டு வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக அங்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். (21)



# நதீஷாவுக்கு தேர்தலில் வாய்ப்பு

## ஐ.தே.க. அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மேல் மற்றும் தென் மாகாண சபை உறுப்பினர்களான ஷிரால் லக்திலக மற்றும் மைத்திரி குணரத்ன ஆகியோருக்கு இம்முறை வேட்பு மனு வழங்காதிருக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய தலையில் கூடிய வேட்பு மனு குழு இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நடிகை நதீஷா ஹேமமாலிக்கு வேட்பு மனு வழங்க ஐ.தே.க. தீர்மானித்துள்ளது.

# நட்டஈடு கோருகிறார் மங்கள; நற்பெயருக்கு பங்கம் என்று கண்டனம்

(கொழும்பு)

அரசாங்க ஊடகத்திடம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர பத்து பில்லியன் ரூபாவினை நட்டஈடாகக் கோரியுள்ளார்.

அரசாங்க ஊடகங்களின் ஊடாக தமக்கு எதிராக சேறு பூசப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். [illegible] ஹவுஸ் நிறுவனத்திற்கு சொந்தமான இரண்டு பத்திரிகைகள் மிகவும் இழிவான முறையில் தமக்கு எதிராக சேறு பூசல்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். தமது பொறுமைக்கும் ஓர் எல்லை இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த பத்திரிகையின் ஆசிரியர்களிடம் மன்னிப்பு கோருமாறு தாம் கேட்கவில்லை எனவும், அவர்களுக்கு ஊடக ஒழுக்க விதிகள் தெரியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாறாக அவர்களிடமிருந்து தலா ஐந்து பில்லியன் ரூபா பணம் நட்ட ஈடாக கோரத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கம் மற்றுமொரு வழியில் என்னை அமைதிப்படுத்தும் முனைப்புக்களில் தீவிரம் காட்டி வருகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது அரசியல் வாழ்க்கைக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் சில தரப்பினர் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். துறைமுகம் ஒன்றை அமைப்பது தொடர்பில் இலஞ்சம் பெற்றுக்கொண்டதாக தற்போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# உலகம் முழுவதிலும் புற்றுநோய் ஆபத்து உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

கடல் அலை போல புற்றுநோய் அலை உலகெங்கும் பரவி வருவதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் 14 மில்லியன் மக்கள் புற்று நோயால் பாதிக்கப்படுவதாகவும் ஆனால் இந்த எண்ணிக்கை 2035 அளவில் 24 மில்லியனாக உயரும் என்றும் இந்த நிறுவனம் கூறுகிறது.

உலகைப் பாதிக்கும் புற்றுநோயிலிருந்து கிட்டத்தட்ட பாதி அளவை வருமுன் தடுக்கமுடியும் என்று கூறும் உலக சுகாதார நிறுவனம், உடல் பருமன், மது அருந்துதல் மற்றும் புகை பிடித்தல் ஆகியவற்றை சமாளிக்க புதிய முயற்சிகள் வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

புற்று நோய் மருத்துவத்திற்கான செலவு கட்டுப்பாட்டை மீறி அதிகரிப்பதாக உலக சுகாதார நிறுவனத்தின் சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது.

புற்றுநோய் பரவுவதால் ஏற்படும் மேலதிகச் செலவு வளர்ந்து வரும் நாடுகளினாலேயே சமாளிக்க வேண்டியிருக்கும் என்றும் அது கூறுகிறது.

2014 ஆம் ஆண்டுக்கான புற்றுநோய் குறித்த அறிக்கையை வெளியிட்ட உலக சுகாதார நிறுவனம், தடுக்கப்படக்கூடிய புற்றுநோய்க்கான காரணிகளாக புகை பிடித்தல், கிருமித்தொற்று, மது அருந்துதல், உடல் பருமன் மற்றும் உடற்பயிற்சி செய்யாதிருத்தல், சூரிய ஒளி மறறும் மருத்துவ ஸ்கேன்களால் ஏற்படும் கதிரியக்கப் பாதிப்பு, காற்று மாசு, மற்றும் பிற சுற்றுச்சூழல் காரணிகள், தாய்மைப் பேறு தாமதமாவது, குழந்தைகள் அதிகம் பெறாமல் தவிர்ப்பது, தாய்ப்பால் தராமலிருப்பது ஆகியவைகளைப் பட்டியலிடுகிறது.

பெரும்பாலான நாடுகளில் மார்பகப் புற்றுநோய்தான் பெண்கள் மத்தியில் புற்றுநோய் தோன்றுவதற்கு மிகப் பொதுவான காரணம். ஆனால், ஆபிரிக்காவின் பல பகுதிகளில், பெண்களுக்கு அதிகம் செர்விக்கல் கான்சர் எனப்படும் புற்றுநோயே அதிகம் காணப்படுகிறது.

புற்று நோய்க்கும் மது அருந்துவதற்கும் இடையேயான தொடர்பைப் பற்றிக் கூறும், இந்த அறிக்கையைத் தயாரித்தவர்களில் ஒருவரான, அவுஸ்ரேலியாவின் நியூ சௌத் வேல்ஸ் பல்கலைக்கழகப் பேராசியர் டாக்டர் பெர்னார்ட் ஸ்டூவர்ட், மனித நடத்தைதான் பல வகைப் புற்று நோய்கள் ஏற்படுவதற்குக் காரணம் என்றார்.

## கைதிகள் விடுதலை

66 சுதந்திர தினமான நேற்று பொரளை, வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து 1233 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 1194 ஆண்களும் 39 பெண்களும் அடங்குகின்றனர். நாடாளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகளில் 36 சிறைச்சாலைகளிலிருந்தே இந்த கைதிகள் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர் கே.பீ.குலதுங்க தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் 29 பேருக்கு பிடியாணை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 29 பேருக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது என முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர். பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட குறித்த 29 பேரும் நீதிமன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

எனினும் இவர்கள் வழக்கு விசாரணைகளில் ஆஜராகாமையினாலேயே நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். குறித்த 29 பேரையும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என முள்ளியவளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# "மைக்ரோசொப்ட்" பணிப்பாளராக இந்திய நிபுணர் நியமனம்

(கொழும்பு)

'மைக்ரோசொப்ட்' நிறுவனத்தின் புதிய பணிப்பாளராக இந்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஏற்கனவே இப்பதவியில் இதுவரை இருந்தவரான பில் கேட்ஸ் பதவி விலகியதைத் தொடர்ந்து இவர் புதிதாக நியமனம் பெற்றிருக்கிறார்.

இந்தியாவைச் சேர்ந்த சத்யா நடேலா என்பவர் இப்பதவிக்காக நியமிக்கப்பட்டுள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் கூறியுள்ளது. இப்பதவியை வகித்த பில்கேட்ஸ் பதவி விலகியுள்ள நிலையில் புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 பெப்ரவரி 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.